

கூடிய வெப்பநிலை 28 °c

குறைந்த வெப்பநிலை 24 °c

மழையுடன் கூடிய காலநிலை எதிர்பார்க்கப்படுகின்றது.



சிக்குமா இலங்கை? பக். 10


சமாதானம் வேண்டி பக். 11


வென்றது யாழ். மத்திய கல்லூரி பக். 26


படைத்த டோனி பக். 27



# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் : 58

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.30
கொழும்பு : ரூபா.30

சுடர்: 29 கதிர்: 068 வள்ளுவர் ஆண்டு: 2045 தை 20, ஞாயிறு 02.02.2014



உதயன் அங்காடி விளம்பர சிறப்பிதழ் உள்ளே


# இலங்கையை அடியோடு கைவிட்டது இந்திய அரசு

### பீரிஸிடம் குர்ஷித் நேரில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.2
ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணையைத் தோற்கடிக்க எந்த வகையிலும் உதவ முடியாது என்று இந்தியா கைவிரித்துள்ளது.
இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருவதாலேயே, தமிழர்களின் உணர்வுகளைக் காயப்படுத்த விரும்பாத இந்திய மத்திய அரசு, இலங்கைக்கு உதவ மறுத்துள்ளது என 'எக்கணமிக் ரைம்ஸ்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
கடந்த புதன்கிழமை புதுடில்லியில், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்

25 ஆம் பக்கம் பார்க்க

## 24 வருடங்களின் பின் வாராந்தச் சந்தை

மன்னார், பெப் 2
மன்னார் தினச் சந்தையாக இயங்கி வந்த வாராந்த சந்தை சுமார் 24 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் வாராந்த சந்தையாக நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.
மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் நேற்றுக் காலை 9.15 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எம்.ஏ.துரம், மன்னார் நகர சபையின் செயலாளர் லேனாட் பிறிட்டோ, மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ்

25 ஆம் பக்கம் பார்க்க

## காட்டுப் பகுதியில் சடலம் மீட்பு

அக்கராயன், பெப்.2
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பொன்நகர் கிராம காட்டுப்பகுதியில் உருக்குலைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் அக்கராயன் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டது.
காட்டுக்கு விறகு சேகரிக்க சென்ற ஒருவர் வழங்கிய தகவலையடுத்து சம்பவ

25 ஆம் பக்கம் பார்க்க

# இனப்படுகொலை, போர்க் குற்றத்தை அடக்கிய சுயாதீன விசாரணை தேவை

### யாழ். சிவில் சமூகம் அமெரிக்காவிடம் ஆணித்தரமாக வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப்ரவரி 2
ரோம் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இனப்படுகொலை, போர்க் குற்றம், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்ற மூன்று விடயங்களையும் உள்ளடக்கியதாகவே இலங்கை அரசுக்கு எதிரான சர்வதேச விசாரணை அமைய வேண்டும் என்றும், இலங்கை அரசுக்கு இனியும் கால அவகாசம் வழங்கப்படக்கூடாதெனவும் தமிழ் சிவில் சமூகத்தினர் யாழ்ப்பாணத்தில் வைத்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வாலிடம் கோரிக்கை விடுத்தனர்.



ஆயருடன் அமெரிக்கக் குழுவினர்

யாழ். மாவட்டத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்த உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே.சிசன் ஆகியோரைக் கொண்ட குழுவினர், யாழ்.மறை மாவட்ட ஆயர் தோமஸ்சவுந்தரநாயகம் ஆண்டகையை ஆயர் இல்லத்தில் வைத்துச் சந்தித்துக் கலந்துரையாடினர்.
சுமார் ஒரு மணி நேரம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
சந்திப்பின் முடிவில் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களிடம் ஆயர் தெரிவித்த

25 ஆம் பக்கம் பார்க்க

# ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலமே பாதிப்புற்ற தமிழருக்கு நியாயம்

### முன்னாள் உதவிப் பொதுச் செயலர் தெரிவிப்பு

லண்டன், பெப்.2
இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குத் தேவையான நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க, அது தொடர்பில் இறுக்கமான தீர்மானம் இயற்றக்கூடிய தளம் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையே என்று ஐ.நா. முன்னாள் உதவிப் பொதுச் செயலாளர் டெனிஸ் கலிடே தெரிவித்துள்ளார்.
தமிழர் தாயகத்தில் தமிழர்களின் பூர்வீக நில அபகரிப்புக்கு எதிரான மாநாடு பிரிட்டனில் ஆரம்பமாகியது. பிரிட்டன் நாடாளுமன்றத்தில் 14 ஆம் இலக்க அறையில் லண்டன் நேரப்படி நேற்றுக் காலை 10 மணிக்கு இந்த மாநாடு ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.
பிரிட்டன் தமிழர் பேரவை

25 ஆம் பக்கம் பார்க்க



உதயன் அலுவலகத்துக்கு வருகைதந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்செல் ஜே.சிசன் ஆகியோரை உதயன் நிர்வாக இயக்குநரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

## சர்வதேச விசாரணையை இந்தியா கோரவேண்டும்

### டெசோவிலும் நேற்றுத் தீர்மானம்

கொழும்பு, பெப். 2
இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தக் கோரி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தியா பிரேரணையொன்றைக் கொண்டு வரவேண்டும் என வலியுறுத்தித் தமிழக திராவிட முன்னேற்றக் கழகத் (தி.மு.க) தலைவர் கருணாநிதி தலைமையில் நேற்று இடம்பெற்ற டெசோ கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
தமிழ் ஈழ ஆதரவு அமைப்பான டெசோவின் கலந்துரையாடல் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது.
தி.மு.க தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமா

25 ஆம் பக்கம் பார்க்க

## கொன்ஸ்டபிள் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், பெப். 2
மோட்டார் சைக்கிளில் சென்ற தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகிப் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். நாரந்தனை வடக்கில் நேற்று முற்பகல் 11மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

25 ஆம் பக்கம் பார்க்க

## பல தரப்பினரையும் சந்தித்தார் நிஷா

யாழ்ப்பாணம், பெப். 2
யாழ். மாவட்டத்துக்கு முதற் தடவையாக நேற்று வருகை தந்த, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், 'உதயன்' அலுவலகத்துக்கும் வருகை தந்து கலந்துரையாடினார்.
இலங்கைக்கு மூன்று நாள் பயணமாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொழும்புக்கு வந்த உதவிச் செயலர் நிஷா, கொழும்பில் வைத்து அரச தரப்பினர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்து விட்டு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தார்.
பலாலி விமான நிலையத்துக்கு விசேட விமானத்தில் வந்திறங்கிய உதவிச் செயலர் நிஷா தலைமையிலான குழுவினர் முதலில்

25 ஆம் பக்கம் பார்க்க

# கடத்தப்பட்டோர் புதைக்கப்பட்டதாகக் கருதப்படும் இடங்களை அடையாளம் கண்டு தோண்டுங்கள்

### ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் நல்லாட்சிக்கான மக்கள் கூட்டமைப்பு கோரிக்கை


யாழ்ப்பாணம். பெப்.2

கடத்தப்பட்டோர் புதைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும் இடங்களை அடையாளங் கண்டு அவற்றைத் தோண்டுவதோடு கடத்தல், கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களை அடையாளங் கண்டு விசாரணைக்கு உட்படுத்தி உரிய தண்டனை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.

இவ்வாறு நல்லாட்சிக்கான மக்கள் கூட்டமைப்பின் தலைமையிலான கூட்டமைப்பு காணாமற் போனவர்கள் தொடர்பான விபரங்களைப் பதிவு செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவினரிடம் கோரியுள்ளது. அதனை நிறைவேற்றுவதாக ஆணைக்குழுவின் செயலாளர் கூறியதாக நல்லாட்சிக்கான மக்கள் கூட்டமைப்பின் தலை மையிலான கூட்டமைப்பைச் சேர்ந்த நஜா மொஹமட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; அந்த ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற சந்திப்பில் எமது கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. இதில் கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டவர்களின் எச்சங்களை அடையாளங்கண்டு அவர்களுக்கான மரணச் சடங்குகளை உரிய சமய ஆசாரங்களின் அடிப்படையில் மேற்கொள்ளல் வேண்டும். கடத்தப்பட்டு கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு உரிய நட்ட ஈடு வழங்கப்படுதல் வேண்டும் என்று நாம் கோரியுள்ளோம்.

இதனை எற்றுக் கொண்ட ஆணைக்குழுவின் செயலாளர், பொதுவாக ஆணைக் குழுக்கள் தொடர்பில் மக்களிடம் நம்பிக்கையற்ற தன்மை காணப்படுகிறது. எனினும் தமது ஆணைக்குழு அமைக்கப்பட்ட தன் நோக்கத்தை முனைப்புடன் செயற்படுத்தி வருகிறது. எனவே சமூக செயற்பாட்டாளர்கள் ஆணைக்குழுவுடன் சேர்ந்து செயற்படல் வேண்டும். அதன் போதே பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவித்தார் - என்று கூறினார். (த-4)



தெல்லிப்பழை கிழக்கு, சித்தியம்புளியடியில் உள்ள வீடொன்றின் முற்றத்தில் கடந்த வியாழக் கிழமை பிற்பகல் படம் எடுத்தாடியது வெள்ளை நாக பாம்பு .இந்த பாம்பு பாதுகாப்பாக ஏழாலை பெரிய தம்பிரான் ஆலயத்தில் விடப்பட்டுள்ளது. (ஐ-86)

## உருளைக்கிழங்கு கொள்வனவில் நேற்றும் ஏமாற்றியது சதொச

### விவசாயிகள் கடும் விசனம்

சதொச நிறுவனத்தினால் நேற்று சனிக்கிழமை உருளைக்கிழங்கு கொள்வனவு செய்யப்படும் என காத்திருந்த விவசாயிகள் இரண்டாவது தடவையாகவும் ஏமாற்றத்துக்கு உள்ளாகியுள்ளார்கள்.

ஏற்கனவே கடந்த வாரம் 70 ரூபா விலையில் உருளைக் கிழங்கு சதொச நிறவனத்தினால் கொள்வனவு செய்யப்படும் எனக் காத்திருந்து அலுத்துப்போன நிலையில் தம்புள்ளைச் சந்தைக்கு அனுப்பி உருளைக்கிழங்கை சந்தைப்படுத்தினார்கள் விவசாயிகள்.

மனம் சோராது உருளைக் கிழங்கு உற்பத்தியாளர் சங்கம் மேற்கொண்ட நடவடிக்கை கள் காரணமாக இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் உற் பத்தியாளர்களிடம் இருந்து உருளைக் கிழங்குகொள்வனவு இடம்பெறும் எனவும். நேற்று சனிக்கிழமை உருளைக் கிழங்கைக் கொள்வனவு செய்தால் சதொச களஞ்சியத்தில் ஒப்படைக்க முடியாது என்பதால் நேற்று நடைபெறவிருந்த உருளைக்கிழங்கு கொள்வனவு நிறுத்தப்பட்டதாகவும் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (த-86)

## குறுந்திரைப்படம் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.2

ஜே.ம.ஜோசப்மேரியின் எழுத்து. எண்ணம் இயக்கத்தில் உருவாக்கம் பெற்றுள்ள "அப்பாவின் மிதிவண்டி" குறுந்திரைப்பட வெளியீடு நாளை திங்கட் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாச்சிமார் கோயிலடி செல்வம ஹால் மண்டபத்தில் து.ஜீவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் வண.கலாநிதி டி. எஸ்.சொலமன் அடிகள், நிறைவாழ்வு மையத்தின் இயக்குநர் கலாநிதி தயாளினி தியாகராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், மானிப்பாய் பங்குத் தந்தை அருள்திரு ஜேம்ஸ் அடிகள், யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளர் க.ஞானபாஸ்கரன், ஹரிஹரன் பிறிண்டேர்ஸின் முகாமைத்துவப் பணிப்பாளர் சி.ராஜ்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் செயற்றிறன் அரங்க இயக்குநர் தே.தேவானந், திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் ஜோ.ஜோன்சன் ராஜ்குமாரும் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். ஆர்வ முள்ளவர்கள் நிகழ்வில் கலந்துகொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-10)

## சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்களுக்கு அதே இடத்தில் காணி வழங்க ஏற்பாடு

வவுனியா. பெப்.2

வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி நிலைய மக்களுக்கு அதே இடத்தில் காணி வழங்குவதற்கு தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும்என்றுவட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி வவுனியா சிதம்பரபுரம் நலன்புரி முகாமுக்கு சென்றிருந்த அமைச்சர் மக்களின் நிலைமைகளை நேரடியாகப் பார்வையிட்டு அவர்களு டன் கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 32 வருடங்களாகக் குறித்த நலன்புரி முகாமில் தற்காலிக வீடுகளை அமைத்து வாழ்ந்து வரும் 180 குடும்பங்களை அங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது தொடர்பாகத் தகவல் அறிந்த மக்கள் வட மாகாண சுகாதார அமைச்சருக்கு இது தொடர்பாக தெரியப்படுத்தியதை அடுத்து குறித்த மக்களு டன் அமைச்சர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்த நலன்புரி முகாமில் வசிக்கும் குடும்பங்களை அவர்களின் விருப்பத்துக்கு மாறாக வேறு இடங்களில் குடியமர்த்த முடியாது. உள்ளக இடம் பெயர்ந்தோருக்கும் இந்தியாவில் இருந்து மீளத் திரும்பியவர்களுக்கும் என இந்த இடைத் தங்கல் முகாம் அமைத்துக் கொடுக்கப் பட்டுள்ளது.

இந்த முகாமில் தங்கியுள்ள 180 குடும்பங்கள் அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வரும் நிலையில் வேறு இடங்களில் குடியமர்த்துவது இவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் துறை சார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவெடுப்பதாக அமைச்சர் அங்கு கூறியுள்ளார். (த-14-402)

## கஞ்சா புகைத்த சந்தேகத்தில் நான்கு ஊழியர் இடைநிறுத்தம்

### யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிரடி

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றும் கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட நிறுவனத்தைச் சேர்ந்த மேலும் நான்குபேர் கஞ்சா புகைத்தலுடன் தொடர்புடைய குற்றச் சாட்டில், பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்தது.

கடந்த 23 ஆம் திகதி இரவு வைத்தியசாலையின் புதிய கட்டடத்தில் மொட்டை மாடியில் கஞ்சா போதைப் பொருள் புகைத்துக் கொண்டிருந்த வேளை வைத்தியசாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் மேற்பார்வையாளராக உள்ள திருகோணமலையைச் சேர்ந்தவரும் மற்றும் யாழ். நல்லூரைச் சேர்ந்த ஒருவர் என இரண்டு பேரை வைத்தியசாலைப் பொலிஸார் மற்றும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் இணைந்து கையும் மெய்யுமாகப் பிடித்தனர்

பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்திய குற்றத்துக்காக அவர்களிடம் விசாரணை முன்னெடுக்க முடியும் என்று யாழ்.பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் பெரேரா தெரிவித்திருக்கிறார்.

கஞ்சா போதைப் பொருளை விநியோகித்ததாகக் கூறப்படும் யாழ். நல்லூரைச் சேர்ந்த சந்தேக நபரை சில நாள்களுக்கு முன்னர் கைது செய்துள்ளதாகவும் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் கைதான ஊழியர் குறித்த, பாதுகாப்பு நிறுவனத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். நல்லூரைச் சேர்ந்தவரே கஞ்சா போதைப் பொருளை விநியோகித்தார். அவருக்கு வேறு நபர்களே கஞ்சா வழங்கியுள்ளனர் என்று தெரிவித்த பொலிஸார் அந்த விநியோகஸ்தர்கள் யார்? எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள்? என்பது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது. அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலையில் பல நாள்களாக இந்தச் சட்டவிரோத செயல் இடம்பெறுவதாக தெரியவந்த நிலையில் இருவரும் கைது செய்யப்பட்டனர். அதனுடன் தொடர்புடைய குற்றச்சாட்டிலேயே யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்தியசாலை பாதுகாப்புப் பணியில் உள்ள மேலும் நான்குபேர் இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தரப்புத் தெரிவித்தது. (ஐ-4)

## லஞ்ச ஊழலைக்கட்டுப்படுத்த வவுனியாவில் கருத்தரங்கு

வவுனியா.பெப்.02

லஞ்சம் பெறும் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும் வகையில், வவுனியா மாவட்டத்தில் இயங்கி வரும் லஞ்ச ஊழல்களுக்கான ஆலோசனை மையம் வவுனியா மாவட்டத்திலுள்ள பொலிஸாருக்கு விசேட கருத்தரங்கு ஒன்றை நேற்று முன்தினம் நடத்தியுள்ளது.

வவுனியா தம்பா விடுதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வு வவுனியா மாவட்ட லஞ்ச ஊழல்களுக்கான ஆலோசனை மையத்தின் பொறுப்பதிகாரி ரவீந்திர டி. சில்வா தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரமசிங்க மற்றும் லஞ்ச ஊழல் ஆலோசனை மையத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர்.

கருத்தரங்கில் வவுனியா மாவட்டத்தில் லஞ்சம் பெறும் நடவடிக்கை, திணைக்களங்கள் ஊடாகவும் பொது நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் ஊடாகவும் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-421)

## யாழ்ப்பாணம் - குப்பிளானுக்கு சிற்றூர்திச் சேவை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.2

பொது மக்களின் கோரிக்கைக்கு அமைவாக யாழ்ப்பாணம்-குப்பிளானுக்கான 770 இலக்க வழி தனியார் பஸ் சேவை நேற்றுத் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது. தினமும் 31 சேவைகளை மக்கள் பெற்றுக் கொள்ளலாம். என்று யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை தனியார் பஸ் சங்கத்தலைவர் அ.றொபின்சன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக தினமும் யாழ்ப்பாணத்திலிருந்து குப்பிளானுக்கு 13 சேவைகளும் குப்பிளானில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு 12 சேவைகளுமே இடம் பெற்று வந்தன. இவை ஒரு மணிநேர இடைவெளியில் இடம்பெற்றதால் மக்கள் பல் வேறு சிரமங்களை எதிர் கொண்டுவந்தனர். எனவே சேவையை அதிகரிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கமைவாக நேற்று முதல் மேலதிகமாக ஒரு பஸ் இணைக்கப்பட்டு,மேலும் 6 சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய குறுகிய நேர இடைவேளியில் இனி பஸ் சேவை இடம்பெறும்-என்றார். (ஐ-14)

## குற்றம் புரிந்த நான்கு பேர் சமூக வேலைகளில் ஈடுபடுவர்

தென்மராட்சி, பெப்.2

சிறு குற்றங்கள் புரிந்த மூவரும் சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த நபரும் சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவு மூலம் சமூக வேலைகளில் ஈடுபட சாவகச்சேரி நீதிமன்றினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிடப்பட்டது.

சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த நபருக்கு எதிராக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரித்த நீதிவான், எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 25 ஆயிரம் ரூபா விதித்து சமுதாயம் சார் சீர்திருத்தப் பிரிவு மூலம் ஆறு மாத காலத்தில் 80 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபட வேண்டுமெனவும்,

18 தேங்காய் திருடிய இருவருக்கு ஆறு மாத காலத்தில் 80 மணித்தியாலயங்களும், மருத்துவமனை வளாகத்தில் மதுபோதையில் குழப்பம் விளைவித்த நபருக்கு மூன்று மாத காலத்தில் 40 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபட வேண்டுமெனவும் உத்தரவிட்டார். (த-9)

## 'காப்பெற்'றாக மாறும் குளப்பிட்டி வீதி

வலி.தென்மேற்கு.பெப்.02

நல்லூர் பிரதேசத்துக்கும் வலி. தெற்கு பிரதேசத்துக்கும் ஊடாகச் செல்லும் குளப்பிட்டி வீதி 'காப்பெற்' வீதியாக மாற்றியமைக்கப்படவுள்ளது. இதற்கான வேலைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை வீதியையும் பொன்னாலை-மானிப்பாய் வீதியையும் இணைக்கும் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான குளப்பிட்டி வீதியை 'காப்பெற்' வீதியாக அபிவிருத்தி செய்ய முன்வந்துள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தற்பொழுது முதற்கட்டமாக வீதியில் இரு மருங்கிலும் குவிந்துள்ள மண்ணை கனரக வாகனங்கள் மூலம் அகற்றி வீதியைச் செப்பனிடுவதில் ஈடுபட்டுள்ளது. (ஓ-115)




யாழ்ப்பாணத்தின் வீதியொன்றின் நடுவே அமைந்துள்ள மேடையில் கடுமையான வெயிலையும் பொருட்படுத்தாது ஆழ்ந்த தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் குடிமகன் ஒருவர்.

## அம்பாள்புரம் கிராம மக்களின் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு

*அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்படவுள்ளன*

மன்னார், பெப்.2

மாந்தை கிழக்குப் பிரதேசம் அம்பாள்புரத்தைச் சேர்ந்த 200 பேரின் காணிப் பிரச்சினைக்கு காணிக் கச்சேரி மூலம் தீர்வு காணப்பட்டுள்ளது.

மேலும் இவர்களின் காணிகளுக்குரிய அனுமதிப் பத்திரங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

மாந்தை கிழக்குப் பிரதேசத்திலுள்ள 15 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் மீள்குடியமர்ந்த குடும்பங்களில் அநேகமானவை காணிகளுக்குரிய ஆவணங்கள் இல்லாத நிலையில் பொது நிறுவனங்களினால் வழங்கப்படும் சலுகைகளையும் இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மக்கள் பிரதேச செயலரின் உதவியை நாடியிருந்தனர்.

இதையடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கமைய மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக காணிக் கச்சேரி மூலம் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு வருகின்றது.

கொல்ல விளாங்குளம், சிராட்டிகுளம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ஏற்கெனவே காணிக் கச்சேரிகள் வைக்கப்பட்டு நூற்றுக் கணக்கான மக்களின் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை அம்பாள்புரம் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பொது நோக்கு மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற காணிக் கச்சேரி மூலமாக இந்த 200 பேரின் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இவர்களின் காணிகளுக்கான ஆவணங்கள் மிக விரைவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை 2006 ஆம் ஆண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் காணிக் கச்சேரிகள் நடத்தப்பட்டு நில அளவையாளரினால் காணிகள் அளந்து பிரிக்கப்பட்ட போதிலும் இது வரை எவருக்கும் காணிகளுக்குரிய ஆவணங்கள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-115)

## பெப்.28 வரை ஆதனவரி செலுத்தலாம்

தென்மராட்சி, பெப்.2

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் இந்த வருடத்துக்கான ஆதனவரி செலுத்துவதற்கு எதிர்வரும் 28 ஆம் திகதி வரை காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாக தலைவர் இ.தேவ சகாயம் பிள்ளை அறிவித்துள்ளார்.

பத்து வீத கழிவுடன் இந்த வருடத்துக்குரிய ஆதனவரி செலுத்துவதற்கு இந்த வாரம் பெருமளவு வரியிறுப்பாளர்கள் வருகை தந்ததால் பலர் தமது ஆதனத்துக்குரிய வரியைச் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதால் காலநீடிப்பு வழங்குமாறு கோரியிருந்தனர்.

இதே வேளை கழிவுடன் ஆதன வரி செலுத்துவதற்கான கால அவகாசம் நேற்றுடன் முடிவடைந்ததால் பெருமளவு வரியிறுப்பாளர்கள் வந்திருந்தனர். (வ-9)

## குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டதால் அவலம்

*கிளிநொச்சி பொன்நகர் கிராமத்தில்*

கிளிநொச்சி,பெப்.2

கிளிநொச்சி பொன்நகர் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த குடிதண்ணீர் விநியோகத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதால் இங்கு வாழ்கின்ற 72 குடும்பங்கள் தமது குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்நகர் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்திய வீடுகளில் வாழ்ந்து வருகின்ற 72 குடும்பங்களுக்கும் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையினால் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப் பட்டதால் இந்தப் பகுதி மக்கள் அலைந்து திரிகின்ற அவல நிலை காணப்படுகின்றது. அத்துடன் இந்தக் கிராமத்துக்குச் செல்கின்ற குடியிருப்பு வீதிகளை குறுக் கறுத்துச் செல்லும் புகை யிரத வீதி உரிய முறையில் புனரமைக்கப்படாமையினால் இதன் ஊடாகப் பயணிப்பதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது.


இந்த விடயம் தொடர்பாக கரைச்சிப் பிரதேச சபையிடம் தொடர்பு கொண்டபோது பவுசர் பழுதடைந்தமையினால் விநியோகம் நிறுத்தப்பட்டதாகவும் விரைவாக வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் இ.கிருஸ்ணகுமார் தெரிவித்துள்ளார். (க-55)

## தொழில் முயற்சியாண்மை ஊக்குவிப்புச் செயலமர்வு

தென்மராட்சி, பெப்.02

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்ட (யு.என்.டி.பி) நிறுவனத்தினர் கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில்வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளுக்கான முயற்சியாண்மையை ஊக்குவிக்குவிப்பதற்கான செயலமர்வை அண்மையில் கரைச்சி பிரதேச செயலகத்தில் நடத்தினர்.

வடமாகாணத்தில் நிறுவனத்தின வாழ்வாதார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் 18 இற்கும் 45 இற்கும் இடைப்பட்ட வயதினருக்கு வியாபார முயற்சி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களுக்கு வங்கிகள் ஊடாக தொழில் வாய்ப்பை மேம்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டது.



முதல் கட்டமாக பூநகரி, கரைச்சி ஆகிய பிரதேசங்களிலிருந்து தலா 25 பேரைத் தெரிவு செய்து திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளனர்.

கரைச்சிப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.பி.அமலராசா தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் நிறுவன மாவட்ட இணைப்பாளர் எஸ்.இராசரத்தினம் வளவாளராகக் கலந்து கொண்டு நடத்தினார். (வ-9)


## பாதுகாப்புப் பணியாளர்களுக்கான பணிநிலை வேண்டுகை

பாதுகாப்புப் பணியாளர் பதவிக்குத் தகுதியும் அனுபவமும் உடைய ஆண், பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதர சித்தியுடன்.

திடகாத்திரமான உடல்வாகும்.

தகுந்த தேகாரோக்கியமும் கொண்டவர்கள்.

சுய விவரக் கோவையுடன்

நேரில் வரவும்.

அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

காலம் : இன்று (02.02.2014)
ஞாயிற்றுக்கிழமை.

நேரம் : காலை 9 மணி

முகாமையாளர்
மனித வளங்கள் பிரிவு
உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்



(C/11380)

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்


## பால் கொள்வனவு செய்வதற்கு நடமாடும் சேவை நிலையங்கள்

யாழ்ப்பாணம், பெப்.2

வலி.தென்மேற்கில் கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதி நடமாடும் சேவை நிலையங்கள் மூலம் பால் கொள்வனவு இடம்பெறும்.

வலி.தென்மேற்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் இதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டுள்ளனர்.

பண்ணையாளர்களின் நன்மை கருதி பாற்சாலை சண்டிலிப்பாயில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை ஆகிய பிரதேசங்களில் மைய நிலையங்கள் மூலம் பண்ணையாளர்களின் பால் தினமும் கொள்வனவு செய்யப்படும்.

எனவே கால்நடை வளர்ப்போர் பண்ணையாளர்கள் சங்கத் தலைவர் எஸ்.சரத் குமாரிடம் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (ந-50)

## மேசை, கதிரைகள் போடப்பட்டு மட்டுவில் பகுதியில் தவறணை

*நேற்றுமுன்தினம் திறந்து வைப்பு*

தென்மராட்சி, பெப்.2

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் மட்டுவில் சந்திரபுரத்தில் 15 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட நவீன கள்ளுத் தவறணைக் கட்டடம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவ நாதன், சாவகச்சேரி மதுவரி நிலைய பொறுப்பதிகாரி சி.பிரதாபன், சங்கத் தலைவர் இ.பூபால சிங்கம் ஆகியோர் கூட்டாக கட்டடத்தை திறந்து வைத்தனர்.

இந்தத் தவறணையில் மது அருந்துவதற்கு வசதியாக கதிரைகள், மேசைகள் போடப்பட்டுள்ளன. இங்கு போத்தல் கள்ளு பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

## இன்று மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.2

புதிய உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் இணைப்பு வேலைகளுக்காகவும் பராமரிப்பு வேலைகளுக்காகவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணியந்தோட்டம், உதயபுரம், துண்டி, வசந்தபுரம், ஆனந்தன் வடலி வீதி, மகேந்திரபுரம், தேவபுரம், கொழும்புத்துறை வீதியில் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்–

8.30 மணியிலிருந்து ஒரு மணிவரையும் பிறவுண் வீதி, கே.கே.எஸ்.வீதி, தட்டா தெரு, கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, மானிப்பாய் வீதியில் ஒரு பகுதி, சிவன் பண்ணைஈ வீதி, கன்னாதிட்டி, மணிக்கூட்டு கோபுர வீதி, கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி, இராமநாதன் வீதியில் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ்.பிரதேச மின் பொறி யியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## விருப்பு இலக்கங்கள் 11, 12ஆம் திகதிகளில்

மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு எதிர்வரும் 11ஆம், 12ஆம் திகதிகளில் விருப்பு இலக்கங்களை வழங்க எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்ததை யடுத்து வேட்பாளர்களுக்கான விருப்பு இலக்கங்களை வழங்க தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. கடந்த 30ஆம் திகதியுடன் வேட்பு மனுத் தாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், இதுவரையில் எந்தவொரு கட்சியும், சுயேச்சைக் குழுவும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யவில்லை. இதேவேளை, நேற்றுமுன் தினம்வரை20 சுயேச்சைக் குழுக்கள் மாத்திரமே கட்டுப் பணங்களைச் செலுத்தியுள்ளன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் வேட்புமனுப் பட்டியலைத் தயார் செய்யும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இவ்விரு கட்சிகளும் எதிர்வரும் 6ஆம் திகதி வேட்புமனுக்களைத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளன. (சி)

## தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் 273 பேருக்கு சிகிச்சை

### *யாழ்.போதனா வைத்தியசாலையில்*

யாழ்ப்பாணம்.பெப்.2

தற்கொலை முயற்சி மற்றும் எரிகாயங்களுக்கு உள்ளானோர் உட்பட ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்ட 273 பேர் யாழ். போதனா வைத்தியசாலையின் தொழில் வழிச் சிகிச்சைப்பிரிவில் கடந்தவருடம் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதானதொழில் வழிச் சிகிச்சையாளர் ஆர்.கணேசலிங்கம் தெரிவித்தார்.

மருந்து மாத்திரைகளால் குணப்படுத்த முடியாத நாள்பட்ட நோய்களுக்கு உடற்பயிற்சி முறையிலான சிகிச்சைகள் தொழில் வழி சிகிச்சைப் பிரிவில் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த வருடம்சிகிச்சைபெற்றவர்களில் சிறு வயதில் அங்கங்கள் பாதிப்புக்கு உள்ளான 94 சிறுவர்களும், சத்திர சிகிச்சைகளைப் பெற்ற 38 பேரும், தற்கொலை முயற்சி மற்றும் எரிகாயங்களுக்கும் உள்ளான 9 பேரும், ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்ட 132 பேரும் என 273 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் உட்பட வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும் அதிகளவில் சிகிச்சை பெற்றுள்ளனர். தற்போது புதிய இடத்தில் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவு இயங்குகின்ற போதிலும் சிகிச்சைகளுக்குத் தேவையான உபகரணங்கள் போதுமானதாக இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

# இடம்பெயர்ந்த காலத்துக்குரிய வரிக்கழிவை வழங்கக் கோரிக்கை

தென்மராட்சி, பெப்.2

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட மக்கள் கடந்த 2000 ஆம் ஆண்டு மே 25 ஆம் திகதி தொடக்கம் 2002 ஆம் ஆண்டு ஜுன் 19 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இடம்பெயர்ந்து வாழ்ந்ததால் அந்தக் காலத்துக்கு வரிக்கழிவு வழங்குமாறு வரியிறுப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அந்தக் காலப் பகுதியில் வரியிறுப்பாளர்கள் மட்டுமன்றி அரச திணைக்கள அலுவலகங்களும் வடமராட்சி, வலிகாமம் பகுதிகளில் இயங்கி வந்தன. அவ்வேளையில் எந்தவொரு வருமானமும் காணிகளிலிருந்து பெறப்படவில்லை. அத்துடன் மீளக்குடியமர்ந்த வேளையில் சங்கத்தானை தொடக்கம் நுணாவில் சந்தி வரையான பகுதிகள் குண்டு வீச்சுக்களுக்கு இலக்காகி பெரியளவில் சேதங்களுடன் காணப்பட்டன. இன்னமும் பல வீடுகள் திருத்தப்படாமல் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்த நிலையில் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளான ஆதனங்களுக்கு குறித்த காலப் பகுதிக்கு வரிக்கழிவு வழங்குமாறு நகர சபைக்கு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு அப்போதிருந்த நகர சபை உரிய நடவடிக்கைக்காக வடக்கு, கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் வடக்கு மாகாண ஆளுநர் நகர சபைக்கு பயணம் செய்த போது மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு இழப்பீடு தொடர்பாகவும் வரிக்கழிவு தொடர்பாகவும் கலந்துரையாடிய வேளை நடவடிக்கை எடுப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் இன்று வரை மக்களுக்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

தற்போது செயற்படும் வடக்கு மாகாண சபை இந்த விடயத்தில் கவனம் எடுத்து குறித்த இரண்டு வருடத்துக்குரிய ஆதன வரியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளனர். (வ-9)

# இளம் தொழில்முனைவோருக்கு மன்னாரில் சுயமுயற்சிக் கடன்

மன்னார், பெப்.2

மன்னார் மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனமும், இலங்கை வர்த்தகசம்மேளனமும் இணைந்து நடத்திய இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கு வங்கிக் கடன்கள் வழங்கப்பட்டன.

இதற்கான நிகழ்வு மன்னார் மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளன அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.



வங்கிக் கடன்கள் வழங்கப்பட்ட போது.

இந்தநிகழ்வில்மன்னார்மாவட்ட வர்த்தக சம்மேளனத் தலைவர் எஸ்.பி. ரெக்ஸ் குலாஸ், செயலாளர் என். கணேசலிங்கம், HNB வங்கி ஊழியர் வி. பிரசாத் மற்றும் சம்மேளன அலுவலர்கள் எஸ்.ஏ. சியாம், பிரதம நிறைவேற்று அதிகாரி ஜீ.சி.றோய், திட்ட இணைப்பாளர், கே.கர்ணன், சமூக வலுவூட்டுநர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஸ்ரான்டட் சார்ட்டட் வங்கியின் அனுசரணையுடன் ஹற்றன் நஷனல் வங்கியின் மன்னார் கிளையூடாக முதற் கட்டமாக பயிற்சி பெற்ற 28 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இது அவர்களின் தொழில் முயற்சியை விருத்தி செய்வதற்குபெரும்உதவியாக அமைந்துள்ளது.

HNB வங்கிக்கும், இந்த நிதியுதவியைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகளை எடுத்த இலங்கை வர்த்தக சம்மேளன உயர் அதிகாரிகள் மற்றும் இந்தத் திட்டத்தினை தேசிய ரீதியில் செயற்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் வி. குமரகுரு, ஆலோசகர் குழு இணைப்பாளர் ஆர். ராஜேஸ் ஆகியோர்களுக்கு மன்னார் மாவட்டச் சம்மேளனம் சார்பாக செயலாளர் என். கணேசலிங்கம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (க-56)

### சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் மணவாளக் கோலத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

அன்றைய தினம் காலையில் விசேட சங்காபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம்பெறும்.

மாலை 6 மணிக்கு விநாயகர் முருகப் பெருமான் சகிதம் அலங்கார கேடயத்தில் வெளி வீதி வலம் வருதல் இடம் பெறும். (து-17)

* * *

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை விசேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் திருவிழா ஆரம்பமாகி இடம்பெற்று மாலையில் சுவாமி உள் வீதி வலம் வருதல் நடைபெறும். (து-17)

* * *

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு கந்த புராண படிப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பித்து வைக்கப்படும். (து-17)

## மரண அறிவித்தல்

### கந்தையா கதிர்காமத்தம்பி (ஆனந்தம் சிற்பாசாரி)



அல்வாயைப் பிறப்பிடமாகவும், குமுழமுனை 6 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், திருநெல்வேலியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கதிர்காமத்தம்பி (ஆனந்தம் சிற்பாசாரி) நேற்று (01.02.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பறுபதம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலேஸ்வரி (கிளி) மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புக் கணவரும் தயாழினி, சசிலா காலஞ்சென்ற சாந்தி மற்றும் கவிதா (ஆசிரியர் யா/ ஒஸ்மானியாக்கல்லூரி), தீபா(லண்டன்), தீபன் (சவுண்ட் சேவிஸ்), குமரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரநாதன் (துளசி ஆட்டோ), கருணாகரன் (அபிஷேக் வாணிபம் திருநெல்வேலி), குணா (கனடா), ஜெயசீலன் (பவித்திரன் பல்பொருள் வாணிபம் - திருநெல்வேலி), மதன் (லண்டன்), சிவாஜினி (சுகாதாரப்பணி உதவியாளர் கிளிநொச்சி), சகிர்தா ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அன்னம்மா, நாகரத்தினம் மற்றும் அழகம்மா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்றவர்களான அழகேஸ்வர சாமி, நாகராசா, சின்னராசா மற்றும் இராமசேது ஆகியோரின் அன்புமைத்துனரும் கார்த்திகா (லண்டன்), பானுகா, வினுஜா, கஜீபன், கஜந்தா, கனிஷ்ரியா, சத்ருக்கன், டிலஷ்சி (கனடா), பவித்திரன், துவிஷன், நிசான், திசான், கவிஷா (லண்டன்), பிரசன்ஜா, சங்கவி, கவிதாஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் சந்தியா, திவ்வியா, சேயோன் ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி

தகவல்
குடும்பத்தினர்.

## மாசேரிப் பகுதியில் ஆடு திருட்டு

வரணி, பெப்.2

மேய்ச்சலுக்கு கட்டிய மறி ஆடு ஒன்றும் அதனுடன் நின்ற மற்றொரு ஆடும் வெள்ளிக்கிழமை பட்டப் பகலில் வரணி மாசேரிப் பகுதியில் திருட்டுப் போய்விட்டன.

கடந்த வாரமும் அயற் பிரதேசமான சிமிழ் கண்ணகைபுரம் பகுதியில் மேய்ச்சலுக்கு கட்டப்பட்டிருந்த பசுமாடு ஒன்றும் களவு போய் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-122)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்

### குணராசா பிரசன்னா

(ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவு உத்தியோகத்தர்)



கும்பலை அளவெட்டியைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குணராசா பிரசன்னா நேற்று (01.02.2104) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கும்பலை,
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா ரவீந்திரராசா



காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ரவீந்திரராசா நேற்று (01.02.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் தெய்வநாயகி தம்பதியரின் அன்பு மகனும், செந்தமிழ்ச் செல்வியின் அன்புக் கணவரும், நிதர்சினி, அபர்ணா, அபிமஞ்சு, காண்டீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2014) ஞாயிற்றுக் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தொண்டைமானாறு காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வீரபத்திர கோயிலடி,
உடுப்பிட்டி.

(44280)

தகவல்:
குடும்பத்தினர்.



நெடுந்தீவு மகா வித்தியாலய மெய்வன்மைப் போட்டியின் போது மாணவிகளின் உடற்பயிற்சி இடம்பெறுவதையும் வெற்றி பெற்ற மாணவருக்கு யாழ். கட்டளைத் தளபதி உதயபெரேரா பரிசில் வழங்குவதையும் காணலாம். (ஒ-7)



யாழ். பல்கலைக்கழகத்தில் இரண்டாம் வருட கலைப் பிரிவில் பயிலும் முல்லைத் தீவு இனிய பாரதி இல்லத்தைச் சேர்ந்த பிரியங்காவுக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க ஆஸ்திரேலிய கிளையின் பிரதிநிதியால் வழங்கப்பட்ட மடிக் கணினி ஒன்றை வர்த்தகரான சி.சச்சிதானந்தன் கையளித்தார். (ஒ-4)



ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் சமூக மட்ட அமைப்புகளுக்கு பன் முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் அண்மையில் வழங்கினார். (ஒ-21)




வடமராட்சி வதிரி வடக்கு மெ.மி.த.க. பாட சாலையில் நடைபெற்ற வலய மட்ட கால் கோள் விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் மாணவர் களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். (ஒ)




சுன்னாகம் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு சுன்னாகம் வர்த்தக சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது 50 இற்கும் மேற்பட்டவர்கள் இரத்ததானம் வழங்கினர். (ஒ)



யாழ்.பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி பாலசுந்தரம் நிமலதாசனுக்கு சிறந்த விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சியாளர் விருது பெற்றமைக்காக சாவகச்சேரி மட்டுவில் வாழ் மக்களால் அண்மையில் மட்டுவில் மகா வித்தியாலயத்தில் கௌரவிப்பு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலாநிதி பாலசுந்தரம் நிமலதாசனுக்கு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கேடயம் வழங்கிக் கௌரவித்தார். அருகில் திருமதி நிமலதாசன் காணப்படுகிறார். (ஒ-14)



மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தலைவர் ஆறு.திருமுருகன், வேலணைப் பிரதேச செயலர் திருமதி.மஞ்சுளாதேவி சதீசன் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தனர். (ஒ-7)



மட்டுவில் சரஸ்வதி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்றது. விருந்தினர்களுடன் வெற்றிபெற்றமாணவர்களும் காணப்படுகின்றனர். (ஒ-9)



அளவெட்டி வடக்கு கிராம அலுவலர் க.கணேசதாஸ் கோரிக்கைக்கு இணங்க அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சண்முகசுந்தரம் கேதீஸ்வரன் அளவெட்டி அறிவொளி சனசமூக நிலையத்துக்கு தனது செலவில் மின்சார இணைப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளார். அறிவொளி சனசமூக நிலையத்துக்கான காணியும் முன்பு இதே கிராம அலுவலரால் இலவசமாக பெற்றுக் கொடுக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது. மேற்குறித்தவர்களுடன் சனசமூக நிலைய ஊழியர்கள் நிற்கின்றனர். (வ)

## பொறியியல் தொழில்நுட்பம்
## Engineering Technology

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

2015/2016, A/L மாணவர்களுக்கான பொறியியல் தொழில்நுட்பப் பாடங்கள், தொழில்நுட்பக் கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் எமது நிறுவனத்தில் 09.02.2014 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.
01.02.2014 இல் இருந்து அனுமதிகளைப் பதிவு செய்யலாம்.

இடம் : **SIPLAN Knowledge Center (Pvt) LTD**
[ELCARDO Industries (Pvt) LTD]
(தம்றோ காட்சியறைக்கு அருகில்)
No.170, Palaly Road, Jaffna.
(44170) (10.6)
**T.P.No: 071 864 9221    071 454 0968**

## உடனடியான வேலை வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜாம், கோடியல்/ நூடில்ஸ், தண்ணீர்ப்போத்தல்/ PVC/ கோழி இறைச்சி/தேயிலை/ காமென்ட்/ பெயின்ட் மற்றும் பல தொழிற்சாலைகளில் உற்பத்தி, லேபல்/ தரம்பிரித்தல், களஞ்சியப்பிரிவுக்கு ஆள்கள் தேவை. 18-50 வயதுடைய (ஆண், பெண் இருபாலாரும்) சம்பளம் 18000/=, 25000/=, 32000/= வரை, உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் தரப்படும். (நண்பர்கள்/ குழுக்கள்/ ஒரே தொழிற்சாலையில்) வருகை அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.
(குறிப்பாக வடக்கு/ கிழக்கு தமிழ், முஸ்லிம், மக்களுக்கு)
**தொடர்புகளுக்கு: 077 556 1883** (43129) (45.6.3)

## AHAVOLI
### Institute for Higher Studies offers the following courses

**01.Diploma Course in Peace Building & Community Development Practice**
This is a one year, week - end (Saturday & Sunday) Course that consists of 240 hours. The applicants Should have the following prerequisites to apply for this course
01.Knowledge of English as to read, write and speak
02.A Pass in Advanced Level
03.Interested in Social activities.
N.B The Diploma Certificate would be given by the National University of Ireland Galway

**Certificate Courses**

**02.French Language**
The classes will be conducted on Tuesdays and Thursdays for six months from 3.30 to 5.30 P.M.

**03.English Language**
**The classes will be conducted on Mondays, Wednesdays and Fridays for six months from 3.00 to 5.00 P.M.**
The Applicants will have to buy special form from our office and submit it before the 15th of Feb 2014
**These lectures are conducted by professionals.**
For further details please contact
**"AHAVOLI"** (44234)(6.3.4)
**Institute for Higher Studies**
**Affiliated to National University Galway**
**St.Patrick's Road, Jaffna. Contact No. 021 222 2856**

## பெற்றுக்கொள்ளலாம்

மணப்பெண் அலங்காரத்துக்கு தேவையான பூ வேலைப்பாடுகளை எம்மிடம் நவீன டிசைன்களில் பெற்றுக் கொள்ளலாம். (44255)(7.6.3)
தொடர்பு : 071 836 6086

## கல்வி

ஸ்ரீரஞ்சனி புத்தகசாலையின் ஸ்ரார் பப்பிளிகேஷன் வெளியீடுகள் தரம் 1-11 பரீட்சைப் பொதி, பரீட்சை நோக்கு, அறிவொளித் தொகுப்பு, விஞ்ஞானம்.
தொடர்பு: இ.நிர்மலன் 0777 413990/011 4947856

## இலவச செவிப்புலன் பரிசோதனை

மெட்கொன் செவிப்புலன் சுகநல நிலையத்தில்
**08.02.2014 சனிக்கிழமை காலை 8.30am- மாலை 6.00pm வரை**
இலவச செவிப்புலன் பரிசோதனை வழங்கப்படும். அத்துடன் பொருத்தமான செவிப்புலன் கருவிகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் பதிவுகளுக்கு முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
மெட்கொன் செவிப்புலன் சுகநல நிலையம்,
218 1/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 492 3587/075 042 2108

## கேள்வி அறிவித்தல்
### வலயக்கல்வி அலுவலகம் முல்லைத்தீவு

அலுவலகப் பாவனைக்குத் தேவையான கீழ் வரும் பொருள்கள் கொள்வனவு செய்வதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

- கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி மற்றும் நேரம் - 17.02.2014 மு.ப.10.00
- கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் 19.02.2014 மு.ப.10.30

**கோரப்படும் பொருள் விவரம் பின்வருமாறு:-**

- அலுவலகப் பாவனைக்கான காகிதாதிகள்
- ரோனர்கள் (அனைத்து வகையானபோட்டோப்பிரதி இயந்திரங்களுக்கும் பிரின்டர்களுக்குமானது)
- செயலமர்வுக்கான உணவு, சிற்றுண்டி வகைகள், மென்பானங்கள்.

கேள்விப்பத்திரங்களை இரட்டைப்பிரதிகளில் பூரணப்படுத்தி வெவ்வேறு கடித உறைகளில் இட்டு மூலப்பிரதி வைக்கப்பட்டுள்ள கடித உறையில் மூலப்பிரதி எனவும் மற்றையதில் பிரதி எனவும் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்டு மேற்கூறிய கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக வலயக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், முல்லைத்தீவு என்ற முகவரியில் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ சமர்ப்பிக்க முடியும்.

வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம் - முல்லைத்தீவு.
தொ.பே:021 229 0015

## தேவை

கொழும்பில் புத்தகசாலை ஒன்றுக்கு தங்கியிருந்து வேலை செய்ய, நன்றாக எழுத வாசிக்கக்கூடிய பெண் உதவியாளர் தேவை.
தொடர்பு: 0777 419 588 (44226) (3.6.4)

## காணி விற்பனைக்கு

யாழ்-மிருசுவில், கண்டிவீதி, பழைய வாய்க்கால் மெயின் றோட்டில் 12 பரப்பு தென்னை, பலா மரம் உள்ள காணி விற்பனைக்கு உண்டு.
T.P: 0787 138176

## வீடு வாடகைக்கு

யாழ்.நல்லூர் சுற்றாடலுக்கு அண்மையில் 3 பேர் தங்கக்கூடிய சிறிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 075 049 6867 (44227)(7.6.3)

## வாகனம் விற்பனைக்கு

NP-LI-xxxx இலக்கமுடைய TATA WHITE 3 கியூப் ரிப்பர் வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 740 9953 (44228)(7.6.3)

## சேவை

சுவாமி ஆயுள்வேத ஆஸ்பத்திரி, Home & Hotel Visit வயிறு சம்பந்தமான, ஆண்களுக்கான பிரச்சினை மற்றும் அனைத்து நோய்களுக்கும் ஒயில் மசாஜ், இந்திய சிகிச்சை, ஸ்பா, ஆயுள்வேத மசாஜ் & ஸ்ரீம் பாத், அர்சஸ் வியாதிகளுக்கும் @ மௌன்ட் லெவனியா, பிரியா
072 813 8773/ 077 720 4921/ 011 458 8114

## வேலை ஆள் தேவை

வாகன சேவிஸ் ஸ்ரேஷனுக்கு வேலை அனுபவம் உள்ளவர்கள் தேவை.
தொடர்பு:
**அம்பாள் சேவிஸ் ஸ்ரேஷன்**
மருதனார் மடம்.
(44289) (10.6.3) 077 7872322

## மணமகன் தேவை U.K

1) (UK Citizan) இந்து கௌரவ குடும்பம் 27.03.1981 மூலம், கி.பா-35, பி.நே-3.30pm, உயரம் 5' 4" Aus Citizan (B.Sc) மருத்துவதுறை விரிவுரையாளராக கடமையாற்றுகிறார். தகுந்த பட்டதாரி மணமகனையும்
2) 22.06.1989 (UK Citizan) திருவோணம், கி.பா-25, பி.நே-10.31am(B.Sc), Bank of England, கடமையாற்றுபவர் தகுந்த PR இல்லாத மணமகனையும் எதிர்பார்க்கிறார்கள்.
Tel: 0044 790 870 7555
Fax:0044 208 548 8847 (44213) (7.6.3)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, கொழும்பில் வதியும் 1979 இல் பிறந்த மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. கார்த் திகை 4, உயரம் 5'7'' பாவம் 72¼, 11ஆம் இடத்து சூரியன் செவ்வாய் அரச உயர் பதவி வகிக்கின்றார். விவா கரத்து பெற்றவர் (innocent divorcer).
தொடர்பு: 077 065 0611

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் பிரபல தனியார் நிறுவன யாழ். கிளையில் பணிபுரியும் 8இல் செவ்வாய், 90 கிரக பாவம், 35 வயது மணமகனுக்கு, 30 வயதுக் குட்பட்ட மணமகள் தேவை. கல்யாணத் தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.
விளம்பர இல. 4485
மே/பா உதயன் (44216) (7.6.3)
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

## Study in UK / Malaysia

லண்டன் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் உயர் கல்வி கற்க உள்ளோருக்கான அரிய வாய்ப்பு



**மேற்படி நாடுகளுக்கு செல்வதற்கு இலவச ஆலோசனை வழங்கப்படும்.**

வெளிநாட்டில் கல்வி கற்பது உங்கள் இலட்சியமாயின் எம்மிடம் வாருங்கள். ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு நேரடியான மற்றும் மறைமுகமான கட்டணங்கள் எதுவும் அறவிடப்பட மாட்டா. பல வருட அனுபவம் வாய்ந்தவர்களினால் குறைந்த கட்டணத்தில் இலகுவான முறையில் எவ்வாறு வெளிநாட்டிற்கு கல்வி கற்க செல்வது போன்ற ஆலோசனைகள் வழங்கப்படும்.

**இலவச IELTS வகுப்புக்கள்.**

எம்மிடம் ஆலோசனை பெற விண்ணப்பிக்கும் முதல் 10 மாணவர்களுக்கு தரம் வாய்ந்த ஆசிரியர் குழு மூலம் IELTS கற்கை நெறி இலவசமாக கற்பிக்கப்படும். இலவசமாக IELTS DVD மற்றும் Study Pack வழங்கப்படும். தேவைக்கு ஏற்ப ஆரம்பத்தில் இருந்தும் ஆங்கிலம் கற்பிக்கப்படும்

**உடனடியாக அழையுங்கள் 0777-585969** (நிபந்தனைக்கு உட்பட்டது)

**IELTS விரிவுரையாளர்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் IELTS கற்கை நெறியினை கற்பிப்பதற்கு கல்வி நிறுவனங்களிடம் இருந்தும் தனிப்பட்டவர்களிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ECBC
401 1/2, Clock Tower Road,
Jaffna.

ECBC
179, Station Road,
Vairavapuliyankulam,
Vavuniya.

Mobile: 0777-585969, mail: elite2002@gmail.com

## விசா




**State of Shengan visa**



Student
Business
Tourist
Visit

விசா கிடைத்த பின்பே பணம் செலுத்தல்



ஒரு மாதத்துக்குள் விசா

**Countries**
Italy France Germany Sweden Switzerland
Norway Spain Austria

**ISM Education & Travel Consultants (PVT) Ltd**
No-518 1/3, Galle Road, Colombo-03
076 668 3707
Web: www.ismeducationlk.com    email: info@ismeducationlk.com

# அமைக்கப்படவுள்ள பஸ் நிலையத்தால் எமக்கு நட்டங்களே ஏற்படும்

*வவுனியா தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு*

வவுனியா, பெப்.2

வவுனியா- யாழ்.ஏ-9 வீதியில் அமைக்கப்படவுள்ள தனியார் பஸ் நிலையம் தமக்கும் பல்வேறு இன்னல்களைத் தோற்றுவிக்கும் என வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

விவசாயப் பண்ணைக்குச் சொந்தமான காணியில் அமைக்கப்படவுள்ள இந்த பஸ் நிலையம் தமது சேவைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை வலியுறுத்தி சங்கத்தினர் வவுனியா அரச அதிபருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். அதில்;

வவுனியா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்களாகிய நாம் கடந்த பல வருடங்களாக சகல வசதிகளும் கொண்ட பஸ் தரிப்பிடம் அமைக்கப்படாததால் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றோம். மேலும், எமக்கென ஒரு பஸ் நிலையத்தை அமைத்துத் தருமாறு பல தரப்பிடமும் கோரிக்கை விடுத்தோம். அதன் பிரகாரம் நகர மத்தியில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் ஏ-9 வீதியில் உள்ள ஓர் இடத்தில் புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு அப்போதைய அரச அதிபர் திருமதி பி.எச்.எம்.சார்ள்ஸினால் அடிக் கல்லும் நடப்பட்டது. ஆனால் அதன் பின்னர் எதுவுமே இடம் பெறவில்லை. தற்போது இந்த இடத்தில் அடிக்கல் நடப்பட இருப்பதாகவும் பஸ் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம் பிக்கப் படவுள்ளதாகவும் அறிகின்றோம்.

ஆனால் குறித்த இடம் விவசாயப் பண்ணைக்குச் சொந்தமான இடம் மட்டுமல்லாது நகர மத்தியில் இருந்து தூர இடத்தில் அமைந்துள்ளது. இதனால் நகர மத்தியில் இருந்து பயணிகள் பஸ் நிலையத்துக்கு வருவதில் சிரமங்கள் ஏற்படும். அத்துடன் அரச பஸ்களுக்கான தரிப்பிடம் நகர மத்தியில் உள்ளதால் பயணிகள் எமது சேவைகளை நாடமாட்டார்கள். ஏற்கெனவே தேவைக்கு அதிகமான வழி அனுமதிப்பத் திரங்கள் வழங்கப்பட்டதன் மூலமாக நாம் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டுள்ளோம். தற்போது புதிய பஸ் நிலையம் அமைக்கப்படுவதன் மூலம் நாம் தனிமைப்பட்டு மேலும் கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு தொழிலையே விட்டுச் செல்ல வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம். ஆகவே தற்போது பஸ்நிலையம் அமைப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட இடத்தைக்கைவிட்டுமுன்னாள் அரச அதிபரால் பரிந்துரை செய்யப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையால் அனுமதிக்கப்பட்டுள்ள வரைபடத்தின் படி ரயில் நிலையத்துக்கும் தற்போதைய அரச பஸ் நிலையத்துக்கும் சமீபமாக ஓர் இடத்தில் பஸ் நிலையத்தை அமைத்துத்தருமாறுதயவுடன் வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

# தமிழ் மக்களுக்குக் கிடைத்த இந்திய வீடுகளை வழங்கவும்

*வவுனியா மேலதிக அரச அதிபரிடம் மனு*

வவுனியா மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களுக்குக் கிடைத்துள்ள இந்திய வீடமைப்புத் திட்டத்தை நிறுத்தாது வழங்குமாறு வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சரஸ்வதி மேகநாதனிடம் ஆறு கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கடந்த வியாழக்கிழமை மனுவொன்றைக் கையளித்துள்ளன.

சுந்தரபுரம், ஈஸ்வரிபுரம், தரணிக்குளம், மறவன்குளம், கல்மடு, பூம்புகார் ஆகிய கிராம அபிவிருத்திச் சங்கங்களே இந்த மனுவைக் கையளித்தன.

இதில் சுந்தரபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் வழங்கியுள்ள மனுவில் தெரிவித்துள்ளதாவது:-

எமது கிராமம் மிகவும் வறுமைக்கு உட்பட்ட கிராமமாகும். இங்குள்ள மக்கள் 1996 ஆம் ஆண்டில் இடம்பெயர்ந்து பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் 4 வருடங்களாகவசித்து 2001 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்காலிகக் குடியமர்வு செய்யப்பட்டனர். அன்று முதல் இன்று வரை எவ்வித வீடுகளும் இங்கு கட்டித்தரப்படவில்லை. ஆனால் அதன் பிற்பாடு இந்திய வீடமைப்புத் திட்டத்தின் மூலம் புள்ளி வழங்கல் அடிப்படையில் எமது கிராமம் உள்வாங்கப்பட்டுள்ளது.

ஆனால் அண்மையில் வவுனியாவில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை எமக்குக் கிடைத்த வீடுகளைப் பறிமுதல் செய்யும் ஒன்றாகவே கருதுகின்றோம். வீட்டுத் திட்டத் தெரிவில் அமைச்சரும், அரச அதிகாரிகளும் எந்த வித செல்வாக்கையும் செலுத்தவில்லை. அந்தத் தெரிவு முறையானதாகவே இடம்பெற்றுள்ளது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். தொடர்ந்தும் இவ்வாறான பொறுப்பற்ற ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும் எனில், அதற்கு எதிராக நாங்களும் வீதியில் இறங்கி நியாயத்துக்காகக் குரல் எழுப்ப நேரிடும். இந்த வீடமைப்புத் திட்டத்தை எமக்குத் தந்த இந்திய அரசுக்கு எமது நன்றிகளைத்தெரிவிக்கிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## திடீரெனப் பெய்யும் மழையால் அறுவடை வேலைகளில் பாதிப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் காலபோக அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் தற்போது திடீரெனப் பெய்து வரும் மழையினால் விவசாயிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் காலபோக செய்கையாக மேற்கொள்ளப்பட்டுள்ள நெல், சிறுதானியம் உட்படப் பயிர்களின் அறுவடை வேலைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. ஆனால் திடீரெனப் பெய்து வரும் மழையினால் அறுவடை வேலைகளில் ஈடுபடும் விவ்சாயிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் நட்டாங்கண்டல், சிறாட்டிகுளம், பனங்காமம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த உழுந்து, பயறு, நிலக்கடலை போன்ற செய்கைகளும் உடையார் கட்டு, மூங்கிலாறு, முள்ளியவளை ஆகிய பகுதிகளில் நிலக்கடலை, உழுந்து உட்பட ஏனைய பயிர்கள் அறுவடைக்கு ஏற்புடைய நிலையில் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே இரண்டு நாள்களாகப் பெய்து வரும் மழையினாரில் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதே போன்று கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்ச் செய்கைகளில் முரசுமோட்டை, பன்னங்கண்டி, மருதநகர் ஆகிய பகுதிகளில் அறுவடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த இரு தினங்களாகப் பெய்து வரும் மழையினால் இவற்றை அறுவடை செய்வதிலும் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (க-55-18)

## ஜெயபுரம் கிராமத்துக்கும் மருத்துவமனை வேண்டும்

*கிராம மக்கள் வேண்டுகோள்*

கிளிநொச்சி, பெப்.2


கிளிநொச்சி ஜெயபுரம் கிராமத்தில் மருத்துவமனையை அமைக்குமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுமார் 450 குடும்பங்கள் வசிக்கும் இந்தக் கிராமத்தில் மருத்துவமனை அமைக்கப்படாத நிலையே தொடர்ந்து காணப்படுகின்றது. இதனால் இந்தக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் 10 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள முழங்காவில் மருத்துவமனை அல்லது 40 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி மருத்துவமனை ஆகியவற்றுக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

இந்தக் கிராமத்தில் வறுமையான நிலையிலுள்ள குடும்பங்களே அதிகளவில் வசிக்கின்றன. போக்குவரத்து வசதிகள் இங்கு குறைந்த அளவில் காணப்படுவதால் இங்குள்ள மக்கள் வேறு இடங்களிலுள்ள மருத்துவமனைகளுக்குச் செல்வதில் அதிக இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கிராமம் 1983 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தற்போதும் அடிப்படை வசதிகள் குறைந்ததொரு கிராமமாகக் காணப்படுகின்றது.

கடந்த ஆண்டே இங்கு மருத்துவமனையை உருவாக்குவோம் என அதிகாரிகள் கூறிய போதிலும் அது இன்னமும் நிறைவேற்றப்படவில்லையெனக் கிராம மக்கள் தெரிவித்தனர். (க-18)



**மரக்கன்று நடுகை**

கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் மறைந்த முதலாவது அதிபரான ப.கணேசலிங்கம் நினைவாக மு.இராசலிங்கத்தினால் வழங்கப்பட்ட ஆலமரக் கன்றை அக்கராயன் மகா வித்தியாலய அதிபர் க.மதுரநாயகன் நட்டு வைக்கின்றார். (க-18)

## கிளிநொச்சி அரச செயலகத்தில் போட்டிக்கான தெளிவூட்டல் நிகழ்வு

அக்கராயன், பெப்.2

கிளிநொச்சி அரச செயலகத்தில் உற்பத்தித்திறன் மேம்பாட்டு அமைச்சின் தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் வழங்கும் போட்டித் தொடருக்குரிய தெளிவூட்டல் நிகழ்வு கடந்த 30 ஆம் திகதி முற்பகல் இடம் பெற்றது.

கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், தனியார் துறையினர் ஆகியோருக்குத் தனித்தனியாக தெளிவூட்டல் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் முதன்மை வளவாளராகக் கலந்து கொண்ட சிறிஜயவர்த்தன பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளரான கில்மிமார்க்கர் கருத்துத் தெரிவிக்கும் போது:

தேசிய மட்டத்தில் உற்பத்தித் திறன் போட்டிகளை நடத்தி வருகின்றோம். இப்போட்டியில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருந்து பங்கேற்பவர்களின் தொகை குறைவாகவே காணப்பட்டது.

தற்போது நாட்டில் அமைதிச் சூழல் காணப்படு வதன் காரணமாக வடக்குக் கிழக்கில் தமிழ் மொழி பேசுகின்ற அரச அலுவலகங்களையும், தனியார் நிறுவனங்களையும் இந்தப் போட்டியில் பங்கு கொள்ளச் செய்யும் முகமாகவே இந்தத் தெளிவூட்டல் இடம் பெறுகிறது. திணைக்களங்கள், நிறுவனங்கள் மக்களுக்குச் சிறந்த பணியை வழங்க வைப்பது தான் இந்த நிகழ்வின் நோக்க மாகும் என்று அவர் தெரிவித்தார். (க-18)

## நாயை ஏவி விட்டவருக்கு ரூ.45 ஆயிரம் தண்டம்

*மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மீது*

கிளிநொச்சி, பெப்.2

பரந்தன் பகுதியில் கசிப்பு வேட்டைக்குச் சென்ற மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மீது நாயை ஏவிவிட்டவருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கசிப்பு, அனுமதியில்லாது அரச சீல் சாராயம் ஆகியவற்றை, வைத்திருந்தவர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேலதிகமாக வைத்திருந்த 21 பேர் கைது செய்யப்பட்டு இவர்களுக்கெதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் பரந்தன் பகுதியில் கசிப்பு பிடிக்கச் சென்ற அதிகாரிகள் மீது நாயை ஏவி விட்டதாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவருக்கு 45 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. அத்துடன் கடந்த 28 ஆம் திகதி இத்தகைய குற்றங்களுக்காக முல்லைத்தீவு நீதி மன்றத்தில் எட்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (க-55)

## பட்டி மாடுகள்

கிளிநொச்சி, பெப்.2

ஒருவருக்குச் சொந்தமான பட்டியில் உள்ள மாடுகளுடன் பிறருடைய மாடுகள் கலந்து காணப்பட்டால் அது தொடர்பாகப் பொலிஸாருக்கு அறிவிப்பதுடன் உரியவர்களிடம் அந்த மாடுகளை ஒப்படைக்க வேண்டும். இவ்வாறு கிளிநொச்சி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

ஒருவரின் பட்டியில் வேறு ஒருவரின் மாடுகள் காணப்பட்டமை தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கின்போது நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டார்.

மேலும் இது தொடர்பாகப் [illegible] ஸாருக்குத் தெரியப்படுத்[illegible] டாமை தொடர்பாகக் [illegible] நபருக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. (க-18)

# மரண அறிவித்தல்

## சிவலிங்கப்பிள்ளை தனபாலசிவரஞ்சிதன்



மண்டைதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இராஜவீதி, தோப்பு அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கப்பிள்ளை தனபாலசிவரஞ்சிதன் (30.01.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவலிங்கப்பிள்ளை-நேசமணி தம்பதியரின் ஏகபுத்திரனும், சின்னத்தம்பி-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், பத்மநாயகியின் அன்புக் கணவரும், தாரணி, தனுஷா, கஜந்தி ஆகியோரின் தந்தையாரும், நிறஞ்சனன், ரமேஸ்வரன், சந்திரபிரதாப் ஆகியோரின் மாமனாரும், நிகாஜுஜன், நிதாருகா, கஸ்மிதன், சாருஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், வேலுப்பிள்ளை குலசிங்கத்தாரின் பெறாமகனும், லோக நாயகி, சிவஞானமூர்த்தி, சத்தியமூர்த்தி (பிரான்ஸ்), காலஞ்சென்ற நடேசமூர்த்தி மற்றும் திவாகரமூர்த்தி, வசந்தநாயகி, பாஸ்கரமூர்த்தி(பிரான்ஸ்), சாந்தநாயகி, ஜெயாநாயகி, கிருஸ்ணநாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தோப்பு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(44120)(3.6.4) தகவல்:குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அருணாசலம் வெற்றிவேலாயுதம்

(டொலர் அலுமினியம் இன்டஸ்ரீஸ் தொழிற்சங்கத் தலைவர்)

தோற்றம் 06★11★1946 மறைவு 14★01★2013

திதி:வளர்பிறை திருதியை)

ஆண்டொன்று கடந்தும் ஆறவில்லை எம் துயரம்
எண்ணாத நேரமதில் எம்மை விட்டு எங்கு சென்றீர்
பூமியின் பொறுமையே! புண்ணியத்தின் பெருமகனே!
அன்புடன் அறன் இணைந்த நல்லதோர் கணவனாய்
பண்புடன் எமை வளர்த்த பாசமிகு தந்தையாய்
எல்லோர்க்கும் ஏற்புடைய நண்பனாய்
உறவுகளை உபசரித்து உளம் மகிழ
வரவேற்ற உங்கள் சிரித்த முகமும்
கனிவுடைய உங்கள் வரவேற்பும்
என்றும் எம் மனதில்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

மூன்று கோயிலடி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். (சி/11362)(3.6.4) குடும்பத்தினர்.

# நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு | ஒன்பதாம் ஆண்டு





தி. தவதேவி — ஷாலினி

| தி. தவதேவி | | ஷாலினி | |
|---|---|---|---|
| பிறந்தது | பிரிந்தது | பிறந்தது | பிரிந்தது |
| 12.01.1950 | 12.02.2013 | 26.12.1960 | 15.02.2005 |

உடன் பிறந்து தாயான உத்தமியே
உன்வாழ்வு துறந்து எம்மைக் காத்தவளே
உடல்வருத்தி உணவூட்டி வளர்த்தவளே
உனைப்பிரிந்து வாடுகின்றோம் – உன்
உடன் பிறந்தவரே...!

அழைத்தாலும் வராத தெய்வங்களாம் அழைக்காமல் வந்த தாயவள் நீ
அன்புக்குக் குறைவில்லை உன் மடியில்
உன்னை அம்மாவாய்ப் பெற்றதற்கு பெருமை கொண்டேன்
அக்காவாய், அம்மாவாய், அத்தையாய்
மாமியாய், மச்சாளாய் – எல்லா உறவுகளையும்
அரவணைத்து ஒளிவிளக்காய் இருந்து ஒளி கொடுத்துக் காத்தவள் நீ.
உங்களின் பிரிவு எங்களை வாட்டுதம்மா
என்றும் உங்கள் நினைவுகளோடு.

ரஞ்சி, விமல் (ரஞ்சன்)
ரோசி (ஜெயந்தி)
புவி, சாமி, கௌஷலா, ஷாரா,
ஷாருஜன், ஷருண், ஷஜித், ஷாலினி.

(43127) (7.6.3)

### கும்பாபிஷேகம்

தென்மராட்சி, பெப்.2

சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஐக்கிய ராஜ்ஜியத்தில் உள்ள அடியார்களால் நிர்மாணிக்கப்பட்ட சண்டேஸ்வரர் பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.35 மணிக்கு இடம்பெறும்.

கும்பாபிஷேகக்கிரியைகள் இன்று ஞாயிறு காலை 8 மணிக்கு ஆரம்பமாகி அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நண்பகல் 12 மணி தொடக்கம் மாலை வரை இடம்பெறும்.

சிவஸ்ரீ கு.து.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையிலும் நெறிப்படுத்தலிலும் சிவஸ்ரீ மு.வைத்தியநாதக் குருக்கள் கும்பாபிஷேக கிரியைகளை நடத்துவார். (ஒ-9)

### முன்பள்ளிக் கட்டடம் ஓமந்தையில் திறப்பு

வவுனியா, பெப்.2

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் முன்பள்ளிக் கட்டடம் ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 3 ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

திறப்பு விழா நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா, கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர் உட்பட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-402)

# கண்ணீர் அஞ்சலி



மன்ற உறுப்பினர் ச.சதீஸ்குமார்
( சீதா ஜுவல்லரி ) அவர்களின்
பாசமிகு தந்தையார்

## கொண்டு சண்முகம்

அவர்கள் 31.01.2014 காலமாகியதை அறிந்து வேதனையடைகின்றோம்.அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை மன்றம் தெரிவித்துக் கொள்கிறது.

(C/11379) (2.6.3)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் ஜெயக்குமார்
அவர்களின் அன்புத் தந்தை

## ஆறுமுகம் கிட்டினர்


அவர்கள் நேற்றுமுன்தினம்
(31.01.2014) வெள்ளிக்கிழமை
இறைபதமடைந்ததையிட்டு
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குருமன்காடு,
வவுனியா.

திரு.திருமதி துஷ்யந்தன் கௌரி குடும்பத்தினர்.

(43129)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தொல்புரம் மத்தியைப்
பிறப்பிடமாகவும் வட்டு
வடக்கு சித்தன்
கேணியை வசிப்
பிடமாகவும் கொண்ட

## நாகேசு செல்வராசா

திதி:துதியை

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது
ஆனாலும்
மறையாது உம் நினைவு
ஆறாது எம் துயரம்!

பிறப்பு 09.06.1958 இறப்பு 12.02.2013

அன்பையும் அரவணைப்பையும் எம் மீது கொட்டி எமக்கு
எல்லாம் வழிகாட்டியாய் இருந்த மாமாவே!
அன்பான வார்த்தையை எண்ணி எண்ணி
அடங்க வில்லையே!
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உம்
நினைவுகள் எம்மை விட்டு என்றும் பிரியாது.
நாள்கள் வாரங்கள் ஆகி வாரங்கள் மாதங்கள் ஆகி மாதங்கள்
வருடம் ஆகியும் தாங்காத வேதனையில் தாளாமல்
தவிக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

தொல்புரம் மத்தி, சுழிபுரம். (44217)(3.6.4)

S.சாந்தன் – (மருமகன்)

# மரண அறிவித்தல்கள்

## கொண்டு சண்முகம்



சாவகச்சேரி தேவாலய வீதியைச் சேர்ந்த கொண்டு சண்முகம் நேற்று முன்தினம் (31.01.2014 ) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்

அன்னார் சீதாலட்சுமியின் அன்புக் கணவரும் சதீஸ்குமார் (சீதா ஜுவல்லரி -சாவகச்சேரி), சுரேஸ்குமார்,நாகநந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவிச்சந்திரனின் அன்பு மாமனா ரும் யனுஷ்கா, மினோசன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று( 02.02.2014 ) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C/11378) (2.6.3)

தேவாலய வீதி,
டச்சு வீதி, சாவகச்சேரி. 077 666 7771

தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி மகேஸ்வரி பாலசிங்கம்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட **திருமதி மகேஸ்வரி பாலசிங்கம்** நேற்று முன்தினம் (31.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற சிறீகாந்தன் மற்றும் ஜீவா, பாஸ்கரன், ஜீவமலர் (வசந்தி -லண்டன்), உதயகுமாரி (ஜீவனா - லண்டன்), பாலேஸ்வரி (வவா) ஆகியோரின் பாசமிகு தாயும் காந்தி, வசந்திமாலா, இராசேந்திரம், உதயகுமார், விமலானந்தன் ஆகியோரின் அன்பு மாமியும் விஜயரூபன், வினி, தீபன், கரன், மீனா, துஷாளினி, துஸ்யந்தன், துஷாந்தி, தேனுதன், தனுஷன், பிரியங்கா, பிரியன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அருளம்மா, பாக்கியம், நடராசா மற்றும் கண்மணி, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


நாவற்கட்டை, கோப்பாய்.
(கோப்பாய் பிரதேச செயலகர் அருகில்) (44218) (45.3.6)

தகவல்: R.K.காந்தி (மருமகன்)
T. P : 077 555 8663

# நித்திய சுகத்தை நோக்கி...

உதயன் வைத்தியமலர் 153

## எனது மகளுக்குப் 15 வயது ஆகிவிட்டது. அவள் இன்னமும் பூப்படையவில்லை. இதற்கு என்ன செய்யலாம்?





இவ்வாறான நிலைமை பிந்திய பூப்படைதல் (Delayed Menarchae) என்று கூறப்படும். துணைப் பாலியல்புகள் விருத்தியடையாத ஒரு பெண்ணில் 14 வயது வரையும் அல்லது துணைப்பாலியல்புகள் விருத்தியடைந்த ஒரு பெண்ணில் 16 வயது வரையும் முதலாவது மாத விடாய் ஏற்படாமல் இருக்கும் நிலைமையை நாம் இவ்வாறு கூறலாம்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. இவற்றில் சில முழுமையாகத் தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளாகவும், சில தீர்வு காண முடியாத பிரச்சினைகளாகவும் இருக்கும். முதலாவது மாதவிடாய் ஏற்படும் வயது பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது. பொதுவான காரணிகள் பின்வருமாறு.

**1. குடும்பத்தில் ஏனைய பெண்கள் பிந்திய வயதில் பூப்படைதல்.**

இங்கு உடல் ரீதியாக எந்தவிதமான பாதிப்போ அல்லது நோயோ இருப்பதில்லை. இவர்கள் உயரம் குறைந்தவர்களாக இருக்கலாம். குடும்பத்தில் மற்றப் பெண்கள் எந்த வயதில் பூப்படைவார்களோ அந்த வயதில் இவர்களும் பூப்பெய்துவார்கள். ஆகவே நீங்கள் அதுவரை காத்திருக்கலாம். இவர்களுக்கு அநேகமாக எந்தவித சிகிச்சைகளும் தேவைப்படுவதில்லை.

**2. சத்துள்ள உணவு வகைகளை உள்ளெடுத்தல் மற்றும் உடல்நிறை சத்துள்ள உணவு வகைகளை உள்ளெடுக்காமல் இருக்கும் மற்றும் உடல் நிறை குறைவாக இருக்கும் பெண்கள் பூப்படைவதற்குப் பிந்தலாம்.** இவ்வாறானவர்கள் சத்துள்ள உணவுகளை உள்ளெடுத்து உடல் நிறையை அதிகரிக்கச் செய்வதன் மூலம் பயனடைய முடியும்.

**3. உடல்நலப் பிரச்சினைகள்**

வேறு ஏதாவது நீண்டகால நோய்கள் உள்ளவர்கள் (உதாரணம் சிறு வயதில் நீரிழிவு, சிறுநீரகப் பாதிப்பு, புற்றுநோய் ) மற்றும் சில வகை ஓமோன் குறைபாடு உடையவர்கள் (உதாரணம் தைரொயிட், கபச் சுரப்பி, பருவகக் கீழ் சுரப்பி பிரச்சினைகள்) இவர்களில் உரிய வயதில் பூப்பெய்துவது பாதிக்கப்படலாம்.

இவர்கள் வைத்திய ஆலோசனையைப் பெற்று ஓமோன் சிகிச்சையோ அல்லது அவர்களின் நோய்க்கான சரியான சிகிச்சையையோ பெற்றுக் கொள்ள வேண்டும். மேற்குறிப்பிட்டவையே அநேகமான பெண்களின் முதலாவது மாதவிடாய் உரிய காலத்தில் ஏற்படாமைக்கான காரணங்களாக அமைகின்றன.

ஆரம்பத்தில் கூறப்பட்ட வயதெல்லையைத் தாண்டியும் உங்கள் மகள் பூப்படையாவிட்டால் நீங்கள் ஒரு பெண் நோயியல் மருத்துவரின் ஆலோசனையை நாடுவது நல்லது. மருத்துவர் உங்கள் மகளைப் பரிசோதித்து உங்கள் பிரச்சினைக்குரிய சரியான காரணத்தைக் கண்டறிந்து அது குணப்படுத்தக் கூடியதாயின் அதற்கான சிகிச்சை வழங்குவார். அவ்வாறான சிகிச்சையளிக்கக் கூடிய சில காரணங்கள் வருமாறு.

**1. பிறப்பு வாயிலில் உள்ள சவ்வு அடைப்பை ஏற்படுத்துதல்**

இதனால் மாதவிடாயின்போது வரும் குருதி வெளியேறமுடியாத நிலை ஏற்படும். இவ்வாறானவர்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் மாதவிடாய் ஏற்படும் காலத்தில் அடிவயிற்றில் நோவு ஏற்படும். சத்திரசிகிச்சை செய்து அடைப்பை ஏற்படுத்தும் சவ்வை அகற்றுவதன் மூலம் இந்த நிலை குணமாக்கப்படும்.

**2. பிறப்பிலே ஏற்படும் சில குரோமோசோம் குறைபாடுகள்**

**உதாரணம்** - Turners syndrome

இவர்கள் அகன்ற தோள்களைக் கொண்டவர்களாகவும், உயரம் குறைந்தவர்களாகவும் இருப்பார்கள். இவர்களுக்கும் சூலகத்திலே குறைபாடுஉள்ளவர்களுக்கும் சில ஓமோன் களை வழங்குவதன் மூலம் துணைப் பாலியல்புகளையும் மாதவிடாயையும் ஏற்படுத்த முடியும். ஆனால் இவர்களால் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாது.

**3. பரிவகக் கீழ் சுரப்பியின் குறைபாடு**

இவர்களுக்கு GnRH எனப்படும் ஓமோனை வழங்குவதன் மூலம் இந்த நிலையைக் குணப்படுத்தலாம். ஆனால் இது மிகவும் செலவு கூடிய ஒரு முறையாகும். மேலும் பல பிறப்புக் குறைபாடுகளும் மாதவிடாய் ஏற்படாமைக்கான காரணமாக இருக்கலாம். ஆனால் அந்தக் காரணிகள் மிகக் குறைவாகும்.

எனவே நீங்கள் ஒரு பெண் நோயியல் வைத்தியரைச் சந்தித்துப் பரிசோதித்துக் கொள்வதன் மூலம் உங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம்.

**சீனிக்குப் பதிலாக செயற்கையான சுவையூட்டிகள் பல இப்போது சந்தையில் கிடைக்கின்றன. இவை பக்க விளைவுகளற்றவையா?**

ஆம் ! சீனிக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் சுவையூட்டிகளால் பெரிய அளவு பாதிப்புகள் எதுவும் ஏற்படுவதில்லை. இவற்றினால் ஏற்படும் நீண்டகால விளைவுகளைக் கண்டறிய ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நீரிழிவு நோயாளிகள், உடற் பருமனானோர் சீனியைத் தவிர்ப்பதே நலம். ஆயினும் சீனியை அறவே விட முடியவில்லை என்பவர்கள் சீனிக் கான மாற்றீடுகளைப் பாவிக்கலாம். இந்த மாற்றீடுகளில் உள்ள பொருள்களுக்குச் சில உதாரணங்கள்.

1. அஸ்பாட்டேம் (Aspartame)
2. சுக்கிறலோஸ் (Sucralose)
3. சைலிற்றோல் (Xylitol)

அஸ்போட்டேம் என்பது ஓர் அமினோ அமிலம். எனவே இது குருதியில் குளுக்கோசின் அளவை அதிகரிக்காது. இது நீண்ட காலமாகப் பயன்பாட்டில் உள்ளதால் பாதுகாப்பான சுவையூட்டிகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

சுக்கிறலோஸ் சீனியிலும் 600 மடங்கு சுவை கூடியது. எனவே மிகக் குறைந்த அளவே சுவையூட்டத் தேவைப்படும். மேலும் இது அகத் துறிஞ்சப்படும் அளவும் குறைவு. எனவே கலோரி அதிகரிப்பு ஏற்படாது. இதன் பக்க விளைவுகள் பற்றி அறிய நீண்ட கால ஆய்வுகள் தேவைப்படுகின்றன.

சைலிற்றோல் மிகக் குறைவான கலோரிப் பெறுமானம் உடையது. இது சமிபாட்டுத் தொகுதி தொடர்பான சில பக்க விளைவுகளான வயிற்றோட்டம், வயிற்றுப் பொருமல் என்பவற்றை ஏற்படுத்தலாம்.

# உடல்நிறை குறைப்பு

## ஓர் இலகுவான கலை பகுதி 6

சென்றவாரத் தொடர்ச்சி..........

நம்மில் பலர் 'மாப்பொருள்களுக்கு அடிமையாதல்' என்ற நிலையினால் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்பது எமக்குத் தெரியாது. இந்தநிலை பல நோய்களுக்குக் காரணமாக அமைவதுடன் நிறை அதிகரிப்பிற்கான முக்கிய காரணமாகவும் அமைகின்றது. புகைத்தலுக்கு அடிமையாகி, குடிவகைகளுக்கு அடிமையாகி, போதைப் பொருள்களுக்கு அடிமையாகி, பாதிக்கப்பட்டவர்கள் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்கின்றோம். ஆனால் பெருந்தொகையான மக்களைப் பாதித்து பல மரணங்களும் தாக்கங்களுக்கும் காரணமாக இருக்கின்ற 'மாப்பொருள்களுக்கு அடிமையாதல்' என்ற நிலை பற்றி நாம் கவனம் செலுத்துவது மிகவும் குறைவாக இருக்கின்றது.

மாப்பொருள் என்றால் என்ன? 'மாப்பொருளுக்கு அடிமையாதல்' என்றால் என்ன? என்பது பற்றி நாம் அறிந்து வைத்திருத்தல் அவசியமாகும். மாப்பொருள் அதிகமுள்ள உணவுகளாக சோறு, பிட்டு, சீனி, இடியப்பம், பாண், ரொட்டி, குரக்கன் மா அல்லது ஆட்டாமா என்பன சேர்த்துத் தயாரிக்கப்பட்ட உணவுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நாம் இந்த வகையான உணவுகளுக்கு அடிமையாகி இருக்கின்றோமா என்பதை அறிந்து கொள்ள முடியும்.

மாப்பொருளுக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு மேற் கூறப்பட்ட பொருள்களை ஒன்று . அல்லது இரண்டு நாள்களுக்கு தவிர்த்து விட முற்பட்டால் கூட களைப்பாக இருக்கும், நடுங்கும், வழமையான வேலைகளைச் செய்ய முடியாது இருக்கும், இலகுவில் கோபம் வரும். இந்த அறிகுறிகளை பால், முட்டை, பழங்கள், பருப்பு வகைகள், மோர், சுண்டல் போன்ற ஆரோக்கியமான சுவையான உணவு வகைகளால் கூட தணிக்க முடியாமல் இருக்கும்.

இறைச்சி, மீன், இறால் போன்ற மாமிச உணவு வகைகளால் கூட இந்த அறிகுறிகளைத் தணிப்பது கஷ்டமாக இருக்கும். மேற்குறிப்பிட்ட மாப்பொருள் வகை உணவுகளைத் தேடி சிறிதளவாவது உண்ண வேண்டும் என்ற பெரும் ஆவல் மனதிலே தோன்றும். மாப்பொருள் இல்லாத உணவும் ஓர் உணவா? சோறு, பிட்டு உண்ணாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? என்றெல்லாம் மனம் சலித்துக் கொள்ளும். பால், பழம்,சுண்டல், பால் சேர்த்த தேநீர், கோப்பி, அவித்த அல்லது சமைத்த மரக்கறி வகைகள், முட்டை, பருப்பு, இறைச்சி வகைகள், அகத்தி, முருங்கை, வெங்காயம் போன்றவற்றின் வறைகள், கௌபி, பயறு போன்ற சுவையான உணவுவகைகளைக் கூட உணவாக ஏற்றுக் கொள்ள மனம் மறுக்கும், மாப்பொருள் உண்டால் தான் ஒரு நேர உணவு உண்டதாக மனம் திருப்தி கொள்ளும்.

மாப்பொருள் அதிகமுள்ள உணவு வகைகள் தனது உடல் நலத்துக்கு நல்லதல்ல என்று தெரிந்தும் மனம் அதையே நாடும். இத்தகைய ஒரு நிலைமையையே 'மாப்பொருளுக்கு அடிமையாதல்' என்று வரைவிலக்கணப்படுத்தலாம்.

எமது உடலின் அன்றாட தொழிற்பாட்டிற்காக 55 வீதம் தொடக்கம் 60 வீதம் வரையிலான மாப்பொருள் தேவையாக இருக்கின்றது. எமக்குத் தேவையான இந்த மாப்பொருளை எந்த வகையான உணவுகள் மூலம் பெற்றுக்கொள்வது ஆரோக்கியமாக இருக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும்.



மாப்பொருள் காணப்படும் ஆரோக்கியமான உணவு வகைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. பழங்கள்
2. அவரை வகை மரக்கறிகள்
3. பருப்பு வகைகள்
4. உழுந்து
5. பயறு
6. கௌபி
7. கரட், பீற்றூட், பூசணி

போன்ற மரக்கறி வகைகள் இந்த வகையான உணவு வகைகளை உண்பதன் மூலம் எமக்குப் போதுமான மாப்பொருளைப் பெற்றுக் கொள்வதுடன் உடலுக்கு வேண்டிய புரதம், கனியுப்புக்கள், விற்றமின்கள் போன்றவற்றையும் சேர்த்தே பெற்றுக் கொள்ள முடியும். இந்த வகையான உணவு வகைகள் பெருமளவு நிறை அதிகரிப்பை ஏற்படுத்தமாட்டா. காரணம் இவற்றில் உள்ள கலோரி அடர்த்தி அதிக மாப்பொருளைக் கொண்ட உணவு வகைகளுடன் ஒப்பிடும் பொழுது மிகவும் குறைவாகும்.

எனவே நாம் மாப்பொருளுக்கு அடிமையாகி உள்ள நிலையில் இருந்து விடுபட்டு உடல் நிறையைக் குறைத்து ஆரோக்கியம் பெறுவதற்கு முதலாவதாக இந்த நிலை எம்மில் இருக்கின்றது என்பதை அடையாளப் படுத்த வேண்டும். இரண்டாவதாக மாப்பொருள் செறிவு கூடிய உணவுகளைத் தவிர்த்து மாப்பொருள் செறிவு குறைந்த, புரதச் செறிவு கூடிய உணவு வகைகளைத் தெரிவு செய்து உண்ண வேண்டும். எமது வாழ்க்கை முறையை சுறு சுறுப்பானதாக மாற்றியமைத்து உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். விலை கூடிய செயற்கை உணவுகளைத் தவிர்த்து விலை குறைந்த இயற்கை உணவுகளைத் தெரிவு செய்ய வேண்டும்.

**Dr.S.சிவன்சுதன், MD,**
**பொது வைத்திய நிபுணர்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போரினால் பாதிப்புற்றவர்களின் விரக்தி நிலையை நீக்குவதற்கு...

**போ**ரினால் பாதிப்புற்று விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களுக்கு உளவியல் சிகிச்சை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தகவல் வெளிவந்துள்ளது. சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் இதனைத் தெரிவித்துள்ளார். அதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறியுள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சின் இந்த உத்தேச ஏற்பாடு செயலுருப் பெறுவது விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

பாதிப்புற்றவர்களை, சமூக ஓட்டத்தில் விரைந்து சேர்த்துக் கொள்வதற்கான, நடைமுறைச் சாத்தியமான திட்டங்களே அவசியம் என்பதனைக் கருத்தில் கொள்வது பிரதானம்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி உள்ளனர் -

அவர்களில் பெரும்பாலானோர் விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்-

அடுத்த வேளை என்ன செய்ய வேண்டும்; இப்போது என்ன செய்கின்றோம் என்ற எண்ணம் இல்லாமல் அவர்களது செயற்பாடுகள் அமைந்துள்ளன-

அத்தகையோரை ஆற்றுப்படுத்துவதற்கு சரியான உளவளப் பயிற்சி அவசியம்-

மன ரீதியாகப் பாதிப்புற்றவர்களையும் சமூகத்தில் மீள இணைக்க வேண்டும். அவர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்- என்ற சமூக சேவைகள் அமைச்சின் செயலாளரின் கருத்து ஏற்புடையதே; மிகவும் வரவேற்கத் தக்கதுமாகும்.

இதே போன்று பாதிப்புற்றவர்கள் தமது சொந்த மண்ணில் - தாம் தவழ்ந்த மண்ணில் - தாம் வளர்த்த மரம் செடிகள் சூழ உறவினர்களுடன் ஒன்றாக வாழ்வதற்கு வழிவகுப்பதோடு விரக்தியிலிருந்து விடுபடுவதற்கும், விடுதலை பெறுவதற்கும் வழி செய்யும்.

அவற்றோடு, பாதிப்புற்ற மக்கள் தத்தமது மத வழிபாடுகளில் ஈடுபடுவதும் மன அமைதி தேடலுக்கான முயற்சிகளில் ஒன்று.

ஆனால் போர் நடைபெற்ற பிரதேசங்களில், குறிப்பாக வன்னிப் பிரதேசங்களில் வணக்க ஸ்தலங்கள் கேட்பாரின்றி அழிக்கப்படுகின்றன. 'அடி முடி' தேடித் தோண்டப்படுகின்றன. அதனைத் தடுக்க அரசாங்கத்தினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா? அது குறித்து அரசு கவனத்தில் கொள்வது எப்போது?

இறந்த உறவுகளின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை சடங்குகளும் மன அமைதிக்கான வழிமுறைகளில் ஒன்றே.

தமது உறவுகளை இழந்தவர்கள் ஒன்றிணைந்து, அத்தகைய சாந்திப் பிரார்த்தனையில் ஈடுபடுவது வழமை. அதனூடு வாழ்பவர்களின் மனச் சாந்திக்கு வழி பிறக்கும் என்பது உளவியல் உண்மை. அதனை அரசும் அதன் அதிகாரிகளும் பகுத்து உணர்வது எப்போது?

தடுத்து வைக்கப்பட்டோர் குடும்பம், போரினால் விதவையானோர், போரழிவுகளை நேரடியாகக் கண்ட சிறார்கள் போன்றோர் , மிகுந்த மன உளைச்சலுக்கும், மன அழுத்தங்களுக்கும் ஆளானவர்களில் முக்கிய இடம் பெறுகின்றனர்.

தமது குடும்பத்தை நல்ல நிலையில் வைத்திருக்க இயலவில்லையே என்ற இயலாமையும், இத்தகைய உள முறிவிற்குக் காரணம் என்பதனைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

போதிய வருமானம் ஈட்டும் வழிவகைகள் , வேலை வாய்ப்புக்கள், மகிழ்ச்சிகரமான கற்றல் சூழல், பாதுகாப்பான உணர்வு போன்றன வழங்கப்பட்டாலே, கிடைத்தாலே, ஐம்பது வீதத்திற்கும் மேலான உளநோய் நீங்கிவிடும் என்று கருதப்படுகிறது. பாதிப்புற்றவர்களுக்கு உளச் சிகிச்சை முறைகளை உரிய பரிமாணத்தில் வழங்குவதும் அவர்களின் மனப் பாதிப்புக்களை பெரிய அளவில் அகற்றும்.

அரசும், அதன் அதிகாரிகளும் மனதார்ந்த முறையில் இவற்றில் அக்கறை கொள்வார்களா?.... எப்போது...?

# பொறிக்குள் இம்முறை சிக்குமா இலங்கை?

வசந் அற்புதன்

இலங்கையில் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச போர்க்குற்ற விசாரணையைக் கோரும் தீர்மானத்தை முன்வைப்பதற்கான முன்னாயத்தங்களில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனிதஉரிமைகள் சபையின் 25ஆவது கூட்டத் தொடரில் அமெரிக்காவின் பிடி இன்னும் இறுகும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.இதற்கு வலுச்சேர்ப்பதாகவே சர்வதேச விசாரணை கோரும் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்த கருத்து அமைகிறது.

கடந்த இரண்டு வருடங்களைப் போல் அல்லாமல் இம்முறை மிகக் கடுமையான பிரேரணையை அமெரிக்கா கொண்டு வரும் என அவர் உறுதிபடத் தெரிவித்திருக்கின்றமை தமிழ் மக்களின் மனங்களில் நம்பிக்கை விதையை விதைத்திருக்கின்றது .

### சந்தர்ப்பங்கள் வழங்கியும் சரிவரச் செய்யவில்லை

வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பதுபோல் இலங்கையின் அரசியல் நிலைமை சர்வதேசத்தில் பரிதாபமாகப் போயிருக்கிறது. இதனால் இம்முறை இலங்கைக்கு எதிரான வியூகங்கள் சற்றுப் பலமாக அமையலாம் என எதிர்வு கூறப்படுகின்றது. இலங்கை என்னதான் முயன்றாலும் இன்றைய கள நிலவரப்படி அந்த வியூகங்களை உடைத்துக்கொண்டு வெளியேவரப் போவதில்லை என்பது திண்ணம் .

இலங்கையைப் பொறுத்தவரை அமெரிக்கா பல சந்தர்ப்பங்களை வழங்கியிருந்தது. வடபகுதியிலிருந்து இராணுவம் அகற்றப்படல் வேண்டும்: மாகாண சபைகளுக்குப் பொலிஸ் காணி அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும்: வடக்குக் கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்படல் வேண்டும்: உயர் பாதுகாப்பு வலயங்கள் இல்லாதொழிக்கப்படல் வேண்டும் ஆகிய நிபந்தனைகளை விதித்து அவற்றை இலங்கை அரசு உடன் நடவடிக்கைக்குக் கொண்டு வருமாயின் மார்ச்சில் இடம்பெறவிருக்கும் தீர்மானத்தைத் தளர்த்துவதாக அமெரிக்கா அறிவித்திருந்தது. அமெரிக்காவின் இந்த நிபந்தனைகள் சாதாரணமானவை ; அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டியவை.ஆனால் இலங்கை அதனைச் செவிமடுக்கவில்லை. மாறாக, எதுவும் செய்யாமல் தப்பித்துக்கொள்ளும் வழிகளைத் தேடுவதிலேயே மும்முரமாக காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தது.

### ஜெனிவாவை எதிர் கொள்ள அரசு பெரும் பிரயத்தனம்


எனினும் அரசின் பிடி இப்பொழுது இறுகி விட்டது. அரசின் உயர்மட்ட அதிகாரிகள் அவசர அவசரமாக தங்கள் பக்கத்துக்கு வலுச்சேர்க்க வெளிநாடுகளுக்குப் பறக்கின்றனர். வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் டில்லியில் தங்கியிருந்து இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்து 82 நாடுகளின் தூதுவர்களிடம் எடுத்துரைத்து வருகின்றார்.


ஏற்கனவே இது தொடர்பாக இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்திய போதும் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மானத்தை தோற்கடிக்க எந்த வகையிலும் உதவ முடியாது என்று இந்தியா கைவிரித்து விட்டது. அமெரிக்கா, பிரிட்டன், கனடாவின் நிலைமை பற்றிச் சொல்லத் தேவையில்லை. இந்த நிலைமையில் வெளிநாடுகளில் மட்டுமன்றி ஜெனிவாவை எதிர் கொள்ள உள்நாட்டிலும் பல இராஜதந்திர முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

வடபகுதியில் படை முகாம்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருகிறது. இதன் நோக்கம் படையினரின் எண்ணிக்கையைக் குறைப்பது அல்ல. மாறாக, படை முகாம்களின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் படையினரின் வசம் இருந்த மக்களின் வீடுகளையும் அவர்களின் நிலங்களையும் அவர்களிடமே ஒப்படைத்து படைக்குறைப்பைச் செய்வதாக வெளி உலகுக்குக் காட்டிக் கொள்ளலாம் என நினைத்தது. அதனால் 20 வருடங்களுக்கு மேலாக படையினரின் பிடியில் இருந்த மக்களின் சில வீடுகள், காணிகளை மக்களிடம் கையளித்தது.ஆனால் அந்தப் படை முகாம்களில் இருந்த படையினர் குறைக்கப்படவில்லை. மாறாக இருந்த இடங்களை விட்டு வெளியேறி வேறு படைத்தளங்களுக்குள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதை புரியாத அளவுக்கு மக்கள் முட்டாள்கள் அல்லர்.

இது ஒருபுறம் இருக்க, மக்களின் விவசாய நிலங்களில் படையினர் மக்களுக்குப் போட்டியாக வாழ்வாதார முயற்சிகளில் விவசாய உற்பத்திகளில் ஈடுபட்டு வந்தனர். இதனால் சந்தைகளில் தமது விவசாய உற்பத்திப் பொருள்களை நியாயமான விலைக்கு விற்க முடியாது மக்கள் திண்டாடினர் .இந்நிலையில் படையினரின் மரக்கறி விற்பனைக்கு நல்லதொரு தீர்வு கிடைக்குமென யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவித்திருக்கிறார். இதுவும் ஜெனிவாவில் நல்ல பிள்ளைப் பெயர் எடுக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஒன்றாகக் கூட இருக்கலாம்.எது எப்பிடி இருப்பினும் ஜெனிவாவில், அமெரிக்கா கொண்டு வரும் எத்தகைய தீர்மானத்தையும் தோற்கடிக்கும் அளவுக்கு தற்போது இலங்கைக்கு ஐ.நா.மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் ஆதரவு தெரிவிக்கப் பின்னடிக்கும் கள நிலையே நிலவுகிறது. இதனை அரசு நன்கறியும். எனவே தான், வெற்றியோ தோல்வியோ மோதிப் பார்த்து விடலாம் என்று முடிவு கட்டியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை அமெரிக்கா பல சந்தர்ப்பங்களை வழங்கியிருந்தது. வடபகுதியிலிருந்து இராணுவம் அகற்றப்படல் வேண்டும்: மாகாண சபைகளுக்குப் பொலிஸ் காணி அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டும்: வடக்குக் கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப் படல் வேண்டும்: உயர் பாதுகாப்பு வலயங்கள் இல்லாதொழிக்கப்படல் வேண்டும் ஆகிய நிபந்தனைகளை விதித்து அவற்றை இலங்கை அரசு உடன் நடவடிக்கைக்குக் கொண்டு வருமாயின் மார்ச்சில்' இடம்பெற விருக்கும் தீர்மானத்தைத் தளர்த்து வதாக அமெரிக்கா அறிவித்திருந்தது. அமெரிக்காவின் இந்த நிபந்தனைகள் சாதாரணமானவை; அனைவராலும் ஏற்றுக் கொள் ளப்படவேண்டியவை.





# உலக சமாதானம் வேண்டி செய்யப்படும் யாகங்கள்



(வடபிராந்திய சத்திய சாயிசேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் உலக அமைதி, சுபீட்சம் வேண்டி ஒழுங்கு செய்யப்பட்ட ருத்ர ஏகாதசினி மகா (யக்ஞ) யாக நிகழ்வு இன்று 02.02.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு கோப்பாய் சாயி சுதா சத்தியசாயி பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.)

வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி

யக்ஞம் ஒரு வேதக் கிரியை. இது உலக சமாதானத்துக்கும், உலக சுபீட்சத்துக்குமாகச் செய்யப்படுவது. இதற்கான கிரியை ஒழுங்குகள் இதன் தத்துவங்கள் யாவும் யசுர் வேதத்தில் தரப்பட்டுள்ளன. யக்ஞம், யாகம், அத்வாரியம் என்ற மூன்று சொற்களும் ஒரே கருத்தையே குறிக்கின்றன. பேரறிவை அடையும் முயற்சி அல்லது வழியே யக்ஞம் என்ற சொல்லின் கருத்தாகும். அதாவது ஆன்மிகப் பாதையில் முன்னேறி மானிடத்தின் நலனைப் பெறுதலாகும். யக்ஞம் என்ற சொல்லின் இன்னொரு கருத்து தியாகம் அல்லது ஆகுதி அல்லது பலியிடுதல் என்பதாகும். ஆழ்ந்த பரந்த கருத்தில் அது இறைவனையே குறிக்கும். இறைவனை அடையும் பாதையைக் குறிக்கும். அறநெறி வாழ்வையும் குறிக்கும். யக்ஞம் என்ற செயற்பாட்டில், அக்கினி ஹோமம், மந்திர உச்சாடனம் (வேத பாராயணம்), தபம் (விரதம் முதலிய அனுஷ்டானங்கள்), அபிஷேகம் (உருத்திரனுக்கே ஆராதனை) முதலியன அடங்கும்.

ஹோம குண்டம் வேதிகா அல்லது பீடம் ஆகியன எவ்வாறு செய்யப்பட வேண்டுமென்று யசுர் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அக்கினியைப் பல்வேறு விதமாக, பல்வேறு தேவைகளுக்காக உண்டாக்குகின்றோம்.

> யக்ஞம் என்ற சொல்லின் கருத்தாகும். அதாவது ஆன்மிகப் பாதையில் முன்னேறி மானிடத்தின் நலனைப் பெறுதலாகும். யக்ஞம் என்ற சொல்லின் இன்னொரு கருத்து தியாகம் அல்லது ஆகுதி அல்லது பலியிடுதல் என்பதாகும். ஆழ்ந்த பரந்த கருத்தில் அது இறைவனையே குறிக்கும். இறைவனை அடையும் பாதையைக் குறிக்கும். அறநெறி வாழ்வையும் குறிக்கும்.

இவையெல்லாம் அக்கினி ஹோமம் ஆகா. இதை உண்டாக்கும் முறை, அக்கினியை வளர்ப்பதற்கு வேதத்தில் கூறப்பட்ட சுள்ளிகள், பசுநெய் ஆகியவற்றையே உபயோகிக்க வேண்டும். இதைச் செய்கின்றவர்கள் தகைமை உடையவர்களாக இருக்க வேண்டும். அக்கினியை வளர்க்கும் பொழுது மந்திர உச்சாடனம் செய்ய வேண்டும். பின்பு பால், தயிர், நெய், சோம இரசம், திரவியப் பொருள்கள், வஸ்திரம், விலையுயர்ந்த ஆபரணங்கள் அல்லது உலோகங்கள் என்பவற்றை ஆகுதி செய்ய வேண்டும். இதன் உள்ளார்த்தம் எமது ஆசைகளையும், மிருகக் குணங்களையும் பலியிடுவதேயாகும். அக்கினியில் இடுவதன் அர்த்தம் அக்கினி என்றுமே தூய்மையானது. இங்கே அக்கினி தேவன் ஒரு தூதுவனாகின்றான். நாம் எந்தத் தெய்வத்துக்குப் போய்ச் சேர வேண்டுமென்று கேட்கின்றோமோ, அத் தெய்வத்திடம் அவை கொண்டு சேர்க்கப்படும். மகா ருத்ர யக்ஞத்தில், ருத்ரம் (ருமகம், சமகம்) புருஷ சுக்தம் ஆகியவையே பிரதானமாகப் பாராயணம் செய்யப்படும். அபிஷேகம் உருத்திரனுக்கே ஆராதனையாகும். இங்கே உபயோகிக்கப்படும் நீர், மிருத்தும் ஜய மந்திர, உச்சாடத்தினால் தூய்மையாக்கப்பட்டதேயாகும். எத்தனை தடவை உருத்திரம் உச்சாடனம் செய்யப்படுகின்றதோ, அதைப் பொறுத்து யக்ஞத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. வேத மந்திரங்களால் எழும் ஒலியும், அக்கினி ஹோமத்தில் எழும் புகையும், அடியார்களின் மன ஒருமையையும், மனிதரையும், சுற்றாடலையும் தூய்மைப்படுத்துகின்றன. இதில் சுயநலமே இல்லை. உருத்திர யக்ஞம், ஏகாதச உருத்திரம், மகா உருத்திரம், அதி மகா உருத்திரம், என்ற இவை 11 தடவைகள் உச்சரிக்கப்படுவதன் அர்த்தம், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், மனம் ஆகியவற்றைத் தூய்மைப்படுத்துவதற்கேயாகும்.

விளக்கமில்லாதவர்கள், இதில் பலியிடும் பொருள்கள் யாவற்றையும் வறியவர்களுக்குக் கொடுக்கலாமே என்று அபிப்பிராயம் கொள்ளலாம். இது வீண் செயலல்ல. இது ஒரு பெரிய முதலீடு. பயன் பன்மடங்கால் அதிகரிக்கும். விவசாயி வயலில் தானியத்தை விதைத்தால் அது வீண்போகாமல் பல மடங்கு தானியத்தைத் தருவது போன்றதாகும் இது.

யக்ஞம், என்பது அந்தர் யக்ஞம், பகிர் யக்ஞம் என இரு வகைப்படும். முதலாவது உளத் தூய்மையைக் குறிக்கின்றது. இரண் டாவது புறத்தூய்மையைக் குறிக்கின்றது. இதன் நோக்கம், ஆண்டவனுக்கு, மனம் வாக்கு, காயம் ஆகியவற்றின் தூய்மையுடன் நன்றி செலுத்தும் வழிபாடேயாகும்.

ஹவிர் யக்ஞம், சோம யக்ஞம், பகா யக்ஞம் என யக்ஞம் மூன்று நிலைகளில் செய்யப்படும். இவற்றை வேதம் தெரிந்தவர்களே நடத்தலாம். யசுர் வேதம் சாதாரண மக்களுக்காக ஐந்து விதமான யக்ஞங்களைக் குறித்துள்ளது. இவை வேதம் தெரியாதவர்களாலும் செய்யப்படலாம்.

*தேவயக்ஞம்- இறைவனைப் பய பக்தியுடன் வழிபடல்.*

*ரிஷி யக்ஞம்- அறநெறி வாழ்வுக்கான வழி முறைகளைத் தந்த ரிஷிகளுக்கு வழிபாடு.*

*பித்ரு யக்ஞம்- பெற்றோர்களுக்குச் செய்யும் வழிபாடு.*

*மானுஷய யக்ஞம்- வறியவர்களுக்கு ஆற்றும் சேவை.*

*பூதயக்ஞம்- வீட்டிலுள்ள வளர்ப்புப் பிராணிகளுக்கு வழிபாடு.*

*யசுர் வேதத்தில் விசேடமான பெரியளவில் செய்யப்படும் யக்ஞம் (யாகம்) என*

இராஜசூய யாகம், அஸ்வமேத யாகம், சர்வமேத யாகம் என்பவை குறிப்பிடப்பட்டுள்ளன. இவை அரசர்கள், சக்கரவர்த்திகள், செல்வந்தர்களாலேயே நடத்தப்படும். எங்களின் நன்மைக்காகவே இந்த யாகங்கள் செய்யப்படுகின்றன. எங்களின் வாழ்க்கையையே நாம் யக்ஞமாக்க வேண்டும்.



# எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்




அருவி

மனிதர்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த கற்காலத்தில் இருந்து அவர்களது வாழ்க்கை ஆரம்பம் ஆகிறது. அவர்கள் கிடைத்ததை உண்டு வயிறு வளர்த்தனர்; தங்கள் கருத்துகளைச் சைகைகள் மூலம் தெரிவித்துக் கொண்டனர். பின்னர் உணவுகளைப் பக்குவப்படுத்தி உண்பதற்கும், கருத்துகளைத் தெரிவிப்பதற்கு ஒலிக்குறிப்புக்களைப் பயன்படுத்துவதற்கும் தெரிந்து கொண்டனர்.

அவர்கள் பேசத்தொடங்கிய காலமே நாகரிகத்தின் தொடக்கம் எனலாம். ஒலிக்குறிப்புகள் மொழியாக மாறிய காலமே நாகரிக வளர்ச்சியாகும். பேச்சு மொழிக்கு எழுத்து வடிவம் உருவான காலமே நாகரிகத்தின் உச்சம் என்று மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

பிறந்த குழந்தை அப்படியே விடப்பட்டால் அது ஓர் அரக்கனாகவே மாறிவிடும். அந்தக் குழந்தையை மனிதனாக மாற்றுவது கல்வியாகும். கல்வியின் கருவியே எண்ணும் எழுத்தும். மனித குலம் இந்த நிலையை அடைவதற்கு எவ்வளவு காலம் ஆகியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தால் வியப்பே ஏற்படுகிறது.

இன்று, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மக்களிடம் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. தாங்கள் எவ்வளவு துன்பப்பட்டாலும், தங்கள் பிள்ளைகளுக்குத் தரமான கல்வியைத் தந்துவிட வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

இதற்கு என்ன காரணம்? தாம் படுகின்ற துன்பத்தைத் தமது பிள்ளைகள் படக்கூடாது என்பதுதான்; அத்துடன் தாம் துன்பப்படுவதற்குக் காரணம், இளமையில் கல்வி கற்காமையே என்று காலங்கடந்து புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

பிறக்கும்போது அனைவரும் சமமாகவே பிறந்து இருந்தாலும், வாழும் காலத்தில் அவர்களை உயர்த்தி நிறுத்துவது கல்விதான். இக்காலத்தில் மட்டுமல்ல, எக்காலத்திலும் இதுதான் சமுதாய நிலை.

ஒரு தாயின் வயிற்றில் பிறந்த பலருள்ளும், மூத்தவனை வருக என வரவேற்காமல், கல்வியறிவு மிக்கவனையே உலகம் வரவேற்கும் என்று சங்க இலக்கியமாகிய புறநானூறும் பாடுகிறது. கற்றோருக்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு என்று பிற்கால இலக்கியங்களும் பேசுகின்றன.

உலகம் தோன்றிய காலத்தில் இருந்தே அறிவுக்கும், அறியாமைக்கும் ஒரு போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த முடிவில்லாத போராட்டத்தில் அறியாமை தோல்வியடைந்து கொண்டே இருக்கிறது. அறிவு கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிக்கொண்டே இருக்கிறது.

வெளிச்சம் வரவர இருட்டு ஓடி ஒளிவதைப் போல, அறிவு வளரவளர அறியாமை அழிந்துகொண்டே இருக்கிறது. இந்தப் போராட்டம் தொடரும்.

கல்வியா? செல்வமா? என்று பட்டிமன்றம் நடத்திய காலம் இப்போது மாறிவிட்டது. கல்வி வணிகமயமாக மாறிவிட்ட நிலையில் கல்வியைப் பெறவும் செல்வமே தேவை என்ற கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

மனிதன் பிறந்த நிலையிலேயே விடப்பட்டால் அவன் மனிதனாக இருக்க மாட்டான். அவன் வாழும் சூழல் அவனது இயற்கைத் தன்மையைச் சூறையாடி விடும். பலபேர் நடந்து செல்லக்கூடிய பாதையில் செடியை வளர விட்டால் அது அழிந்துபோகும். கல்வியற்ற மனிதனும் அழிபட்டுத்தான் போவான்...

> பிறந்த குழந்தை அப்படியே விடப்பட்டால் அது ஓர் அரக்கனாகவே மாறிவிடும். அந்தக் குழந்தையை மனிதனாக மாற்றுவது கல்வி யாகும். கல்வியின் கருவியே எண்ணும் எழுத்தும். மனித குலம் இந்த நிலையை அடைவதற்கு எவ்வளவு காலம் ஆகியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தால் வியப்பே ஏற்படுகிறது.

என்றார் குழந்தைகளின் கல்வியைப் பற்றி முதன்முதலில் ஆராய்ந்த சிந்தனையாளரூசோ.

வாழப் பிறந்த மனிதனை வாழ வைப்பது கல்வியாகும்; எனவே எண்ணும் எழுத்தும் கண்எனத் தகும்.

## ஸ்பின்னர் தேவை

அலுமினியத் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள ஸ்பின்னர் தேவை.
தொடர்பு கொள்ளவும்.
வாகீசன் விற்பனை நிலையம்,
249, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEPLEX - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres Web: www.ceylontheatres.com

## வீடு வாடகைக்குண்டு

அம்மன் கோயிலடி, கோண்டாவிலில் சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 296 9638, 077 653 7716 (44252) (7.6.3)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் பிரதான வீதியில் இருந்து 300m தொலைவில் உத்தேசம் ஆறு பரப்பு விஸ்தீரணமுடைய வெறும் காணியும், கிணறும் நல்ல சுற்றாடலில் விற்பனைக்கு ண்டு.
தொடர்பு: 077 396 0224, 075 039 5884 (44219) (7.6.3)

## தேவை

சகலவிதமான நெல் மற்றும் தானிய வகைகள் கொள்முதல் செய்யப்படும்.
தொடர்பு: சிவா பிறதர்ஸ்
இல.205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:077 772 2215 (44177) (4.6.3)

## வீடு வாடகைக்கு

32, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கில் நவீன வசதிகளுடன் 5 அறைகள் வீடு (2 attached bathroom) வாடகைக்குண்டு.
நிறுவனங்களும் விரும்பத்தக்கது.
தொடர்பு:077 398 8612/077 351 0587

## மலிவு விற்பனை

ஹோட்டல்களுக்கு உகந்த தளபாடங்கள் (பாவித்தவை) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 568 5135/077 958 9786

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1985, ரேவதி, 2இல் சூரியன், செவ்வாய், கிரகபாவம் 25, பிரபல தனியார் நிறுவனங்களின் உரிமை யாளரும், உயர் பதவி வகிப்பவருமான மணமகனுக்கு பெற்றோர் படித்த, பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கின்றனர். சாதக குறிப்பு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும்.
விளம்பர இல. 4484,
மே/பா, உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (44133) (46.3.6)

## விற்பனைக்கு

சனல், ஜமுனாபாரி கிடாய்,மறி ஆடுகள் மற்றும் மைனர் கார் விற்பனைக் குள்ளன.
(29764)(45.6.3) தொடர்பு: 077 168 5179

## மணமகன் தேவை

மன்னார் R.C, 1987இல் பிறந்தவர். 5' 2" உயரம். B.A.பட்டதாரி. தற்போது அரச உத்தியோகத்தில் இருக்கிறார். இவருக்கு வெளிநாட்டு (P.R) நிரந்தர வதிவிடம் உடைய R.C. மணமகன் தேவை.
தொடர்பு: 077 586 9600

## காணி விற்பனைக்கு

கைதடி நுணாவில் A9 வீதியில் 11 பரப்பு 14.79 குழி காணி விற்பனைக்கு.
விலை பரப்புக்கு 3½ இலட்சம் ரூபா
தொடர்பு:076 609 5662, 077 977 9173,
(42437)(4.6.3) 021 300 8944

## வகுப்பு (கணிதம்)

தரம் 5 முதல் O/L வரையான வகுப் புகளுக்கு கணிதம் வீடு வந்து தனிப்பட்ட, குழுவான முறையில் பல வருட அனுபவமிக்க ஆசிரியரால் சிறந்த முறையில் கற்பிக்கப்படும். (44202) (3.6.4)
தொடர்பு:077 937 0228

## அறைகள் நாள் வாடகைக்கு

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=, நால்வர் 2000/= (Attached Bathroom)
Hotel Villa City,
422, Galle Road, Wellawatta.
T.P : 072 255 2222 (சி/11876)(7.6.3)

## விற்பனைக்கு

முதலாம் தவணைக்கான மாதிரி வினாத் தாள்கள் விடைகளுடன். அகல்விழி -தரம்-1, ஆரருவி தரம்-2, இளமதி தரம்-3. விலை 150/= பிரபல புத்தக சாலைகளில் கிடைக்கும். (44178) (4.6.3)
காயத்திரி பப்ளிகேசன், 077 789 2028

## வீடு வாடகைக்கு

பலாலி வீதியில் திருநெல்வேலி விவசாய பாடசாலைக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 071 415 9809 (44215) (7.6.3)

## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் (கொழும்புத் துறை இந்துக் கல்லூரிக்கு அருகில்) 2 பரப்புக் காணி யில் அமைந்துள்ள 3 அறைகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. (44194)(7.6.3) தொடர்பு : 077 614 6434

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, 21, சிவன் வீதி Central Nursing Homeஇற்கு அருகில், 1¾ பரப்புடன் கூடிய 5 அறை, 2 குளியலறை, 3 கழிவறையுடன் வீடு வளவும், அதற்கு அருகில் 1¾ பரப்பில் கிணறுடன் கூடிய வெறும்காணியும் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 076 613 4475/077 674 8302

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் நியூ மார்க்கற்றுக்கு முன்னால் கடை வாடகைக் குண்டு. எல்லாவிதமான வியாபாரத்துக்கும் ஏற்றது. நீளம் 185அடி. பின்புற வீதியும் பாவிக்கலாம்.
தொடர்பு : 077 629 3893 (44221) (7.6.3)

## மணமகள் தேவை

மட்டக்களப்பு, யாழ் இந்து, ஆயிலியம், 38 வயது. 5' 4" உயரம், UK PR. Electronic Engineer மகனுக்கு நற்குணமுள்ள ஓரளவு படித்த மணமகள் உள்ளூரிலோ UKலோ Europ பிலோ தேவை.
தொடர்பு:021 492 5047 (44192) (3.6.4)
Email- vijey 40 @ hot mail.com

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கந்தர்மடம் ஆத்திசூடி வீதியில் ஒரு பரப்பு பதினொரு குழி (பரப்பு 1 குழி 11) காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. (43193)(7.6.3)
தொடர்பு: 077 614 6434

## வாடகைக்கு

பகுதி வீடு அல்லது அறைகள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு திருநெல்வேலி சட்டநாதர் வீதியில்.

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி பெரிய அரசடி வீதி, ஆசிரியர் வீதியில் பலா, தென்னை மரங் களுடன் கூடிய 3¾ பரப்பு, 7பரப்புக் காணிகள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 076 668 8180 (29794)(46.6.3)

## VACANCY FOR TRAINEE ACCOUNTANTS & TRAINEE ASSISTANT ACCOUNTANTS

*Incredible opportunity has been created for Trainee Accountants & Trainee Assistant Accountants to join an established Group of companies based in Jaffna. The successful candidate will require to have the following qualification.*

*Applicant's skill set require having strong Microsoft Office and Excel skills, as well as strong numerical, good command in English and communication abilities. Knowledge in sinhala is an added Qualification.*

### TRAINEE ACCOUNTANTS

*Fully Qualified CHARTERED or CIMA Accountancy.*

### TRAINEE ASSISTANT ACCOUNTANTS

*Graduate of a University B.B.A-FM (Spl), B.Com-Acct (Spl) with class or AAT or HNDA with considerable experience.*

In return, the company is offering to Select the best Trainees to absob in to the permanent carder. The role is within a friendly team of professionals offering you a challenging but rewarding environment.

This is an urgent vacancy so please state your interest With in 7 days :

*The Group Finance Director,*
*Lukshmee Group of Companies,*
*23/1,4th Lane, Brown Road, Jaffna.*

(C/11343)

*Email : agencylukshmee@gmail.com*

SRI LANKA INSTITUTE OF CREDIT MANAGEMENT

## உயர்தரத்தின் பின்னர் வேகமாக வளர்ந்து வரும் நிதி துறையில் தொழில் வாய்ப்புகள்

ஸ்ரீ லங்கா இன்ஸ்ட்டியுட் ஒப் கிரெடிட் மெனேஜ்மன்ட் (Sri Lanka Institute of Credit Management) ஊடாக முன்னெடுக்கும் உயர்தர டிப்ளோமா/ நிதி முகாமைத்துவத்தில் டிப்ளோமா கற்கை நெறிகளை தொடர்வதன் மூலமாக நிதியியல் துறையில் முன்னனி வாய்ந்த நிறுவனங்களில் உத்தரவாதபடுத்தப்பட்ட தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொள்ளலாம்



Classes in Tamil Medium

தமிழ் மொழியில

(SLICM) ஸ்ரீ லங்கா இன்ஸ்ட்டியுட் பாராளுமன்ற கட்டளைச் சட்ட இலக்கம் 7இன்2000 ற்கமைய தாபிக்கப்பட்டது.

- SLICM இன் இணை உறுப்பினர்களிலொருவராக வருவதுடன் AICM இன் இணைக்கப்பட்ட சிறப்புரிமைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

▲

- உயர்தர டிப்ளோமா / நிதி முகாமைத்துவத்தில் டிப்ளோமா மற்றும் பிரசித்தி பெற்ற சிறந்த நிதி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு (9 மாதங்கள்)

▲

- நிதி முகாமைத்துவத்தில் முதலாம் படிநிலை டிப்ளோமா சான்றிதழ மற்றும் பிரசித்தி பெற்ற சிறந்த நிதி நிறுவனங்களில் வேலை வாய்ப்பு (6 மாதங்கள்)

▲

- நிதி முகாமைத்துவத்தில் ஆரம்ப கட்ட சான்றிதழ் (1.5 மாதங்கள்)

▲

- உயர்தர நிறைவு

### பதிவு செய்து கொள்வதற்கான விபரங்கள

ஆரம்ப திகதி - 16 மார்ச் 2014 விண்ணப்ப முடிவு திகதி -25 பெப்ரவரி 2014
விரிவுரைகள் ஆற்றப்படும் இடம் - "EWIS Career Training Centre;",
இல 53, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
பயிற்சி கட்டண - முதலாம் படிமுறை டிப்ளோமா மட்டம்; ரூ.20,000 ;
இரண்டாம் படிமுறை டிப்ளோமா மட்டம் ரூ.25,000
SLICM கட்டணம் - பதிவுக்கட்டணம் ரூ.3000, முதலாம் படிமுறை டிப்ளோமா மட்டம் பரீட்சை ரூ.7500, இரண்டாம் படிமுறை டிப்ளோமா மட்டம் பரீட்சை ரூ.7500

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் : 021 7204204

**SLICM இன் இணைத் தொழில் தருணர்கள்**
(இந் நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்ட வகையில் நிதியியல் சேவை சார்ந்த துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படும)

LANKA ORIX FINANCE (An LOLC Group Company)
ARPICO FINANCE COMPANY PLC
softlogic Finance
இன்னும் அதிக அதிகமாக
BARTLEETFINANCE
Since 1956 Alliance Finance COMPANY PLC
CAPITAL LEASING

(C/11367)

# டொல்பின் மீனைத் திருமணம் முடித்த பெண்...




மனிதர்களின் விசித்திரமான திரு மணங்கள் குறித்து பல்வேறு தக வல்கள் அன்றாடம் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்தவகை யில் இங்கு தரப்படும் விடயம் டொல் பின் மீனை திருமணம் செய்த ஒரு பெண் பற்றிய செய்தி. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் சிரோன் என்றழைக்கப்படும் வசதி படைத்த குடும்பத்தில் பிறந்த பெண் ஒருவர் சிண்டி எனப்படும் ஒரு டால்பின் மீனு டன் திருமண பந்தத்தில் இணைந்தார். 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 28 ஆம் திகதி சிண்டி மற்றும் சிரோன் தம்பதியினரின் திருமணம் இனிதே நிறைவு பெற்றது. ஆனால் டொல்பின் மீனுடன் சிரோனுக்கு பல நாள்கள் குடும்பம் நடத்தக் கொடுத்துவைக்கவில்லை. திரு மணம் நிறைவு பெற்று ஓர் ஆண்டு கழித்து ஜுலை மாதம் சிண்டி இறந்து போனது. பின்னர் அந்தப் பெண் விதவையானாள் என்று தெரிவிக்கப்படுகிறது.






# ஏழாயிரம் ஆண்டுக்கு முன் வாழ்ந்த

# வெள்ளை நிற ஆதிவாசி



ஆபிரிக்கா கண்டத்திலிருந்து 45 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய கண்டத்துக்கு இடம் பெயர்ந்திருந்ததாகக் கருதப் படும் முந்தைய கால மனிதர்க ளின் தோல் வெள்ளையாக இருந் திருக்கலாம் என்று ஆராய்ச்சி யாளர்கள் கருதினர். இந்நிலையில், ஸ்பெயின் நாட் டின் வடமேற்கிலுள்ள மலைக் குகையிலிருந்து கடந்த 2006 ஆம் ஆண்டு இரண்டு எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அதை நன்றாகப் பாதுகாத்த ஆராய்ச்சியாளர்கள், அந்த மனி தர்களின் பற்களில் இருந்து டி. என்.ஏ.வையும், ஒருவரது மர பணுவையும் எடுத்து சோதித்துப் பார்த்தனர். அப்போது முந்தைய ஐரோப்பிய காட்டுவாசிகள், சுவீ டன், பின்லாந்து மக்களின் மர பணுக்க ளுக்கு ஒத்துக்காணப் பட்டதைக் கண்டுபிடித்தனர்.

7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்கலாம் என்று நம் பப்படும் அவர்களது, கண்கள் நீலநிறத்திலும், மரபணுக்களின் படி தோல் கறுப்பாகவும், முடி கறுப்பாகவோ அல்லது பழுப்பு நிறமாகவோ இருந்திருக்கின் றன என்று கூறியுள்ளனர். இது தொடர்பான உருவப்படத்தை யும் அவர்கள் வெளியிட்டுள்ளனர். ஆனால் முந்தைய வேட்டை யாடிய ஐரோப்பி யர்கள் வெள்ளை யாக இருந்திருக் கலாம் என்று எண்ணி யிருந்த நிலையில், இந்த ஆராய்ச்சி முடிவுகள் அவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தி யுள்ளன. மேலும் இந்த மரபணு ஆராய்ச்சி யானது காட்டு வாசிகளின், வேட்டை வாழ்க்கை எப்படி விவசாய வாழ்க்கைக்கு மாறி யது என்பது பற்றிய ஒரு அனு மானத் தையும் கொடுத்திருக் கிறது என்று ஆராய்ச்சியாளர் கள் கூறியுள்ளனர்.

PRIME LANDS (PVT) LTD.
*Committed to Creat a Better Place on Earth*



PRIME சுவர்க்கபுரி
மானிப்பாய்

## பெருமைக்குரிய சமூகத்தினருடன் உங்கள் வாழ்க்கையை சுபீட்சமாகவும் மகிழ்ச்சியாகவும் ஆரம்பியுங்கள்!

இலங்கையில் வீடு, காணி விற்பனை வரலாற்றில் தொடர்ந்து 19 வருடங்களாக "ரியல் லீடர்" என்ற உயர் நாமத்துடன் திகழ்ந்து கொண்டிருக்கும் பிரைம் லேண்ட்ஸ் குழுமம் யாழ் மக்களுக்கு உயர் சேவையை வழங்குவதற்காக யாழ் மண்ணில் தடம் பதிப்பதோடு,

யாழின் பேரின்ப நகரமான மானிப்பாயில் சகல வசதிகளுடன் உங்கள் வாழ்கையை வளமாக ஆரம்பித்திட பெறுமதியான 8 காணித் தொகுதிகளை உங்களுக்கு வழங்குகின்றது.




PrimeGrameen
PRIME HOMES

**பரப்புகள் விசேட விலையில்**

**CALL- 0713 756 025, 0710 292 030**

இல. 75, டீ. எஸ் சேனாநாயக்க மாவத்தை, பொரல்லை, கொழும்பு 08. 0112 699 822, www.primelands.lk

# குங்குமப்பூ: அறிந்ததும் அறியாததும்



இந்தியாவின் காஷ்மீர் பகுதி உயர் ரக குங்குமப்பூ விளைச் சலுக்குப் பிரபலமானது.

உலகிலேயே மிகவும் விலை கூடிய பொருளான. நறுமணம் வீசும் இந்தக் குங்குமப்பூ எவ்வாறு பயிராகி அறுவடை செய்யப் படுகிறது என்பது குறித்து எம்மில் பல ருக்கும் தெரிந்திருக்க வாய்ப் பில்லை.

வர்த்தக ரீதியாக குங்குமப்பூ இந்தியா. ஸ்பெயின் மற்றும் ஈரானில் பயிரிடப் படுகிறது. ஆனால், காஷ்மீரில் பயிரா கும் குங்குமப்பூவே மிகவும் விலையுயர்ந்தது. குங்குமப்பூ முதலில் கிரேக் கத்தில் பயிரி டப்பட்டாலும், காஷ் மீரில் நூற்றுக்கணக் கான ஆண்டுகளாக விளை விக்கப் படுகிறது.

பனி படர்ந்த மலையழகைக் காண காஷ் மீர் வரும் சுற் றுலாப் பயணிகள் ஊதா நிறத்தில் நறுமணத்துடன் பூக்கும் குங் குமப் பூக்களைக் கண்டு களிக்காமல் செல்வதில்லை.

காஷ்மீரின் தலைநகரான ஸ்ரீநகரிலி ருந்து சுமார் அரை மணி நேரப் பயணத்தி லுள்ள சிறிய நகரான பாம் போரில் ஆயிரக்கணக்கான ஹெக் ரேயரில் குங் குமப்பூ பயிரிடப் படுகிறது.

காஷ்மீரின் குங்குமப்பூ நகர் என்று இந் நகரம் அழைக்கப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

ஊதா நிறமான அந்தப் பூவிலி ருந்து பயன் பாட்டிற்காக அதன் நடுவிலுள்ள மெல்லிய நூல்போன்ற இழை பிரித்தெடுக்கப்படுகிறது.

உணவு மற்றும் இதர தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் குங்கும்ப்பூ இழைகளை சேகரிக்க 75.000 இற்கும் அதிகமான பூக்கள் தேவைப்படுகின்றன.

க்ரோகஸ் என்று அழைக் கப்படும் இந்தப்



பூக்கள் காஷ்மீர்பகுதியில் உணவு மற்றும் மருந்துகளில் பெரிய ளவில் பயன்படுத்தப்படுகின்றன.

குங்குமப்பூவுக்கு ஆண்க ளின் வீரியத்தை அதிகரிக்கும் தன்மை உண்டு எனவும் சிலர் நம்புகின்றனர்.

குங்குமப்பூ சந்தையில் மலிவாகக் கிடைக்கும் ஒரு பொருளல்ல. நன்கு காய வைக்கப்பட்ட ஒரு கிலோ குங்குமப்பூ சந்தையில் சுமார் மூவா யிரம் டொலர்களுக்கு விற் கப்படுகிறது காஷ்மீரில் மிகவும் பிரபலமாக இருக்கும். நறுமணம் வீசும் கேவா எனும் ஒரு வகைத் தேநீர் தயாரிப்பில் குங்குமப்பூ முக்கியமாகப் பயன்படுத்தப் படுகிறது.

அந்த வகை தேநீருக்கு வண்ணம் சேர்ப்பதற்கும் குங்குமப்பூ பயன்படுத்தப்படு கிறது: கறுவாப்பட்டை(சினமன்), ஏலம் மற்றும் குங்குமப்பூ உட்பட பல நறுமணப் பொருள்களை கொதிக்க வைத்து கேவா தேநீர் தயாரிக்கப் படுகிறது. பின்னர் தேன் மற் றும் பாதாம் துருவல்கள் தூவப்பட்டு புத்துணர்ச்சியூட்டும் ஒரு பானமாகப் பரி மாறப்படுகிறது.

**வர்த்தக ரீதியாக குங்குமப்பூ இந்தியா, ஸ்பெயின் மற்றும் ஈரானில் பயிரிடப் படுகிறது. ஆனால், காஷ்மீரில் பயிராகும் குங்குமப்பூவே மிகவும் விலையுயர்ந்தது. குங்குமப்பூ முதலில் கிரேக் கத்தில் பயிரி டப்பட்டாலும், காஷ் மீரில் நூற்றுக்கணக் கான ஆண்டுகளாக விளை விக்கப்படுகிறது.**



Sri Lanka Telecom
ஒரே தேசம். ஒரே குரல்.

எல்லைகளைக் கடந்து
இணையத்தில் நுழைந்திடுங்கள்!




மேலே காட்டப்பட்டுள்ள SLT புறோட்பேண்ட் பக்கேஜ்களை பயன்படுத்தும் எமது தற்போதைய மற்றும் புதிய வாடிக்கையாளர்களுக்காக ஜனவரி 01 முதல் மேலதிக GB பாவனை அளவு வழங்கப்படுகின்றது. கட்டணங்களில் எவ்வித மாற்றமும் இல்லை. SLT புறோட்பேண்ட் பக்கேஜ்களுடன் நிலையான, தடங்கலற்ற, அதிவேக இணையத்தை நீங்களும் அனுபவித்திட, இன்றே அருகிலுள்ள பிரதேச டெலிகொம் காரியாலயத்திற்கு அல்லது டெலிஷொப்பிற்கு வாருங்கள்.

பக்கேஜ் பற்றிய மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் அல்லது www.slt.lk/broadband இணையத்தளத்திற்கு செல்லுங்கள்.

1212 ஐ அழையுங்கள்

www.slt.lk | Email: 1212@sltnet.lk | Web chat: www.slt.lk (My SLT - Chat with us) | Like us on

BROADBAND

PHOENIX O&M
TRC/SLT/Promo/13/12-17

ashok STEEL
நீடித்த வலிமை



# அசோக் TMT

## அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கு அறிமுகஞ்செய்கின்றோம் அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகள். தலைமுறைகள் தாண்டி நீடித்து நிலைத்து நிற்க உங்கள் வீடுகளுக்கும் அசோக் TMT இரும்புக் கம்பிகளை உபயோகித்து, முறுக்குக் கம்பி பெறுமதியிலும், பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.112,500 + VAT

SLS 375



www.pabcbank.com
(011) 4 667 222



# 99% தாங்கள் சேமிப்புக் கணக்கின் வட்டி வீதம் எவ்வளவு எனத் தெரியாது...

CHAMPION SAVER

8% சேமிப்புக் கணக்கு

- சேமிப்புகளுக்கு 8% (8.33% வ.தே.வீ) வட்டி
- வட்டியைப் பெற்றுக்கொள்வதுடன் பணத்தேவை ஏற்படும் ஒவ்வொரு தடவையும் சேமிப்பிலிருந்து மீளப்பெறும் வசதி

(011) 4 667 222

பான் ஏஷியா வங்கி
உங்கள் சேவைக்காக

பான் ஏஷியா வங்கி ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும் - Fitch Rating 'BBB(lka)'




ஹோல்சிம்மின் புதிய வசதி அறிமுக நிகழ்வு

# புதிய செயற்றிட்டத்தின் மூலம் வலுப்பெறும் ஹோல்சிம் லங்கா

நிர்மாணத்துறையை சேர்ந்தவர்களின் மத்தியில் அதிகளவு அபிமானத்தைப் பெற்ற வர்த்தக நாமமான சங்ஸ்தா சீமெந்து. இலங்கையர்களின் நிர்மாணத்துறையில் காணப்படும் பங்குதாரர்கள் மத்தியில் வர்த்தக நாமத்தின் சிறப்பியல்புகளை எடுத்துரைக்கும் வகையில், ஹோல்சிம் லங்கா மல்டிமீடியா செயற்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது.

முழுத் தேசமும் ஒன்றிணைந்து முன்னொரு போதும் இல்லாத வகையில் அபிவிருத்தியை நோக்கி பயணிக்கும் சந்தர்ப்பத்தில், ண் ஹால்சிம் சங்ஸ்தா இலங்கைக்கு தனது சிறந்த வளங்களை பங்களிப்பு செய்வதற்கான சிறந்த வாய்ப்பை கொண்டுள்ளது. ஹோல்சிம் லங்கா, தனது புதிய செயற்திட்டத்தை சந்தையில் 2014 ஜனவரி 9ஆம் திகதி அறிமுகம் செய்யவுள்ளது.

இந்த அறிமுக நிகழ்வில் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை பிரிவின் உதவி தலைவர் நலின் கருணாரட்ன கருத்து வெளியிடுகையில், 'இந்த செயற்திட்டத்தை முன்னெடுப்பதன் மூலம், பிரதான நுகர்வோர் உள்ளம்சங்களை இனங்காண்பதற்கு கம்பனி மிகவும் விஞ்ஞானபூர்வமான வழிகாட்டலை பின்பற்றியிருந்தது. மேலும், முழு செயற்திட்டமும் முற்கூட்டியே பரிசோதித்து பின்னர் அறிமுகம் செய்யப்படுகிறது. இதன் மூலம் சரியான செய்தி பங்குதாரர்களுக்கு சென்றடையும்' என்றார்.

சீமெந்து துறையில் முன்னோடிகளாக திகழும் சங்ஸ்தா சீமெந்து, கொங்கிறீற் அமைத்தலுக்கு, சுவர்களுக்கான கற்களை பதித்தல் மற்றும் சுவர் பூச்சுக்களை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்கு உகந்த அதிசிறந்த சீமெந்தாக நிபுணர்களின் மூலம் தெரிவு செய்யப்படுகிறது. ஹோல்சிம் வாடிக்கையாளர்கள் சங்ஸ்தா சீமெந்தை பயன்படுத்துவது தொடர்பில் பெறுமதி சேர்க்கப்பட்ட தொழில்நுட்ப சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

ஹோல்சிம் புத்தாக்க மற்றும் ஆப்ளிகேஷன் நிலையத்தின் மூலமாக சங்ஸ்தா சீமெந்தை சிறப்பான முறையில் பயன்படுத்துவது தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. பிரதான ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சுயாதீன கட்டட நிர்மாணிப்பாளர்களை இந்த வசதிகளை அனுபவிக்குமாறு ஹோல்சிம் ஊக்குவிக்கிறது. (த)

# 4.5 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டும் வட்டவளை பிளான்டேஷன்



வட்டவளை பெருந்தோட்ட நிறுவனம் 2013 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஒன்பது மாத காலப்பகுதிக்குள் 4.5 பில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக அந்த நிறுவனத்தின் 2014ஆம் ஆண்டிற்கான நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது நூற்றுக்கு 8.8 வீத அதிகரிப்பு என்பதுடன் நிறுவனத்தின் தேறிய வருமானம் கடந்த வருடத்தில் 589 மில்லியனில் இருந்து 311 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த ஒன்பது மாதகாலத்திற்குள் நூற்றுக்கு 20 வீத வரை அதிகரித்த சம்பள உயர்வானது இந்த வருமானம் வீழ்ச்சியடைவதற்கு பிரதான காரணமென நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. அத்துடன் எதிர்பாராத சீரற்ற காலநிலை காரணமாக தேயிலைச் செடிகள் நாசமாகியமையும் இந்த வருமான வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்துள்ளது.

கடந்த நிதியாண்டின் மூன்றாம்: காலாண்டுடன் ஒப்பிடும்போது இந்தவருட மூன்றாம் காலாண்டுக்கு சமாந்திரமாக வருமானமானது நூற்றுக்கு 13.2 விகித அதிகரிப்பு வேகமானது 1.7 பில்லியன் வரை அதிகரித்துள்ளது.

வட்டவளை பெருந்தோட்ட நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் விஷ் கோவிந்தசாமி கருத்து தெரிவிக்கையில், நிறுவனத்தின் பாம் ஒயில் மற்றும் தேயிலை உற்பத்திகள் இந்த கலாண்டில் திருப்தியளிக்கக் கூடியதாக அமைந்தன. பல்வேறு சவால்கள் நிறைந்த வருடத்தில் புதிய உத்திகளைக் கையாண்டு பல நன்மைகளை பெற்றுக்கொள்ள முடிந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். நிறுவனத்தின் பாம் ஒய்ல் உற்பத்தியானது இந்த காலாண்டில் நூற்றுக்கு 5.4 வீதத்தினால் அதிகரித்துச் சென்றுள்ளதுடன், தேயிலை உற்பத்தியினால் ஈட்டிய வருமானமானது நூற்றுக்கு 6.7 வீதத்தால் அதிகரித்துள்ளது. (த)

# எஸ்.ஆர்.ஸ்டீல் நிறுவனம் இப்போது யாழ்.மண்ணில்

கட்டட நிர்மாணத்துக்கு முதுகெலும்பாக விளங்கும் இரும்பு உருக்கு கம்பிகளுக்கு புகழ்பெற்று விளங்கும் எஸ்.ஆர்.ஸ்டீல் நிறுவனமானது தற்போது யாழ்.மண்ணில் தனதுகாலடியினை எடுத்து வைத்துள்ளது.

இல.321, டாம் வீதி, கொழும்பு 12 இனை முகவரியாகக் கொண்ட வரையறுக்கப்பட்ட எஸ்.ஆர்.ஸ்டீல் நிறுவனமானது கட்டட நிர்மாணத்துக்கு தேவையான உருக்கு கம்பிகளான தேர்மோ தொழில்நுட்பத்தில் உருவான ரிஎம்ரி உருக்கு கம்பிகளை வழங்குவதில் புகழ்பெற்று விளங்கும் நிறுவனமாகும். இந் நிறுவனமானது 2005ஆம் ஆண்டு செல்லத்துரை ஃபிராங் ரொபின்ஸனால் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

2006ஆம் ஆண்டு மாசி மாதம் எஸ்.ஆர்.ஸ்டீல் நிறுவனமானது வத்தளையில் உருவாக்கப்பட்ட உற்பத்தி ஆலையில் சுமார் 5000 மெற்றிக் தொன் கொள்ளளவுடன் தனது உற்பத்தியினை வெற்றிகரமாக ஆரம்பித்தது.

இதைத் தொடர்ந்து 2008ஆம் ஆண்டு அதன் அடுத்த வெற்றிப் படியான மற்றுமொரு உற்பத்தி ஆலையினை உயர்தர தொழில் நுட்ப வசதிகளுடன் கொட்ட தெனியாய, திவலம்பிட்டிய நகரில் ஸ்தாபித்தது.

இதன்மமூலம் மேலும் 5000 மெற்றித் தொன் கொள்ளள வுடன் தர முயர்த்த தேர்மோ தொழில் நுட்பத்தில் உருவான ரி எம் ரி உருக்குக் கம்பிகளை வேறுபட்ட பரிமாணங்களில் சாதாரண கம்பிகளைவிட 15 வீத வலுப் பெற்றதாகவும் உற்பத்தி செய்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிறுவனத்தின் தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான எஸ்.எப். ரொபின்ஸன் தனிப்பட்ட மேற்பார் வையின் கீழ் சிறப்புத் தகைமை பெற்ற பொது முகாமையாளர்கள் செயற் படுவதுடன் தொழிற் சாலை முகாமையாளர்களாக தகைமை பெற்ற பொறியியலாளர்களும் மற்றும் தகமைபெற்றதொழில் நுட்ப, நிதியியல், மனித வள மற்றும் நிர்வாக உத்தி யோகத்தர்களும் சேவையாற்றி வருகின்றனர்.

இந்த இரு தொழிற்சாலைகளிலும் சுமார் 600 பேர் வரை பணி புரிந்து வருவதுடன் அதில் 130 பேர் இத்துறையில் வல்லுநர்களாவர். (த)



2006ஆம் ஆண்டு மாசிமாதம் எஸ்.ஆர்.ஸ்டில் நிறுவனமானது வத்தளையில் உருவாக்கப்பட்ட உற்பத்தி ஆலையில் சுமார் 5000 மெற்றிக் தொன் கொள்ளளவுடன் தன்து உற்பத்தியினை வெற்றிகரமாக ஆரம்பித்தது.

# லாப் காஸ் நிறுவனத்தின் புகை பரிசோதனை நிலையம்

சுன்னாகம் இலங்கை தேசிய சேமிப்ப வங்கிக்கு முன்னாள் லாப் காஸ் நிறுவனத்தின் வாகனங்களைப் பரிசோதனை செய்வதற்கான நிலையான புகைப்பரிசோதனை அலுவகைம் கடந்த செவ்வாய்ககிழமை 28 ஆம் திகதி முற்பகல்10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. லாப் காஸ் நிறவனத்தின் கொழும்பு தலைமையகத்தில் இருந்து வருகை தந்த பிரதம நிறைவேற்று அலுவலர் தமயந்த தர்ம ஸ்ரீவர்த்தன,செயற்பாட்டு முகாமையாளர் நளின் திசநாயக்கா,மனிதவள அலுவலர் டெறிக் பெரெரா திட்டமுகாமையாளர் சாலியதி சநாயக்கா ஆகியோர் கலந்துகொண்டு புகைப் பரிசோதனை செயல்பாட்டை ஆரம்பித்து வைத்தார்கள்.

குறிப்பிட்ட புகைப் பரிசோதனை அலுவலத்தில் எந்தப் பகுதிகளை சேர்ந்தவர்களும் உரிய முறையில புகைப் பரிசோதனையை உரிய அலவலக நாள்களில் கட்டணத்தைச் செலுத்தி செய்து கொள்ள முடியும் எனத் தெரிவித்ததுடன் எற்கனவே யாழ்ப்பாணத்தில் நிலையான அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டுச் செயல்படுவதாகவும் இது இரண்டாவது அலுவலகம் எனவும் தெரிவிக்கப்பட்டது. தினமும் காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை புகைப் பரிசோதனை நடவடிக்கைகள் இடம் பெறும் எனவும் சனிக்கிழமைகளில் பிற்பகல் 2.00 மணிவரையும் ஞாயிற்றுக் கிழமைகளில் விடுமுறை எனவும் பிரதம நிறைவேற்று அலுவலர் தமயந்த தர்ம ஸ்ரீவர்த்தன தெரிவித்துள்ளார். (த-86)



புகைப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்போது

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

தை-21 திங்கட்கிழமை 03.02.2014
திதி: சதுர்த்தி விரதம் மு.இ.8.36 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.ப. 11.22 வரை
சுபநேரம்: 12.35- 02.05 வரை
இராகுகாலம்:08.05.-09.35 வரை

**மேடம்**: கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வீடு, வாகனத்தைச் சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**இடபம்**: நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். நம்பிக்கைக்குரியவரை கலந்தாலோசித்து வருங்காலம் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மிதுனம்**: கடந்த இரண்டு நாள்களாக இருந்த அலைச்சல், பதற்றம், கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும்.

**கடகம்**: குடும்பத்தில் கொஞ்சம் சலசலப்புகள் வரும். சிலர் உங்களைத் தாழ்த்திப் பேசினாலும், விமர்சித்தாலும் கலங்கிக் கொண்டிருக்காதீர்கள். யாரையும் யாருக்கும் சிபாரிசு செய்ய வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகளால் இலாபம் குறையும்.

**சிங்கம்**:சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும்.

**கன்னி**: கனிவாகப் பேசிக் காரியம் சாதிப்பீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். பிரபலங்களின் நட்பு கிட்டும்.

**துலாம்**: குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்**: புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கலைத் தீர்ப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதங்கள் வந்து போகும். வர வேண்டிய பணத்தைப் போராடி வசூலிப்பீர்கள்.

**தனுசு**: தன்னிச்சையாக சில முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். நிலம், வீடு வாங்குவது இலாபகரமாக அமையும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள்.

**மகரம்**: வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். விரும்பிய பொருள்களை வாங்குவீர்கள். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் திடீர் இலாபம் உண்டு.

**கும்பம்**: புது முதலீடுகளைத் தவிர்க்கவும். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் தர வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களின் தொந்தரவுகளை விட்டுப் பிடிப்பது நல்லது.

**மீனம்**: எடுத்த வேலையை முழுமையாக முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். உறவினர், நண்பர்களால் மறைமுகப் பிரச்சினைகள் வரக்கூடும். உடல் நலத்தில் கவனம் தேவை.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | 6 | | 1 | | | | 3 |
| 4 | | | | | 3 | | | 8 |
| 8 | 1 | | | | | | 9 | |
| | | | 7 | | 5 | | | 9 |
| | 6 | | 3 | 8 | 1 | | 2 | |
| 3 | | | 4 | | 2 | | | |
| | 8 | | | | | | 3 | 4 |
| 6 | | | 5 | | | | | 2 |
| 7 | 3 | | | 4 | | 6 | | 1 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 2 | 6 | 8 | 1 | 9 | 3 | 5 |
| 8 | 9 | 3 | 5 | 7 | 2 | 6 | 1 | 4 |
| 5 | 1 | 6 | 4 | 9 | 3 | 2 | 8 | 7 |
| 1 | 5 | 8 | 7 | 2 | 9 | 4 | 6 | 3 |
| 6 | 3 | 4 | 1 | 5 | 8 | 7 | 9 | 2 |
| 2 | 7 | 9 | 3 | 6 | 4 | 8 | 5 | 1 |
| 9 | 6 | 1 | 2 | 3 | 7 | 5 | 4 | 8 |
| 3 | 2 | 5 | 8 | 4 | 6 | 1 | 7 | 9 |
| 4 | 8 | 7 | 9 | 1 | 5 | 3 | 2 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Graduate Diploma In Civil Engineering

Chartered Engineer
Recognized by IESL* & Engineering Council (UK)

IESL
Engineering Council

Civil/ Electrical/ Mechanical/ Electronics & Telecommunication

We HAVE CLEARED THE WAY FORWARD

Class Commence on 9th February 2014

City & Guilds
Post Graduate Diploma in Engineering
Equivalent to CEI Part 1 & 2 (UK) or Engineering Council (UK) Graduate Diploma & Post Graduate Diploma
Entry Qualifications: Graduate Diploma (EC-UK)/ Graduate Diploma(C&G)/ BEng from a Recognized University
Duration Minimum 12 months

City & Guilds
Graduate Diploma in Engineering
Entry Qualifications: NDT/ HNDE/ NDES/ Adv. Diploma (C&G)/ BSc(Physics+Maths)/ DT(OUSL)/ HND(EDEXEL)/ BTEC(HND)
Duration Minimum 18 months

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் {Name} {Address} {Course} போன்ற விபரங்களை 0777 762283 க்கு Sms செய்யுங்கள்

0771067394
021 49 23 171

For enrollment please call, call over or e.mail us at the following contacts:

Nugegoda
102, Stanley Thilakaratne Mw, Nugegoda.
Tel: 011 469 6619/ 011 469 6609/ 011 469 6666

Kandy
511, Peradeniya Road, Kandy
081 466 6699
kandy@skillsinternational.lk

Kurunegala
252, PuttalamRoad, Kurunegala
037 361 6868
kurunegala@skillsinternational.lk

Jaffna
207, Navalar Road, Jaffna.
021 496 6699
jaffna@skillsinternational.lk

*Conditions Apply

City & Guilds APPROVED CENTRE
Skills College of Technology
scot@skillsinternational.lk
SKILLS COLLEGE OF TECHNOLOGY

(C/11386)



கைதடி எருதிடல் அ.த.க பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இதன்போது இசையும் அசைவும் நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களையும் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் காணலாம். (ஒ-9)




வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் புதிதாக இணைந்து கொண்ட 1ஆம் ஆண்டு மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா நிகழ்வின்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட முன்னாள் அஞ்சலதிபர் சி.அருணாசலம் மற்றும் பாடசாலை அதிபர் வை. விஜயகுமாரன் உள்ளிட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களைக் காணலாம். (ஒ-122)



வரணி தென்னிந்தியத் திருச்சபை முன்பள்ளியின் 31 ஆவது வருடாந்த ஒளிவிழா நிகழ்வின்போது மாணவர்கள் அபிநயப் பாடல் இசைப்பதைப் படத்தில் காணலாம். (ஒ-122)



கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் வைரவிழா நிகழ்வு அண்மையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இதன்போது இடம்பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வின் ஒரு காட்சியைக் காணலாம். (ஒ-288)



சில்லாலை றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.சிவானந்தராஜா, அருட்பணி, அன்ரனி மேரியன் அடிகளார் ஆகியோர் விருந்தினர்களாக அழைத்து வரப்படுகின்றனர். (ஒ-14)





புலம்பெயர்ந்து லண்டனில் வாழும் கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட பொறியியலாளரான சி.செந்தில்செல்வனால் அன்பளிப்பாக வழங் கப்பட்ட 150 ஆங்கில நூல்களைக் காட்சிப்படுத்தும் நிகழ்வு அண்மையில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் அதிபர் இரா.ஸ்ரீநடராசா தலைமையில் நடைபெற்றது. பாடசாலை மாணவர்கள் நூல்களைப் பார்வையிடுவதைக் காணலாம். (ஒ-9-14)



அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான சுகாதாரப்பழக்க வழக்கம் தொடர்பான கருத்தமர்வு பாடசாலையில் இடம்பெற்றது. இதன்போது பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ரதன் மாணவர்களுக்குப் பற்தூரிகை வழங்குவதைக் காணலாம். (ஒ-14)



யாழ்.குருநகர் சமூக அபிவிருத்திக்கான இணையத்தினரால் புலம்பெயர் வாழ் நோர்வே மக்களது உதவியுடன் குருநகர் பிரதேச ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ஒ)



யாழ்.விஷன் கொக்குவில் கிருஷ்ணா அறநெறிப்பாடசாலையில் பட்டிப்பொங்கல் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் அறநெறிப்பாடசாலை மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட குழுப்பாடலின் ஒரு காட்சியைக் காணலாம். (ஒ-10)



வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தினால் கடந்த 20 ஆம் திகதி தெற்கிலுப்பைக்குளம் பராசக்தி வித்தியாலயத்தில் தரம் 1 வகுப்பில் புதிதாக இணைக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒன்றியத்தின் தலைவரான சு.குமாரசாமி, செயலாளரான கு. சஜித்குமார் ஆகியோர் வரவேற்கப்படுவதையும் அவர்கள் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் காணலாம். (க-421)



மன்னார் பரிகாரிகண்டல் அ.த.க.பாடசாலையில் இடம்பெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் போட்டியில் வெற்றி பெற்ற இல்லத்துக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதையும், விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்வு இடம்பெறுவதையும் காணலாம். (க-402)



முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெயநாதன் மங்கல விளக்கு ஏற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பதையும், சிறப்பு விருந்தினரான மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், பிரதம விருந்தினர் உள்ளிட்ட விருந்தினர்களும் சமயப் பெரியார்களும் வரவேற்கப்படுவதையும், வீராங்கனைகள் போட்டியில் ஈடுபடுவதையும் காணலாம். (க)



கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்துக்குரிய காணியில் இருந்து வெளியேறிய குடும்பங்களுக்கு "சோஆ" நிறுவனம் அமைத்துக் கொடுத்த தற்காலிக வீடுகள். (க-18)



பூநகரிப் பிரதேசத்திலுள்ள பரமன்கிராய் தொடக்கம் சங்குப்பிட்டி வரையான வீதியின் சேதமடைந்த பகுதிகளில் வாகனங்களில் செல்வதில் இடர்கள் நிலவி வருகின்றன. (க-415)



வவுனியா கணேசபுரம் பகுதியில் அண்மையில் வீடொன்றில் தீ விபத்து ஏற்பட்டது. அதனைப் பார்வையிட்ட வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினர் கூரை விரிப்புக்களை வழங்குகின்றனர். (க-402)

# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு 2014ஆம் ஆண்டிற்கு தேவையான வழங்கல்கள் / சேவைகள்

1. முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கு 2014ஆம் ஆண்டுக்கான பின்வரும் வழங்கல்கள் / சேவைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.
   - அ. சமைத்த உணவு வழங்கல்கள்
   - ஆ. அழுக்குத்துணிகள் சலவை செய்தல்
   - இ. வாகன சுத்திகரிப்பு செய்தல்.
   - ஈ. பொது அலுவலக, இலத்திரனியல் உபகரணங்கள்.

2014 மார்ச் 01ஆம் திகதி முதல் 2015 பெப்ரவரி 28ஆம் திகதி வரையான ஒருவருட காலப் பகுதிக்கு வழங்கல்கள், சேவைகளுக்காக இலங்கையர் அல்லது இலங்கை வியாபார நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்வி ஆவணங்கள் 05.02.2014 தொடக்கம் 24.02.2014 திகதி பி.ப.3.30 மணிவரையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வழங்கப்படும். ஒரு வைத்தியசாலைக்கு/ தொகுதிக்கு குறிப்பிட்ட ஒரு வழங்கல் /சேவைக்கான ஒரு ஆவணத் தொகுதி மட்டுமே வழங்கப்படும்.

2. அரசாங்க ஒப்பந்தத்தை செய்யமுடியாதவாறு தடை செய்யப்பட்டவர்களுக்கோ அல்லது தடைசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கோ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படமாட்டா.

3. விண்ணப்பிக்கத் தகுதியானோர் கீழ்க்குறிப்பிடப்படும் தொகையை செலுத்துவதுடன் வழங்கல்கள் சேவைகள் என்பவற்றுக்கான பெறுமதி ஆவணத்தையும் முல்லைத்தீவில் இயங்கும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் சமர்ப்பித்து கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 25..02.2014 திகதி மு.ப. 2.30 மணிக்கு கிடைக்கூடியவாறு **தலைவர், கேள்விச்சபை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது நேரடியாக அலுவலக கேள்வி பெட்டியிலோ இடமுடியும். கேள்விகள் யாவும் 25.02.2014 பி.ப. 2.30 மணிக்கு திறக்கப்படும்.

4. வைப்புத் தொகைகளும் ஆவணங்களும்

**A) சமைத்த உணவு வழங்கல்**

| வைத்தியசாலை | உணவுவகை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|---|
| ஆதார வைத்தியசாலை, மாங்குளம் | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, நட்டான்கண்டல். | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, ஒட்டுசுட்டான் | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, உண்ணாப்பிலவு | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, சம்பத்நூவர | சமைத்த உணவு | 250.00 | 25,000.00 |
| பிரதேச வைத்தியசாலை அளம்பில் | சமைத்த உணவு | 250.00 | 20,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, கொக்குளாய் | சமைத்த உணவு | 250.00 | 20,000.00 |

**B) அழுக்குத் துணி சலவை செய்தல்**

| வைத்தியசாலை | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதி ஆவணம் (ரூபா) |
|---|---|---|
| மாவட்ட பொது வைத்தியசாலை, முல்லைத்தீவு. | 200.00 | 5,000.00 |
| ஆதார வைத்தியசாலை, மல்லாவி | 200.00 | 2,000.00 |
| ஆதார வைத்தியசாலை, மாங்குளம் | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, நட்டான்கண்டல். | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, ஒட்டுசுட்டான் | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, உண்ணாப்பிலவு | 200.00 | 2,000.00 |
| பிரதேச வைத்தியசாலை, சம்பத்நூவர | 200.00 | 2,000.00 |

**C) வாகன சுத்திகரிப்பு**

| இடம் | மீளளிக்கப்படாத வைப்புத்தொகை (ரூபா) | பெறுமதிஆவணம் (ரூபா) |
|---|---|---|
| பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு. | 500.00 | 50,000.00 |

**D) பொது அலுவலக, இலத்திரனியல் உபகரணங்கள்.**

| Rerf.No | Items | QTY | Rerf.No | Items | QTY |
|---|---|---|---|---|---|
| **Furniture** RDHS/ MTV/FUR / 2014/01 | Conference table | 05 | **Electronics goods** RDHS/MTV/ ELE/2014/02 | Desktop computers with UPS | 09 |
| | Conference table with 3 executive chairs | 01 | | Printers | 09 |
| | Wooden table(Muthirai) | 14 | | Dot matric printers | 01 |
| | Steel table | 17 | | Laptop computers | 03 |
| **Rerf.No** | **Items** | **QTY** | | USB Drivers (8GB) | 06 |
| **Trainings** RDHS/ MTV/TRAI /2014/03 | Obitrackt | 02 | | Television | 03 |
| | Tread mill | 02 | | DVD Player | 03 |
| | Static cycle (Exercise bicycle) | 02 | | Multimedia Projector with screen | 02 |
| | | | | Photo Copier machine | 01 |
| | | | | Public addressing system(Amb set) | 01 |
| Non refundable fee Rs.200/= , bid security Rs. 5000/= for each bid | | | | | |

**ஆவணங்கள்**

1. 01.01.2014ஆம் திகதிக்கு பின் அந்தந்த பிரதேச செயலாளர்களிடமிருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறுமதி உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் (பி.எஸ்.எம்.201. பொது 170 படிவம்) அல்லது வங்கி உத்தரவாத கடிதம்
2. ஏற்கனவே சேவையை வழங்கிவரும் ஒப்பந்தகாரர் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதியே தீர்மானம் எடுக்கப்படும்.
3. கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரரோ அல்லது எழுத்துமூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ கேள்விகள் திறக்கும்போது சமுகமளிக்கலாம்.
4. கேள்வி தொடர்பான கேள்விச்சபையின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.
5. மேலதிக விவரங்களை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் தொ.இ. 212[illegible] (11

**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பி.சு.சே.ப.பணிமனை,**
**முல்லைத்தீவு.**

(C/11390)(10.6)

# அரங்க முற்றம் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,பெப்.02

நாடகமும் அரங்கியலும் பாடநெறியை கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பெப்ரவரி மாத அரங்க முற்றம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை நல்லூர் ஸ்தான சி.சி.த.க (சாதனா) பாடசாலையில் நடைபெறவுள்ளது.

**இதில் சிங்கள நவீன** அரங்கு என்னும் விடயப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக மொழியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் விமல் சுவாமிநாதன் கருத்துரை வழங்கவுள்ளார்.

இதன்போது நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்களின்வாண்மைவிருத்திக்கான செயற்குழு அமைக்கப்படவுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டுக்குழு கேட்டுள்ளது. (ஐ)

# மெய்வன்மை போட்டி

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை திங்கள்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் அ.ஆனந்தராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) கோ.வரதராஜமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ.சற்குணராசாவும் கலந்து கொள்வர்.(ஐ-14)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி **சதானந்தன் சரஸ்வதி**

தோற்றம் 24.01.1949 மறைவு 04.01.2014



அன்புக்கோர் இலக்கணமாய்
அவனியில் உதித்த அன்னையே!
நாள்கள் ஓடி மறைந்தாலும்
அன்னையே உன்னை
நாம் மறவோம்

கடந்த 04.01.2014 இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (03.02.2014) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"ராணி வாசா"
மூளாய் கிழக்கு, சுழிபுரம்.

குடும்பத்தினர்.
077 465 2833
077 616 2043

(44232) (7.6.3)

# அலுவலக கட்டடம் வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் 2700 சதுர அடி விஸ்தீரணமுள்ள கட்டடம் வாடகைக்கு உண்டு. இரண்டு மாடிக் கட்டடத்தின் முதலாம் மாடியில் தனிப்பட்ட நுழைவாசலுடன் இரண்டு கழிவறைகளும் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்ட இரண்டு அறைகளும் உண்டு. தள மாடியில் HSBC மற்றும் பிரபல நிறுவனங்கள் இயங்குகின்றன. மேலதிக விவரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொ: 021 222 4102/03 அல்லது 0779 486 295.

(C/11689)

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ்



பாங்சால் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிட மாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் (துரைரத்தினம்) 31.01.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின் அந்தோனிப்பிள்ளை- திரேசம்மா (பிள்ளை முத்து) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான யோண் பூபதி தம்பதியினரின் அன்பு மருமகனும் திரேசா பிரபாவதியின் அன்புக் கணவரும், றெஜினோல்ட், றெமிஜியா, றெனோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜேன் சுகந்தினி, ரெறன்ஸ் சுதர்சன், றொசானி ஆகியோரின் அன்பு மாமனாரும், யூட் சாம்சன், மரின் சானுஜா, யூட்டினோசன், ஹெய்டன், ஹான்ஸ்ரன் ஆகியோரின் அன்புப் பேரனும்,மரியதாஸ்(ஓய்வுபெற்ற மரக்கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்) சூசைதாசன், கிறிஸ்தோப்பர்(ஓய்வுபெற்ற ஆசிரியர்), வோல்ட்டர், அகஸ்ரின்(ஓய்வுபெற்ற பரியோவான் கல்லூரி, ஆசிரியர், வடகடல் நிறுவனப் பணிப்பாளர்),இம்மானுவேல், அன்ரனி அன்ரனீற்றா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பெனடிற் குணசேகரம், அன்ரன் ராஜ்குமார், பரமேஸ்வரி, பத்மாவதி சாந்தகுமார்,ராஜ்குமாரி(அருந்ததி), ஜெயக்குமார், காந்திமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(03.02.2014) திங்கள் பிற்பகல் 3.00மணியளவில் ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் அரியரத்தினம் பிரபாகரன்**

அன்னை மடியில் 11 . 07 . 1950

ஆண்டவன் அடியில் 10 . 02 . 2008



திதி: திருதியை (02.02.2014)

ஆண்டாறு ஆனதுவே ஆறாக ஓடுகிறதே கண்ணீர்
பூண்டதுயர் மாறவில்லை புவனியிலே உமைப்பிரிந்து
மீண்டுவரும் ஞாபகங்கள் மேதினியில் உமதுருவம்
வேண்டுகிறோம் வேலவனை அப்பா உம் நினைவில்.
ஓம் சாந்தி.

விமானநிலையவீதி,
பத்தமேனி, அச்சுவேலி.

துயரில்வாடும்:
குடும்பத்தினர்.

(44273)(12)(1.6)

## ஐந்தாம் ஆண்டு நினைவு

பிறப்பு 20 . 06 . 1951

இறப்பு 02 . 02 . 2009



**ஆறுமுகம் திருநாவுக்கரசு**

எம் குடும்பத்தின் ஒளி விளக்கே
ஆண்டுகள் பல கடந்தாலும்
உமது விண்ணக வாழ்வின்
ஐந்தாம் ஆண்டு நினைவை
இறைவனுக்குக் காணிக்கையாக்குகின்றோம்
உங்கள் பிரிவால் துயருறும்

16 B, 3ஆம் கட்டை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(44230)(10.6.3)

## THIRD YEAR REMEMBRANCE OF
## OUR DARLING APPAMMAH

Late. Mrs.
JEYADEVI
RAJANAYAGAM
(DEVI Aunty)



**BORN**
**05.12.1934**

**ENTERED GLORY**
**02.02.2011**

Although we miss you so very much we know we'll see you once more
For this is the hope we have in God, being re-united in the Lord

*Fondly loved and sadly missed by loving*
Son- Kumar, Daughter-in-Law- Chooty,
Grand Children- Jerine - Shavindra, Morin,
Corin & Great Grand Child Shaiyana (Angel)

*"But anyone united to the Lord becomes one Spirit with Him"*
1 Corinthians 6:17

Pastor. Kumar Rajanayagam.
*(Seventh-Day Adventist Church)*
College Lane,
Vaddukoddai.

(44224) (7.6.3)

## தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவகம் ஒன்றுக்கு, ரொட்டி, றைஸ் தயாரிப்பாளர், சமையல் உதவியாளர், பரிமாறுபவர் தேவை. (44259)(2.6)

தொடர்பு: 075 242 1936

## தேவை

English Medium இல் படிக்கும் 3 பிள்ளைகள் 5 ஆம். 3 ஆம், 1 ஆம் வகுப்பில் படிக்கிறார் கள். சுண்டுக்குளி பஸ்தியன் சந்தி அருகில் வீட்டுக்கு வந்து Maths, English, Science கற்பிக்க ஆசிரியர் அல்லது ஆசி ரியை தேவை. 0778-822847

(C/11657) (2.6.3)

## மணமகன் தேவை

யாழ் இந்து 1964 புனர்பூசம் 4ஆம் பாதம் 2இல் சனி பாவம்-11 B.Sc, Phd (Agriculture) படித்து பல்கலைக்கழகம் ஒன்றில் விரிவுரையாளராகத் தொழில் புரியும் மணமகளுக்கு படித்த மணமகனைத் தேடுகின்றனர்.

Saainathan Marriage Service
T.P:011 2364146 / Fax: 011 236 3436
Saainathan.lk@gmail.com

(சி/11880) (10.6.3)

## தையல் பயிற்சி வகுப்பு

கொழும்பில் பயிற்றுவிக்கும் தையல் ஆசிரியையினால் வயது வித்தியாசமின்றி இலகுவான முறையில் சிறந்த விளக்கத்துடன் சாறி பிளவுஸ், சல்வார், பாவாடை, பிளவுஸ், சட்டை, நையிட்டி டிசைன்களுடன் வெட்டி தைக்கும் முறை பயிற்றுவிக்கப்படும். தொடர்பு - 0779-297474. 11 ஆம் திகதிக்கு முன் பதியவும். 14 th வகுப்பு ஆரம்பம். மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(C/11684)(2.6.3)

## வாடகைக்கு

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி, அரசடி ஒழுங்கையில் திருத்தியமைக்கப்பட்ட 04 அறைகள் கொண்ட வீடு பெரிய குடும்பத்திற்கு அல்லது நிறுவனங்களிற்கு உடன் வாடகைக்கு உண்டு.

குருபரன் : 0777 760 663

max adz

## காணி விற்பனைக்கு

முல்லைத்தீவு, 127,சுதந்திரபுரம் கொலனி , உடையாரகட்டில, 5 (விவசாய) & 2 (தென்னை) ஏக்கர் காணிகள் உடன் விற்பனைக்கு உண்டு.

வீணன் : 075 726 0765

max adz

## உடனடி வேலைவாய்ப்பு

கணக்கீடு படித்த ஓரளவு கணினி அறிவுள்ள பெண்கள் உடனடியாகத் தேவை. உங்கள் சுயவிவரக் கோவையுடனும், ஏனைய ஆவணங்களுடனும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 873 0114
திருநெல்வேலி.

## மணமகள் தேவை

கொழும்பில் பிராந்திய விற்பனை முகாமையாளராகக் கடமை புரியும், 39 வயதுடைய இந்து, கடகராசி, ஆயிலியம் நட்சத்திரம், 4 இல் செவ்வாய் குற்றமுள்ள5 அடி 7 அங்குல உயரமுள்ள ஒருவருக்கு தொழில் புரியும் மணமகளை எதிர்பார்க்கின்றார்கள்.

தொடர்பு: 077 5040505

(சி/11661) (10.6.3)

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவரா- தெஹிவளை/கண்டி/கம்பஹா/யாழ்/மாங்குளம்/கொழும்பு பிரதேசங்களில் மேசன்/தச்சர்/பெயின்டர் (1200/=, 1500/=) கைஉதவியாளர்களுக்கு (900/=, 1100/=) ஆள்கள் தேவை. (43130)(7.6.3)

தொடர்பு: 077 556 1883

## நிரந்தரத் தொழில்

கொழும்பு துறைமுகம், விமான நிலையம் (தனியார்) வேலை வாய்ப்புக்கள் கப்பல் புனர் நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர்கள்/வெல்டர்/தச்சர் மற்றும் விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர்/காகோ/லோன்றி போன்ற பிரிவுகளுக்கு 18 - 45 ஆண், பெண் தேவை. சம்பளம் 17000/=, 25000/=, 38000/= உணவு, தங்குமிடம் வசதி செய்து தரப்படும்.

தொடர்பு: 077 556 1883

(43131) (12.1.6)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

வெளிநாடுகளில் உள்ள பிரசித்தி பெற்ற நிறுவனங்களுக்கு கீழ்கண்ட வேலைகளுக்கு உடனடியாக ஆட்கள் தேவை.விருப்பம் உள்ளோர் உடனடியாக பாஸ்போட் போட்டோ ஆகியவற்றுடன் வரவும்.

1 DHS = 36 RS

**துபாய்** நேர்முகத் தேர்வு தினசரி காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை

கிளீனர்ஸ் (ஆண் / பெண்) 50 800 DHS (28800 Rs)

சாப்பாடு அலவன்ஸ் 200 வழங்கப்படும

AL/701/ADVT/03/14

### துபாய் ஹோட்டல்

| | |
|---|---|
| ஹோட்டல் கவுன்டர் ஸ்டாப் | 900 Dhs (32400 Rs) |
| சமையல் அறை உதவியாளர்கல் | 700 Dhs (25200 Rs) |
| சைனீஸ் குக் | 900-1300 Dhs (32400 - 46800 Rs) |
| பீசா குக் | 900-1300 Dhs (32400 - 46800 Rs) |
| டெலிவரி டிரைவர் (துபாய் மோட்டர் சைக்கிள் லைசென்ஸ்) | 1800 Dhs (64800 Rs) |
| வெயிட்டர் | 900 Dhs (32400 Rs) |

சாப்பாடு இலவசம்

AL/701/ADVT/8/14

### கட்டார் ஹோட்டல்

1QR = 36 RS

| | |
|---|---|
| கிளீனர்ஸ் | 900 Qr (32400Rs + OT) |
| சமையல் உதவியாளர்கல் | 1000 Qr (36000Rs + OT) |
| வெயிட்டர் | 1000 Qr (36000Rs + OT) |

சாப்பாடு இலவசம்

AL/701/ADVT/6/14

### கட்டார்

1 QR = 36 RS

| | |
|---|---|
| சீனியர் எலெக்ட்ரீசியன் | 1500QR (54000 RS) |
| எலெக்ட்ரீசியன் | 1200QR (43200 RS) |
| எலெக்ட்ரீசியன் உதவியாளர் | 1000QR (36000 RS) |
| சீனியர் பிளம்பர் | 1500QR (54000 RS) |
| பிளம்பர் | 1200QR (43200 RS) |
| பிளம்பர் உதவியாளர் | 1000QR (36000 RS) |
| 6G வெல்டர் | 1200QR (43200 RS) |
| வெல்டர் | 1200QR (43200 RS) |
| உதவியாளர்கள் | 800QR (28800 RS) |
| டக்டமேன் / டக்ட் பிட்டர் | 1200QR (43200 RS) |
| பைப் பிட்டர் (எயார்கன்டிசன் லைன்) | 1500QR (54000 RS) |
| இன்சுலேட்டர் (டக்ட்பைப்) | 1500QR (54000 RS) |
| எயார்லெஸ் ஸ்பிரே பெயின்டர் | 1200QR (43200 RS) |
| சேன்ட் பிளாஸ்ட்டர் | 1100QR (39600 RS) |
| கார்பென்டர் | 1100QR (39600 RS) |

சாப்பாடு அலவன்ஸ் 250 வழங்கப்படும

AL/701/ADVT/05/13, AL/701/ADVT/02/13

### சவுதி அரேபியா வேலை வாய்ப்பு
### FOOD PROCESSING FACTORY

1 SR = 36 RS

உதவியாளர்கள் 25 917 SR (Rs.33,000)

ஒருவழி விமானடிக்கட் ஒப்பந்தம் முடிந்தவுடன்

AL/701/ADVT/01/14

### பெண்களுக்கு வேலைவாய்ப்பு

1 Euro = 454 RS

சைப்பிரஸ் 314 Euro (55,264Rs)

அரசாங்க அநுமதி கட்டணம் - Rs. 300.000/-

1 DHS = 36 RS

துபாய் 825 DHS (29,700 Rs)

குவைத் 70 KD (32,480 Rs)

1 KD = 36 RS

அனைத்தும் இலவசம் எந்தக்கட்டணமும் அறவிடப்பட மாட்டாது

AL/701/ADVT/104/94/10/14

நிபந்தனைகள்: தொழில் ஒப்பந்த காலம்- 02 வருடம்.இருப்பிடவசதி, மருத்துவம் உணவு இலவசம். 08 மணித்தியாலம் வேலை.

0722 47 00 47 (எனா) 0722 46 00 46 (இல்மி)

பாஸ்போட் இல்லாதோருக்கு அடையால அட்டையும், பிறப்பு சான்றிதல் ஆகியவற்றுடன் எங்களது காரியாலயத்திற்கு வந்தால் பாஸ்போட் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான உதவி செய்து தரப்படும்

## தனா மேன்பவர் (PVT)LTD.

இல 104, செட்டியார் தெரு, கொழும்பு - 11

Tel: 011- 5333346 / 5333347 / 5333348 / 5333349

Email: danamanpower@yahoo.com , web: www.danamanpower.com

அனைத்து வீடுமுறை நாட்களிலும் காரியாலயம் திறந்திருக்கும்

## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்தில்
1. Trainee English Teachers
2. English Teachers
3. IT / Computer Teachers / Lectures
4. Secretary
5. Business Management (விரிவுரையாளர்கள்)
6. Project Officer

நேர்முகப் பரீட்சைக்கான பதிவுகளுக்கு

**LCBT CITY CAMPUS**
**No. 116, Palaly Road, Jaffna. T.P : 077 5052643**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
28.03.1951

உதிர்வு
13.02.2013

வண்ணார்பண்ணை, கேசாவிலைப்
பிறப்பிடமாகவும் சுவிஸ் Rupperswill Aarau இல்
வசித்தவருமாகிய

### அமரர் நடராசா துரைசிங்கம்

திதி: பிரதமை

இல்லத்தின் குலவிளக்காய் நல்லொளி வீசிய உத்தமரே
மண்ணுக்குள் மனிதம் மறைந்ததால்
வாசமில்லா வாழ்வில் வதங்கியே ஏங்குகின்றோம்
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஈசன் பாதம் அமர்ந்திருந்து வருடிக் கொடுத்திடுவீர்!

இல.24. முருகமூர்த்தி கோயில் றோட்.
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி பகவதி நடராஜா



தங்காலைய வீதி, தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பகவதி நடராஜா நேற்று முன்தினம் (31.01.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருந்தவராசா மற் றும் சிறிஸ்கந்தராசா (கனடா), சற்குணராசா, இராச மலர், சந்திரவதனா ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ் சென்ற பரமசிவம் மற்றும் யோகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை கோரியடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தங்காலைய வீதி,
தும்பளை, பருத்தித்துறை.
T.P: 077 311 4419

(43097)
(10.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# மூடப்பட்டது படை முகாம்

கொடிகாமம், பெப்.2

மீசாலை புத்தூர்ச் சந்திக்கும் வேம்பிராய்ச் சந்திக்கும் இடைப்பட்ட பிரதான வீதிப் பகுதியில் இருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது. முகாமில் இருந்த தளபாடங்கள் வேறு இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. முகாம் பகுதி காணி உரிமையாளர்கள் தமது காணிகளை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். 2002 ஆம் ஆண்டு இந்தப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்த போது முன்னேறிய இராணுவம் இந்தப் பிரதேசத்தில் நிலைகொண்டிருந்தனர். (ஒ-122)

## 'யூசிமாஸ்' நிறுவன பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், பெப். 02

யாழ். 'யூசிமாஸ்' நிறுவனத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ரில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், யாழ். வலய கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-14)

## மோ.சைக்கிள் அபகரிப்பு

தென்மராட்சி, பெப்.2

"சூட்டி பெப்" மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞரை பல்சர் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாக்கி விட்டு மோட்டார் சைக்கிளை அபகரித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு மீசாலை ஐயா கடையடியில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளைப் பறி கொடுத்த இளைஞர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. (ஒ-9)

### வீடு வாடகைக்கு

நெல்லியடி பழைய ஆஸ்பத்திரி வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
(43098)
(10.14)
தொடர்பு: 077 7049364

### ரூம் வாடகைக்கு

ரூம் வாடகைக்கு உண்டு, நாவலர் றோட்.
(44268)
(10.14)
075 626 8910

### வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சேவிஸ் ஸ்ரேசனுக்கு (ஒட்டோவும் மோட்டார் சைக்கிளும் மாத்திரம்) சேவிஸ் செய்யக் கூடியவர்கள் தேவை. மாநகர சபைக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது.
(44265)
(10.14)
தொடர்பு: 0775331631

### கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையிலுள்ள புறோட்டோன் பேர்சோனா 2011 தயாரிப்பு. கார் 20000 KM ஓடிய நிலையில் விற்பனைக்கு உண்டு. விலை 2.7 மில்லியன்

தொடர்பு : 077 7286100

### காணி விற்பனைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் சகல வசதிகளும் அமைந்த இடத்தில் வியாபாரத் தேவைக்கான கட்டடம் அமைக்கக் கூடிய 5 பரப்புக் காணி உடனடி விற்பனைக்குண்டு.

முன்பதிவு: 0721 297756

### வாடகைக்கு

இல. 8 ரயில்நிலைய வீதி. வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் மற்றும் தனியறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு- 077 183 2404 / 011 250 4281

### வீடு காணி விற்பனைக்கு

உரும்பிராய் சந்திக்கும் இந்துக் கல்லூரிக்கும் இடைப்பட்ட 7 பரப்புக்காணி வீட்டுடன் அம்மன் கோயில், பஸ் தரிப்பிடம் அருகில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு 0777-769928

### வீடு காணி விற்பனைக்கு

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி கல்வயலில் 4½ பரப்புக் காணியுடன் வீடு, 3 Rooms, 2 Halls, Kitchen உடன் விற்பனைக்குண்டு (கண்டி வீதியிலிருந்து 1km க்குள்) தொடர்புகளுக்கு - 0777-724469



## டபிள் நந்தி கூரை ஓடுகள்



உயர் தரத்தில் உருவாக்கப்பட்டது
10 வருடத்திற்கும் மேற்பட்ட உத்தரவாதம்

Ransalamba Tile Factory,
Sandhalankava (சந்த லங்காவ)
077 640 5622
077 685 9225

### அக்ஷயா டிப்ளோமா அழகுக்கலை பயிற்சி நெறி

1) பேசியல் (10) 2) மேக்கப் (7) 3) கெயாஸ்ரைல் (25)
4) தலைமுடி சுருட்டுதல் 5) கேளிங் பேமிங் 6) சாறி பிளவுஸ்கட்டிங் (6)
7) சாறிவேக்(5) 8) வொக்கே செற்றிங் (10) 9) ஐசிங் கேக் (20)
10) ஐசிங் பிளவர் (20)

* மேற்படி பயிற்சிகள் நடைபெறுகின்றன; பயிற்சியின் முடிவில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். * பிறப்பிலே கறுப்பு, கருமை மஞ்சள் புள்ளிகள், காய்கள், நாட்ப்பட்ட பருக்கள், பள்ளங்கள் அனைத்தையும் மாற்றும் ஒரிஜினல் வைத்தினிங் கிறீம் விற்பனைக்கு உண்டு. உடல் எடை கூட்டும் குளிசை ஒட்டிய கன்னங்களை குண்டுக்கன்னங்களாக மாற்றும் குளிசை விற்பனைக்குண்டு. உடல் எடைகுறைக்கும் குளிசை பால்மா, கோப்பி தலை முடிவளரச் செய்யும் ஆயுள் வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.
* பேசியல் (வைத்திங், கோல்ட்) மேக்கப், ஐசிங்கேக், றிச்கேக் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

அக்ஷயா 221, நாவலர் றோட்
தொ.பே : 077 2106155 (றிறவுண் றோட் சந்தி அருள் கொமினிக்கேஷன் அருகில்) யாழ்.

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த செவ்வாய்க்குற்றமற்ற பாவம் குறைந்த 30, 31 வயதுடைய பொறியியலாளர் ஒருவருக்கும், சட்டத்தரணி ஒருவருக்கும் 1987 ஆம் ஆண்டுக்குப்பின் பிறந்த அழகிய உயர்கல்வித்தரமுடைய மணமகள் தேவை.

தொடர்பு: 077 8913745

## OBITUARY

**DAVID JEYARATNASINGHAM HENSMAN**

DAVID JEYARATNASINGHAM HENSMAN, BELOVED SON OF LATE MR & MRS VICTOR AND KIRUBAI HENSMAN, LOVING BROTHER OF LATE EDWIN HENSMAN & LATE BALA HENSMAN, BELOVED HUSBAND OF MRS. JANE HENSMAN (COM. BANK) AND LOVING FATHER OF SAM HENSMAN AND GRACE HENSMAN (STUDENT, FACULTY OF MGT STUDIES, UNIVERSITY OF JAFFNA) HAS ENTERED GLORY ON SATURDAY, 1ST OF FEB 2014.

FUNERAL SERVICE WILL BE HELD ON MONDAY THE 3RD FEB 2014 AT 9.30 A.M. AND CORTEGE WILL LEAVE RESIDENCE TO CPM CEMETRY, KOTTADY.

INFORMANT:
SAM HENSMAN (SON),
46, FOREST OFFICE LANE,
CHUNDIKULI, JAFFNA.

(44262)
(10.14)

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா கந்தப்பு



புதுத்தோட்டம் கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கந்தப்பு (30.01.2014) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பு (முன்னாள் புகையிரத தலைமை பரிசோதகர்) வின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு (ஆசிரியர்) - பத்மினி தம்பதியரின் ஏகபுத்திரியும் சரஸ்வதி (கனடா), தவமணி, பாலபரமேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சுகுணபாலயோகன் (முன்னாள் இ.போ.ச. சாலை முகாமையாளர், பருத்தித்துறை) செல்லத்துரை (முன்னாள் இ.மி.ச. மின்பட்டியலாளர், பருத்தித்துறை), சண்முகராஜா (லண்டன்) ஆகியோரின் மாமியும் சோபனா சண்முகநாதன் (லண்டன்), சுகந்தினி அகிலன் (கனடா), தர்மேந்திரா, பிரமிளா (கனடா), பிறேமேந்திரா (கனடா), தர்சினி, சுபாஜினி (முகாமைத்துவ உதவியாளர் கல்வி வலயம், தென்மராட்சி), நிஷாந்தன் (லண்டன்), துஷாந்தன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பவன், ஆதவன், அஸ்வினி, கஜினா, கஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதுத்தோட்டம்
நெல்லியடி கிழக்கு, கரவெட்டி.

தகவல்
குடும்பத்தினர்.
021 2263182

# பண்டத்தரிப்பு வர்த்தக நிலையங்களில் ஊழியர்களுக்கு ஓய்வின்றி வேலை

யாழ்ப்பாணம், பெப்.2

பண்டத்தரிப்பு நகர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் ஓய்வுநாள் இன்றி தொடர்ச்சியாக வேலை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் கூறுகையில்,

"பண்டத்தரிப்புக்கென ஒரு வர்த்தகர் சங்கம் இருந்தாலும் அது தகுந்த முறையில் இயக்கப்படவில்லை. வர்த்தக சங்கத்தின் விதிகளுக்கு சில வர்த்தகர்கள் கட்டுப்படுவதாகவும் இல்லை. இதனால் நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஓய்வுநாள் இன்றி மாதம் முழுவதும் தொடர்ச்சியாக வேலை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு நகரிலுள்ள பல்பொருள் விற்பனை நிலையங்கள் சில ஞாயிற்றுக்கிழமைகளிலும் வர்த்தக நிலையங்களை மூடாது ஊழியர்களுக்கு ஓய்வும் வழங்காது ஏனைய நாள்களைப் போல் முழு நாளும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. ஓய்வின்றி தொடர்ச்சியாக வேலை செய்வதால் ஊழியர்களுக்கு மன உளைச்சல் ஏற்பட்டுள்ளது.

சங்கானை, மானிப்பாய், யாழ்ப்பாண பிரதேசங்களில் உள்ள வர்த்தகர் சங்கங்கள் முறையாக இயங்குவது போல் பண்டத் தரிப்பு வர்த்தகர் சங்கமும் இயங்க வேண்டும். வர்த்தகர் சங்கம் முறையாக இயங்குவதன் மூலமே இங்குள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்" என ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக இயங்காதிருக்கும் பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத்தை இந்த வருடம் மீண்டும் கூட்டி புதிய நிர்வாகத்தைத் தெரிவு செய்து பண்டத்தரிப்பு நகர் பகுதி வர்த்தக நிலையங்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்த வர்த்தகர்கள் முன்வர வேண்டும். ஞாயிற்றுக்கிழமைகளில் ஏனைய வர்த்தக நிலையங்கள் மூடுவதைப் போல் அன்றைய தினம் நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் பல்பொருள் அங்காடிகளும் மூடப்படவேண்டும் என்று தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் என சில வர்த்தகர்களும் ஊழியர்களும் தெரிவிக்கின்றனர். (வ-10)

> **சங்கானை, மானிப்பாய், யாழ்ப்பாண பிரதேசங்களில் உள்ள வர்த்தகர் சங்கங்கள் முறையாக இயங்குவது போல் பண்டத் தரிப்பு வர்த்தகர் சங்கமும் இயங்க வேண்டும்.**

# அமைச்சரவைத் தீர்மானம் வடபகுதிக்குப் பொருந்தாது

### *உயர் தேசியப் பட்டதாரிகள் நியமனம் குறித்த வழக்கு செப்ரெம்பருக்கு ஒத்தி வைப்பு*

யாழ்ப்பாணம், பெப்.2

உயர்தேசிய கணக்கியல் முகாமைத்துவப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குதல் தொடர்பாக அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் வடபகுதி பட்டதாரிகளுக்கு பொருந்தாது என சட்டமா அதிபர் திணைக்களம் உயர்நீதி மன்றில் வியாழக்கிழமை தெரிவித்தது.

நாடளாவிய ரீதியில் பட்டதாரி பயிலுநர் நியமனம் வழங்கப்பட்ட போது உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகளும் உள்வாங்கப்பட்டிருந்தனர். இதன்போது வடமாகாணத்தைச் சேர்ந்த குறித்த பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

இதனால் வடமாகாணத்தைச் சேர்ந்த 228 உயர் தேசிய டிப்ளோமா பட்டதாரிகள் 2012 ஜீலை மாதம் 31 ஆம் திகதி உயர்நீதிமன்றில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றைத் தாக்கல் செய்தனர். இந்த வழக்கின் விசாரணை வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது நீதியரசர் ஸ்ரீபவன் தலைமையிலான இரு நீதியரசர் குழாம் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையான சட்டத் தரணி குறித்த அமைச்சரவைப் பத்திரம் வடக்கு மாகாண உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ பட்டதாரிகளுக்குப் பொருந்தாது என்று கூறினார்.

இதனையடுத்து குறித்த அமைச்சரவைப் பத்திரத்தை மன்றில் சமர்ப்பிக்குமாறு மனுதாரர் சார்பில் தோன்றிய சட்டத்தரணியால் கோரிக்கை விடப்பட்டது. இதனை எதிர்தரப்புச் சட்டத்தரணி நிராகரித்தார். வழக்கை குறுகியகால அடிப்படையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும்படி மனுதாரர் தரப்பு சட்டத்தரணி கோரிய போதும் அதை நிராகரித்து விசாரணைக்காக வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 29 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந)


## மரண அறிவித்தல்

### செல்லையா றோய் இரத்தினராசா



கோப்பாய் மத்தி கோப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா றோய் இரத்தின ராசா நேற்று (01.02.2014) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. G.S. செல்லையா - திருமதி செல்லையா (செல்வி ரீச்சர்) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் மனோராஜன், லலாமேதர் (கனடா), சாந்தோபிட்ச் (லண்டன்), ரஞ்சோ, மதீதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கருணா காலஞ்சென்ற பொபி மேதர் எட்வின்பிட்ச், மதிதரன் (Fermely NESTLE) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (02.02.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணிக்கு கன்னி மரியாள் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

" தங்கவாசம் "
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தகவல்:
மனோராஜன் (சகோதரன்),
மதிதரன் (மைத்துனர்)

## மரண அறிவித்தல்

### CHELVADURAI SELVARAJAH
### (செல்வராஜா)



உரும்பிராயை பிறப்பிடமாகவும் மலேஷியா, ஆஸ்தி ரேலியாவை (கன்பரா) வசிப்பிடமாகவும் கொண்ட செல்வதுரை செல்வராஜா கடந்த (28.01.2014) ஆஸ்திரேலியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வதுரை- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், மலேசியாவைச் சேர்ந்த திரு.திருமதி குல சிங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், விவியன் செல்வமணியின் அன்புக் கணவரும், கிங்ஸ்லி சிங்கராஜா, லெஸ்லி செல்வசிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெனி(f)பர், ஹென்றீற்றா ஆகியோரின் அன்பு மாமியும், ஆஷ்லிநாதனின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான நடராசா, தியாகராசா, சிவபாக்கியம், பேரின்பம் மற்றும் வைத்தியகலாநிதி இந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2014) திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வைத்தியகலாநிதி
செல்வம் , உரும்பிராய். — செ. இந்திரராசா(சகோதரன்)

## German Institute


Deutsch மொழி பரீட்சையில் இம்முறை சித்தியடைந்த மாணவர்கள். இவர்கள் 65-86 வரை புள்ளிகள் பெற்றுள்ளார்கள்.

நீங்களும் இவர்களைப் போன்று ஒரே தடவையில் சித்தியடைய வேண்டுமாயின் போலியானவர்களை நம்பி ஏமாறாமல் உடனே தொடர்பு கொள்ளுங்கள்."
இது ஒரு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட Institute.

அடுத்த பிரிவு 05.02.2014 அன்று ஆரம்பம்

T.P: 077 160 4823
Mrs. Kajenthini

## வீடு வாடகைக்கு

சிவலிங்கப்புளியடி, யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு

(44272) (10.14) தொடர்பு: 077 0341 356

## நிப்பொன் எஸ்.பி இன்ரநஷனல் பிறைவேற் லிமிட்டெட்

ஜப்பான் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. (மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்) விலை 6000/= தொடக்கம் பெற்றுக் கொள்ளலாம்.


மேலதிக தொடர்புக்கு:- பலாலி றோட், கோண்டாவில், யாழ்ப்பாணம்.
சந்தி அருகாமை. T.P:-0778435061

## விற்பனைக்குண்டு

LED, LCD, Wega Tv, CD Player மற்றும் றேடியோ, றெக்கோடிங் bar இக்கு தேவையான பொருள்கள், வெல்டிங் மெசின் மற்றும் Dfreez, உடற்பயிற்சி இயந்திரம் என்பன விற்பனைக்குண்டு.

(44269) (10.14) தொடர்பு: 072 3411140

## நினைவுகள் சுமந்த 7 ஆண்டுகள்



### சூசைப்பிள்ளை வேதநாயகம்

அவர் வருகையில் (இயேசு கிறிஸ்து) அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் 1 கொரிந். 15 : 23

ஆண்டுகள் ஏழு மறைந்ததோ
மகிமையில் நீங்கள் சென்று-
நமக்காய் உதிரம் சிந்தியவரை
நீங்கள் நம்பியதால்
நிச்சயமாய் நாங்கள் நம்புகிறோம்
உங்களுக் குண்டு நித்திய வாழ்வு

இல. 671 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேஸ்வரி (மணி) இராசரெத்தினம்



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி இராசரெத்தினம் நேற்று (01.02.2014) பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றர்களான வைத்திலிங்கம் - தில்லைவனம் தம்பதியரின் அன்பு மருமகளும், இராசரெத்தினத்தின் ( ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7 ஆம் வட்டாரம், நயினாதீவு.
077 8445678, 0033950367950

(44273.14.17)

தகவல்:
இராமநாதன் (செந்தில்)
மருமகன்

## மரண அறிவித்தல்

### எல்லுப்போல தங்கராசா



சாயுடை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட எல்லுப்போல தங்கராசாநேற்று (01.02.2014) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான எல்லுப்போல செல்லம்மா தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி செல்லம்மா தம்பதியரின் மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், கலைமகள், கஜீதா, தயாளன் தயாளினி, கல்யாணி, தமிழ்ச் செல்வன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சின்னத்தம்பி, இரத்தின சிங்கம், ஸ்ரீஸ்கந்தராசா நாகராசா, தவமணி, அனுஷாவதி ஆகியோ ரின் சகோதரரும், முத்துலிங்கம் காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் குணரத்தினம், புனிதவதி பஞ்சவர்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (03.02.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
இணுவில் கிழக்கு,

(44270) (10.14)

தகவல்:
குடும்பத்தினர்

# பொலிஸாரின் கவனயீனத்தால் இரு வழக்குகள் தள்ளுபடி

யாழ்ப்பாணம்,பெப் 02

பொலிஸாரின் கவனவீனம் காரணமாக யாழ்.நீதிமன்றில் கடந்த வாரம் இரண்டு வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு எதிரான குற்றச்சாட்டு போலியானதாக அமைந்திருந்ததனாலும், மற்றொரு வழக்கில் வழக்குத் தொடர்பான எந்த விடயங்களையும் பொலிஸார் தெரிந்து கொள்ளாமல் விழித்ததால் விசாரணையைத் தொடர முடியாமலும் இரண்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.

யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ. சிவகுமார் முன்னிலையில் இந்த இரண்டு வழக்குகளும் கடந்த வாரம் விசாரணைக்கு வந்திருந்தன.

இணுவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். அவர் விளக்கமறியலில் உள்ளபோது நீதிமன்ற அனுமதி பெற்றுச் சிறைச்சாலைக்குச் சென்ற பொலிஸார் சந்தேக நபரிடம் விசாரணை செய்து அதன் அடிப்படையில் சந்தேக நபருக்கு எதிராகக் குற்றச்சாட்டுப் பத்திரமும் தாக்கல் செய்திருந்தனர். கடந்த வாரம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது சந்தேகநபரும் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார். அவர் மீது பொலிஸார் திருட்டுக் குற்றச் சாட்டுச் சுமத்தியிருந்தனர். அவரது வாக்கு மூலம் என்று கூறித் திருட்டுத் தொடர்பிலான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் அந்தக் குற்றச்சாட்டைச் சந்தேக நபர் மறுத்தார். அவரது வாக்கு மூலம் என்று கூறிய பத்திரத்தில் அவரது கையொப்பம் இடப்பட்டிருந்ததைக் காண்பித்த போது, அது தனது கையொப்பம் அல்ல என்று கூறிய சந்தேக நபர், தான் ஆங்கிலத்தில் கையொப்பம் வைக்கவில்லை என்றும் தெரிவித்தார். பொலிஸாரும் அது தொடர்பில் எதனையும் கூற முடியாது விழித்தனர். பொலிஸாரின் பொறுப்பற்ற தன்மையால் வழக்கைக்கொண்டு நடத்த முடியாததனால் அதனைத் தள்ளுபடி செய்த நீதிமன்று சந்தேக நபரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்தது.

மற்றையது வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி மோசடி செய்யப்பட்ட ஒரு வழக்கு. அது தொடர்பிலும் பொலிஸார் எந்தத் தகவலும் தெரிந்திராமல் விசாரணையை முன்னெடுக்க வந்திருந்தனர். அதனால் வழக்கைத் தள்ளுபடி செய்வதாக நீதிமன்று தெரிவித்து சந்தேக நபரையும் விடுதலை செய்தது. (த-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இனப்படுகொலை

தாவது:-

போரின் காரணமாக வீடு வாசல்களை இழந்தவர்கள், உறவுகளை இழந்தவர்கள், விதவைப் பெண்கள் ஆகியோருக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும். அவர்களுக்கான நிவாரணம் வழங்கப்பட வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் நம்பகமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த விசாரணைகளை இங்கு வைத்து நடத்த முடியாவிட்டால் வெளிநாடுகளில் வைத்து நடத்தலாம். இதைத்தான் இங்குள்ள மக்கள் விரும்புகின்றனர்.

இனங்களுக்கு, மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம். அவ்வாறான முன்னெடுப்புக்கள் எவையும் முன்னெடுக்கப்படவில்லையா என்று உதவிச் செயலர் நிஷா கேள்வி எழுப்பினார். அதற்கு நாங்கள் பதிலளிக்கும் போது, அரசு நல்லிணக்கத்தைக் கொண்டு வராது இலங்கை அரசு தாம் தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழித்து விட்டோம். இந்த நாட்டில் இனிப் பிரச்சினை இல்லை. அவற்றை முடிவுக்குக் கொண்டு வந்துவிட்டோம் என்ற பெருமையோடு இருக்கிறது. நல்லிணக்கத்தை, சமாதானத்தைக் கொண்டுவருவதற்கான யோசனை அவர்களிடம் இல்லை. இது தொடர்பில் கடந்த காலத்தில் நடந்த விடயங்களை எடுத்துக் கூறினேன். ஜெனிவாவில் எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதாக உதவிச் செயலர் நிஷா கேட்டார். தமது கையால் இராணுவத்தினரிடம் பிள்ளைகளைக் கையளித்தவர்கள், சரணடைந்து காணாமற்போனவர்கள் தொடர்பில் அரசு பதில் சொல்ல வேண்டும். இதற்கான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும்.

சமாதானத்துக்கு தடை இராணுவமே

இலங்கையில் நடக்கின்ற விசாரணைகளில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையில்லை. இங்கு நடத்தப்படுகின்ற விசாரணைகளில் அதிகமாகவே இராணுவத்தினர் அல்லது அவர்களுடன் தொடர்புடைய தரப்புக்கள் இருப்பார்கள். ஆகவேதான் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கை விடுக்கின்றோம். இதில் சம்பந்தப்படாதவர்கள்தான் விசாரணை நடத்த வேண்டும்.

இன்றும் நாம் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடன் பல்வேறு கூட்டங்களை ஏற்பாடு செய்தால், அவ்வாறு நாம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு இராணுவமே தடையாக இருக்கும்.

அரசியல் மாற்றம் வேண்டும்

இலங்கையில் ஏற்பட்டது இன, மதப் பிரச்சினை அல்ல. அரசியல் பிரச்சினையே ஏற்பட்டது. அரசியலில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளேன் - என்றார்.

யாழ். ஆயருடனான சந்திப்பின் பின்னர், யாழ்.நகரிலுள்ள விடுதியில் வைத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் உள்ளிட்ட, தமிழ் சிவில் சமூகத்தினரை அமெரிக்க உதவிச் செயலர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, போரின் இறுதிக் கட்டத்தில் இராணுவத்தினரிடம் எமது பிள்ளைகளை நேரடியாகக் கையளித்தோம். இன்று வரை அவர்கள் வீடு திரும்பவில்லை. அவர்களை இலங்கை அரசு இரகசியத் தடுப்பு முகாம்களில் வைத்திருக்கின்றது. அது சர்வதேசத்துக்கும் தெரியும். அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனச் சிவில் சமுகத்தினர் வலியுறுத்தினர்.

சர்வதேச விசாரணை

இலங்கை அரசுக்கு எதிராகத் தனியே இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற போர்க் குற்றம் தொடர்பில் மாத்திரம் சர்வதேச விசாரணையை நாங்கள் கோரவில்லை. ரோம் சாசனத்தில் குறிப்பிட்டவாறு இனப்படுகொலை, போர்க்குற்றம், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தால் விசாரணை நடத்தப்படவேண்டும்.

இந்த விடயம் எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப் படவுள்ள பிரேரணையில் உள்ளடக்கப்படவேண்டும்.

கடந்த இரண்டு ஆண்டுகளைப் போல் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்கக்கூடாது. கால அவகாசம் வழங்குவதானது, இலங்கை அரசைப் பலப்படுத்துவதாக அமையும் என்றும் தமிழ் சிவில் சமூகத்தினர் சுட்டிக் காட்டினர்.

வடிவம் தெரியாது

இதற்குப் பதிலளித்த உதவிச் செயலர் நிஷா, இலங்கை அரசு பொறுப்புகூறல் தொடர்பில் காத்திரமாக எதனையும் செய்யவில்லை. இலங்கை அரசுக்கு எதிராக, ஐ.நா மனித உரிமைகள் சபையில் பிரேரணை சமர்ப்பிக்கப்படும். ஆனால் அதன் வடிவம் என்ன என்பது, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அங்கத்துவ நாடுகளின் நிலைப்பாடுகளிலேயே தங்கியிருக்கும் என்று தெரிவித்துள்ளார். (த-5)

### ஐ.நா

யின் ஏற்பாட்டில் ஆரம்பமான நிகழ்வில் தாயகத்திலிருந்து தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சர்வதேச மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஆகியோர் இணைந்து கொண்டு தமது பங்களிப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

முதல் நிகழ்வாகத் தாயகத்தில் இன்னுயிர் நீத்த எமது உறவுகளுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்பின்னர் ஆரம்ப உரையை, பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவோன் மற்றும் லீ-ஸ்கொட் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த ஐ.நா. சபையின் முன்னாள் உதவிப் பொதுச் செயலாளர் டெனிஸ் கலிடே,

இலங்கையில் நடைபெற்ற இன அழிப்புத் தொடர்பிலும் அதனைத் தொடர்ந்தும் அங்கு தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் சம்பவங்கள் குறித்தும் தாம் கண்ட அனுபவங்கள் மற்றும் ஆதாரங்களைச் சபையில் எடுத்துரைத்தார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குத் தேவையான நியாயத்தை எடுத்துரைக்கத் தகுந்த மற்றும் அது தொடர்பில் இறுக்கமான தீர்மானம் இயற்றக் கூடிய தளமாக ஐ.நாவின் பாதுகாப்புச் சபையே உள்ளது. அன்றேல் தனிப்பட்ட முறையில் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீன் மூனுக்கு அதிகாரம் இல்லை. அவர் ஒரு ஊழியர் மாத்திரமே என்று குறிப்பிட்டார்.

போர்க் குற்ற ஆதாரங்கள் உண்டு

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த, சிட்னி பல்கலைக் கழகத்தின் சமாதானக் கற்கை நெறிகளுக்கான இயக்குனர் பேராசிரியர் ஜேக் லின்ச்,

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியதுடன் சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புக்களும் இலங்கை அரசுக்கு எதிரான குரலை அதிகரிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

விக்கிலீக்ஸின் இலங்கை குறித்த ஆதாரத்தை மேற்கோள்காட்டிய அவர்; இலங்கையில் அமெரிக்கத் தூதரக இரகசிய ஆவணம் ஒன்றின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற செய்மதி ஒளிப்படத்தின் அடிப்படையில் இறுதிப் போரின் போது தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு மற்றும் போர்க் குற்றம் தொடர்பிலும் தெளிவான ஆதாரங்கள் வெளியிடப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டினார். இது மறுக்கவோ எவராலும் மறைக்கவோ முடியாத ஒரு ஆதாரமாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (த-5)

### இலங்கையை

சந்தித்துப் பேசியிருந்தார்.

இதன்போது, ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணையில் அனைத்துலக விசாரணை கோரப்படாது என்பதை உறுதிப்படுத்துவதற்குப் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான அரசு உதவ வேண்டும் என்று பீரிஸ் கோரியிருந்தார் என இந்திய வெளிவகார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் மனோநிலையில் இருந்த சல்மான் குர்ஷித், இதற்கு எந்த வாக்குறுதியையும் கொடுக்கவில்லை என்றும் அந்த அதிகாரிகள் கூறி யுள்ளனர்.

அதேவேளை, வொஷிங்டனுடனேயே இதுபற்றி நேரடியாகப் பேசிக் கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர் பீரிசுக்கு, சல்மான் குர்ஷித் ஆலோசனை கூறியுள்ளார். அத்துடன், இந்தத் தீர்மானம் தொடர்பாக புதுடில்லி சரியான நேரத் தில் முடிவெடுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி இன்னமும் தமிழ்நாட்டில் எந்தக் கூட்டணியையும் அமைக்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டதாக குற்றம்சாட்டப்படும் நிலையில், இந்த நேரத்தில் கொழும்புக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தால், தமிழ்நாட்டில் கூட்டணி அமைப் பதில் காங்கிரஸுக்கு சிக்கலை ஏற்படுத்தும் என்பதாலேயே இலங்கையுடன் மோதல் போக்கை கடைப்பிடிப்பதாக வும் எக்கணமிக் ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், கொழும்புடன் நட்புடன் இருப்பதற்கும் டில்லி விரும்புவதாகவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது. (த-சி)

### 24

மற்றும் மன்னார் நகர சபை உறுப்பினர்களான என்.நகுசீன், எஸ்.டிலான், எம்.பிரிந்தாவனநாதன், மெரினஸ் பெரேரா உட்பட நகர சபையின் பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

திறக்கப்பட்ட குறித்த வாராந்த சந்தை சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மட்டுமே திறக்கப்படும். உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் தமது உற்பத்திப் பொருள்களைக் குறித்த இரு தினங்களிலும் இந்தச் சந்தைக்குக் கொண்டு வந்து விற்பனை செய்ய முடியும் என மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் குறித்த சந்தை வாராந்த சந்தையாக காணப்பட்டது. பின் நாட்டில் இடம் பெற்ற போர்ச் சூழ்நிலை காரணமாக அது தினச் சந்தையாக மாற்றப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் நகர சபை மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக தினச் சந்தை பிறிதொரு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் 24 வருடங்களின் பின் மீண்டும் வாராந்த சந்தையாகத் திறக்கப்பட்டுள்ளது. (த-56)

### சர்வதேச

வளவன் ஆகியோர் பங்கேற்றனர்.

ஐ.நா. மனித உரிமை சபைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்றும், இலங்கை மீது சர்வதேச விசாரணை நடத்தக்கோரி இந்தியாவும் பிரேரணையொன்றைக் கொண்டுவர வேண்டும் என்றும் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், வடமாகாணசபைக்கு முழுமையான அதிகாரங்களை வழங்க வேண்டும் என்றும் அந்தத் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

மேலும், கச்சதீவில் தமிழக மீனவர்களுக்கு உரிமையில்லை என்று மத்திய அரசு மனுத்தாக்கல் செய்திருப்பதற்கு இதில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழக மீனவர்களைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

### கொன்ஸ்டபிள்

இதில் அளவெட்டியைச் சேர்ந்த நற்குணராஜா பிரசன்னா (வயது-23) என்பவரே உயிரிழந்தார். இவர் ஊர்காவற்துறைப் பொலிஸ் நிலையத்தில் பணிபுரிபவராவார்.

கடமையில் ஈடுபட்டிருந்த அவர் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடு ஒன்று தொடர்பில் விசாரணை செய்யச் சென்றபோது இவ்வாறு விபத்துக்குள்ளானார். உடனடியாக அவர் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் தெரியவந்தது. அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (த-4)

### பல

நல்லூர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

அங்கு வழிபாடுகளை முடித்துக் கொண்டு, யாழ்.ஆயர் இல்லத்துக்குச் சென்று காலை 9 மணியிலிருந்து 9.50 மணிவரை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையுடன் கலந்துரையாடல் நடத்தினர்.

இதன் பின்னர் 'உதயன்' அலுவலகத்துக்கு வருகை தந்தார் நிஷா தேசாய் பிஸ்வால்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், உதயன் நிர்வாக இயக்குநருமான ஈ.சரவணபவன் அவரை வரவேற்றார்.

இதன் பின்னர் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன், உதயன் பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன் ஆகியோருடன் சுமார் ஒரு மணி நேரம் கலந்துரையாடினார்.

இதன் பின் கடந்த வருடம் சித்திரை வருடப் பிறப்புக்கு முதல் நாள் எரியூட்டப்பட்ட உதயனின் இயந்திரப் பகுதியையும் அவர் பார்வையிட்டார்.

இந்தச் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு, யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் மதிய உணவுடன் சிவில் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இறுதியில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியைச் சந்தித்துப் பேசினார். பின்னர் பலாலி விமான நிலையம் சென்று அங்கிருந்து விமானத்தில் கொழும்பு திரும்பினார். (த-5)

### காட்டுப்

இடத்துக்கு சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி த. அரியரட்ணம் சடலத்தைப் பார்வையிட்டு அதனை மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு பணித்தார். சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு கிளிநொச்சி பொது மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டது.

அங்கு விசாரணைகளை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி, ஒரு வாரத்துக்கு முன்னரான காலப்பகுதியில் இறப்பு நிகழ்ந்திருக்கலாம் எனவும் அது கொலையாக இருக்கலாம் எனவும் சந்தேகிப்பதாகத் தெரிவித்தார்.

குறித்த சடலத்தில், இளம் றோஸ் கலர் சேர்ட்டும், கறுப்பு நிற ஜீன்ஸ்ம் காலில் கறுப்பு நிற சப்பாத்தும் உள்ளதுடன் பேர்ஸ் ஒன்றும் அதனுள் மோட்டார் சைக்கிள் திறப்பு ஒன்றும் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-18-5)

# சௌமிதரனின் சதம், நிருபனின் பந்து வீச்சினால் வட்டுக்கோட்டையை வென்றது யாழ்.மத்திய கல்லூரி

யாழ்ப்பாணம், பெப்.2

சௌமிதரனின் சதம், நிருபனின் அதிரடி பந்து வீச்சு கைகொடுக்க வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை 170 ஓட்டங்களால் வெற்றி கொண்டது யாழ். மத்திய கல்லூரி அணி.

இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 19 வயதுப் பிரிவு அணிகளின் பிரிவு III இற்கு இடையே நடத்தும் துடுப்பாட்டப் போட்டி கடந்த புதன், வியாழக்கிழமைகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 51 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மதுஷன் 23 ஓட்டங்களையும், தனுஷன் 32 ஓட்டங்களையும், அலன்ராஜ் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் ஜிந்துஷன் 18 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 60 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், நிலக்சன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் நிமலேந்திரா 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 18 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 41 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது.

நிலக்சன் 24 ஓட்டங்களையும், யாழிஷன் 23ஓட்டங்களையும், நிமலேந்திரா 10 ஓட்டங்களையும் பெற்றனர்.



சௌமிதரன்



நிருபன்

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் நிருபன் 15 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 49 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளையும், மதுஷன் 11 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் சௌமிதரன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 10 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினை வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 53 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சௌமிதரன் ஆட்டம் இழக்காமல் 109 ஓட்டங்களையும், டினோஷன் 48 ஓட்டங்களையும் ஜெயந்திரன் 19 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சார்பில் ஜிந்துஷன் 13 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 53 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், நிமலேந்திரா 17 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 54 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் 27 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் நிமலேந்திரா 15 ஓட்டங்களையும், யாழிஷன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் நிருபன் 12 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 39 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளையும், மதுஷன் 9 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 10 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், அலன்ராஜ் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி ஓர் இலக்குகளையும் வீழ்த்தினர். (த-23)



யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் தேசிய பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது.
இதில் விருந்தினராகக் கலந்து கொண்ட பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்திரு.எயின்ஸிலி றொஷான், வடக்கு மாகாண சபை உறுப்பினர் இமானுவேல் ஆனல்ட், வர்த்தக வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் தர்மலிங்கம் தேவராஜன் ஆகியோர் அழைத்து வரப்படுகின்றனர். (த-20-21)

## கைதடி சரஸ்வதியின் கிரிக்கெட் போட்டி

கைதடி, பெப்.2

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியிலான ஆறு பேர்களைக் கொண்ட ஐந்து பரிமாற்றத் துடுப்பாட்டப் போட்டி ஒன்றை விரைவில் நடத்தவுள்ளதாக சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். மேற் படி போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்கள் தங்கள் பதிவுகளை எதிர் வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னதாக மேற்கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-288)

## கலைமதி, கொலின்ஸ் ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.2

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் கலைமதி விளையாட்டுக்கழகம், கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

முதலாவது ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.


இதில் கலைமதி விளையாட்டுக்கழக அணி 6:0 என்ற



கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பூமகள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற ஆண்களுக்கான வீதி ஓட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற ப.பிரதீபன் (த-21)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப்.2

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கிரிக்கெட், கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், பெப்.2

அராலி வடக்கு சில்வெஸ்ரார் இளைஞர் கழகம் நடத்தும் சங்கானைப்பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையே நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஏ.எல்.வி.க. அணியை எதிர்த்து நியூ ஸ்ரார் விளையாட் டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.15 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கலை நகர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், பெப்.2

கரவெட்டிப் பிரதேச பிரிவு இளைஞர் கழகங்களுக்கு இடையிலான 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பெண்களுக்கான எல்லே போட்டி இன்று மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், பெப்.2

மாத்தளை சென்.தோமஸ் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையிலான 19 வயதுப் பிரிவு அணிகளின் சிநேக பூர்வ கிரிக்கெட் ஆட்டம் இன்றும் நாளையும் மாத்தளை சென். தோமஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (த-23)

* * *

வலி.வடக்கு, பெப்.2

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் தலைவர் வெற்றிக் கிண்ணத்துக்காக வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வரு மாறு:-

* தெல்லிப்பழை கலைமகள் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம்.

* அராலி திருமகள் விளையாட்டுக்கழகம் எதிர் அராலி வானவில் விளையாட்டுக் கழகம். (த-86)

## அராலியில் மரதன்

அராலி வடக்கு சில்வெஸ்ரார் இளைஞர் கழகம் நடத்தும் ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

## தடகளப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.2


நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது என விளையாட்டு உத்தியோகத்தர் மயூரன் அறிவித்துள்ளார். (த-23)

# ஒருநாள் அந்தஸ்தை இழந்தன கென்யா, நெதர்லாந்து, கனடா

துணை அங்கத்துவ நாடுகளாக இருந்து வந்த கென்யா, கனடா, நெதர்லாந்து ஆகிய நாடுகள் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பை இழந்துள்ளன. நியூசிலாந்தில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணத் தெரிவுகாண் போட்டிகளில் போதிய பெறுபேறுகளை வழங்காமையே இதற்கு காரணமாகும்.

நடைபெற்று வரும் தொடரில் சிறப்பான பெறுபேறுகளை வழங்கி வரும் ஐக்கிய அரபு ராச்சியம், ஹொங் கொங், பப்புவா நியூகினியா ஆகிய நாடுகள் புதிதாக ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளதோடு அடுத்த 4 வருடங்களுக்கு துணை அங்கத்துவ நாடுகளாக ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இணைந்து கொள்ளும்.

இதேவேளை இந்த மூன்று நாடுகளும் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்ற முடியும். உலகக் கிண்ணத் தெரிவுகாண் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் நாடுகள் 2015ஆம் உலகக்கிண்ண போட்டிகளுக்கு தகுதி பெறும் என்ற அடிப்படையில் அயர்லாந்து, ஆப்கானிஸ்தான் அணிகளுடன் ஸ்கொட்லாந்து, ஐக்கிய அரபு ராச்சியம் ஆகிய நாடுகள் தகுதி பெற்றுள்ளன. (கு)



மஹேந்திர சிங் டோனி

# புதிய சாதனை படைத்தார் டோனி

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 8000 ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சிறப்பை இந்திய அணித் தலைவர் மஹேந்திர சிங் டோனி பெற்றுள்ளார்.

நியூஸிலாந்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐந்தாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் 28 ஓட்டங்களைக் கடந்தபோது, அவர் இந்த மைல் கல்லை எட்டினார்.

இதன்மூலம் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் 8000 ஓட்டங்களை கடந்த 6 ஆவது வீரர் என்ற பெருமையையும் அவர் அடைந்தார்.

இதுவரை 243 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ள மஹேந்திரசிங் டோனி, 9 சதங்கள், 54 அரைச்சதங்கள் அடங்கலாக 8046 ஓட்டங்களை குவித்துள்ளார்.

போட்டியொன்றின் அதிகபட்சமாக 183 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுள்ள அவர் 53.28 என்ற சராசரியைக் கொண்டுள்ளார். (கு)

# ஐ.பி.எல் ஏலம் படு சூடு

இந்திய அணியில் இதுவரை இடம் பெறாத ஆனால் உள்ளூர் தொடர்களில் ஆதிக்கம் செலுத்தி வரும் வீரர்களுக்கு ஐ.பி.எல் ஏலத்தில் கிராக்கி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

7ஆவது ஐ.பி.எல் போட்டிகளுக்கான ஏலம் எதிர்வரும் 12 ஆம்,13 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்கும் இந்திய மற்றும் வெளிநாட்டு வீரர்களின் ஏல மதிப்பு கடந்த 29 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இந்திய அணியில் இடம்பெறாத அதேசமயம் ரஞ்சி உள்ளிட்ட உள்ளூர் தொடர்களில் சாதித்து வரும் வீரர்கள் அடங்கிய பட்டியல் வெளியிடப்பட்டது.

அனைத்து மாநில கிரிக்கெட் சபைகளும் வீரர்களின் பெயர்களை பரிந்துரைத்துள்ளன. 651 பேர் கொண்ட அந்தப் பட்டியலில் வெளிநாட்டு வீரர்களும் இடம்பெற்றுள்ளனர். ஏற்கெனவே ஐ.பி.எல் போட்டியில் பங்கேற்றவர்கள், பங்கேற்காதவர்கள் என இரண்டு பிரிவுகளில் வீரர்கள் பரிந்துரைக்கப் பட்டுள்ளனர்.

இந்தப் பட்டியல் அனைத்து அணி நிர்வாகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

ஏலத்தில் எடுக்க விரும்பும் வீரர்கள் குறித்த விவரத்தை நாளை திங்கட்கிழமைக்குள் அணிகள், ஐ.பி.எல் நிர்வாகத்திடம் வழங்க வேண்டும்.

இந்த வீரர்களுக்கான அடிப்படை விலை ரூபா 30 லட்சத்தில் இருந்து ரூபா 90 லட்சம் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

19 வயதுக்குட்டோருக்கான உலகக் கிண்ண போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணியின் அணித் தலைவர் உன்முக்த் சந்த், ரஞ்சி தொடரில் அதிக இலக்குகளை வீழ்த்திய ரிஷி தவன், மணிஷ் பாண்டே, ரஜத் பாட்டியா, இக்பால் அப்துல்லா, சுமன் ஆகியோருக்குக் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே தேசிய அணியில் இடம்பெற்ற வீரர்கள் பட்டியலில் கூடுதலாக 12 வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர், இதனால் அந்த எண்ணிக்கை 244 ஆக உயர்ந்தது.

இதில் இந்திய வீரர்கள் வருண் ஆரோன், ஹேமங் பதானி, லட்சுமி சுக்லா, ஆவிஷ்கர் சல்வி, வி.ஆர்.வி. சிங் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். (கு)



அன்டி பிளவர்

# இங்கிலாந்துப் பயிற்சியாளர் அன்டி பிளவர் பதவி விலகல்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பணிப்பாளர் பதவியில் இருந்து அன்டி பிளவர் விலகியுள்ளார். ஆஸ்திரேலியாவில் வைத்து இங்கிலாந்து அணி அடைந்த மோசமான தோல்விகளே இந்த முடிவுக்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. டெஸ்ட் தொடர் நிறைவடைந்ததும் விலகுவதில்லை என்ற முடிவில் இருந்தாலும் தொடர்ந்து வந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் அடைந்த தோல்விகளே அன்டி பிளவர் இந்த முடிவு எடுக்கக் காரணமாக அமைந்தது. இதேவேளை தெரிவுக்குழு உறுப்பினராக இன்னும் ஒருவர் நியமிக்கப்படும் வரை தெரிவுக்குழு உறுப்பினராக அவர் கடமையாற்றுவார் எனவும், இங்கிலாந்தின் செயற்திறன் நிலையத்தில் தன்னுடைய சேவைகளைத் தொடர்வார் எனவும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பணிப்பாளர் என்ற பதவி அவருக்கு வழங்கப்பட்டு இருந்தது. இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளராக 5 வருடங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டார் பிளவர். இங்கிலாந்து கிரிக்கெட் வரலாற்றில் மிகச் சிறந்த பயிற்றுவிப்பாளர் என்ற பெருமையையும் பெற்றுக் கொண்டார். இங்கிலாந்து அணியின் முன்னேற்றத்துக்கும், வெற்றிகளுக்கும் முக்கிய பங்கு வழங்கியிருந்தார் பிளவர். பிளவரின் இந்த முடிவு கவலையளிப்பதாகவும், அவருக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஆஸ்திரேலியா தொடர் தோல்விகளின் பின்னரும் முழுமையாக ஆதரவு அளித்ததாகவும், கிரிக்கெட் சபைத் தலைவர் ஜைல்ஸ் கிளார்க் 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வரை அன்டி பிளவரே பதவியில் தொடரவேண்டும் எனத் தெரிவித்ததாகவும் இங்கிலாந்துக்கு கிரிக்கெட் அணிக்கு அண்மையில் நியமிக்கப்பட்ட புதிய முகாமைத்துவப் பணிப்பாளர் பௌல் டௌண்டன் தெரிவித்தார்.

அன்டி பிளவரின் இந்த முடிவுக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் அழுத்தங்களே காரணம் என்ற பேச்சுக்கள் எழாமல் இல்லை. இதன் காரணமாகவே இந்த முடிவை அவர் எடுத்தார் எனவும் இதன் ஒரு பகுதியாகவே நேற்று முதல் புதிய முகாமைத்[illegible] பணிப்பாளர் என்ற பதவிக்கு பௌல் டெ[illegible] நியமிக்கப்பட்டார் எனவும் உத்தியோ[illegible] பேச்சுக்கள் அடிபடுகின்றன.



வில்லியம்சன்

# 5 போட்டிகளிலும் அரைச்சதம்; நியூசிலாந்து வீரர் சாதனை

இந்தியாவுக்கு எதிரான ஐந்து ஒருநாள் போட்டிகளிலும் நியூசிலாந்து அணியின் வில்லியம்சன் அரைச்சதம் அடித்து சாதனை படைத்துள்ளார். நியூசிலாந்து சென்றுள்ள இந்திய அணி 4-0 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை இழந்துள்ளது.

இந்தத் தொடரில் ஐந்து ஒருநாள் போட்டிகளிலும் அரைச்சதம் அடித்து வில்லியம்சன் சாதனை படைத்துள்ளார்.

ஐந்து போட்டித் தொடரிலும் அனைத்து ஆட்டங்களிலும் அரைச்சதம் அடித்த 2ஆவது வீரர் வில்லியம்சன் ஆவார்.

2003/04 ஆண்டு நியூசிலாந்துக்கு எதிரான 5 போட்டித் தொடரில் பாகிஸ்தான் வீரர் யாசிர் ஹமீத் அனைத்து ஆட்டங்களிலும் அரைச்சதம் அடித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

## கடைக்கட்டடங்கள் விற்பனைக்கு

யாழ். கண்டி வீதி-பரந்தன் முல்லைத் தீவு வீதியில் பரந்தன் சந்தியிலிருந்து 300 யார் தூரத்திற்குள் கடைக் கட்டடங்கள் விற்பனைக்குள்ளன.

தொ: ர்பு: K.முருகன்
(441..)(4.6.3)
077 527 2093, 077 602 7324, 021 228 0020

## கட்டடம் உடன் வாடகைக்கு தேவை

வவுனியா நகர் எல்லைக்குள் 5000 - 7500 சதுர அடி பரப்பளவினைக் கொண்ட இரு மாடிக் கட்டடம் ஒன்று சர்வதேச அமைப்பொன்றுக்கு உடனடியாக வாடகைக்குத் தேவைப்படுகின்றது.
கட்டடமானது 5 வாகனங்களை நிறுத்தக்கூடிய வசதியினையும் மூன்று பேஸ் மின்சார இணைப்பு மற்றும் குழாய் வழி நீர் வழங்கல் வசதியினையும் கொண்டிருக்க வேண்டும்.

மேலதிக தொடர்புகளுக்கு: 077 759 0357

SPECIAL OFFER

## London Metropolitan College

புதியபிரிவுகள் ஆரம்பம்



### DIPLOMA IN ENGLISH

தொழில்தேடுவோர், தொழில்புரிவோர், O/L, A/L பரீட்சைக்கு தோற்றியோர் ஆங்கில புலமையை வளர்த்து கொள்வதற்கான கற்கைநெறி.

- Speaking, Reading, Listening, Writing ஆகியன விசேட செயன்முறை மூலம் விரிவாக கற்பிக்கப்படும்.
- மாணவர்கள் தமது தேர்ச்சிக்கேற்ப தொடர்ச்சியாக Advanced Dip. In English இனை எட்டிப்பே கற்க முடியும்.
- மாணவர்களுக்கான இலகுவான கற்றல் முறையில் முற்றிலும் புதிய பாடத்திட்டத்தினூடாக வகுப்புகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

கட்டணம் 10500 7500/-

### SPOKEN ENGLISH WITH GRAMMAR

(Quick learning programme) | Duration: 2 Months Week/ Week ends

- ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்து கொள்ள விரும்புவோர்க்கான கற்கைநெறி.
- ஆங்கில உரையாடல் புலமையை வளர்ப்பது தொடர்பான பூரண விளக்கங்களுடன் கூடிய கற்கைநெறி.

Weekdays: 03.02.2014 | 05.02.2014 || Weekends: 08.02.2014 | 15.02.2014
அனைத்து கற்கைநெறிகளிலும் புதிய பிரிவுகள் ஆரம்பம். தவணை அடிப்படையிலான மிகக்குறைந்த கட்டணம்

LONDON METROPOLITAN COLLEGE
197, Arasady Road, Jaffna
Tel: 021 2227230, 0217538395
Web: www.lmcjaffna.edu.lk

## PHP programmer needed

Newly established web development company is looking for PHP programmer. A traineeship program for a period of one year will be conducted after which the trainee will be hired on a permanent basis. The traineeship program will mould the trainee to industry standard to deliver high quality solutions to international clients.

**Required tasks:** Programming and setting up websites using Drupal CMS. Maintenance and development of existing client websites.

**Requirements:** Fluent in HTML/CSS, PHP and Javascript. Fluent in English. Knowledge of Linux is a pluspoint.

**Office:** Jaffna

**Send application with complete CV to:**
V.Mayooran.
ph: 075 040 6139
Email: mayooran.vivekanandan@gmail.com

## இந்திய அணியின் வீரர்கள் மீது கவாஸ்கர், டிராவிட் பாய்ச்சல்

டோனி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி நியூசிலாந்திடம் ஒருநாள் தொடரை இழந்துள்ளதால் கடுமையான விமர்சனங்களை சந்தித்து வருகிறது.

இதுகுறித்து முன்னாள் அணித் தலைவரும், வர்ணனையாளருமான கவாஸ்கர் கூறுகையில், தற்போதைய வீரர்களில் சிலர் அரைச் சதம் கூட எடுக்க முடியாமல் 5,10 அல்லது 20 ஓட்டங்களில் ஆட்டமிழந்து விடுகிறார்கள். இவர்களை அடுத்த ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டிகளில் எப்படி சேர்க்க முடியும். அவர்களுக்கான இடத்துக்கு உத்தரவாதம் இல்லை. அனுபவம் வாய்ந்த வீரர்களுக்காக அணியின் கதவு தற்போது திறந்து இருக்கிறது.

வயது ஒருபிரச்சினை கிடையாது அவுஸ்திரேலிய 20/20 போட்டி அணியில் 39 வயதில் பிரட் ஹொக் இடம் பெறவில்லையா? என கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் அணித் தலைவர் டிராவிட் கூறுகையில், நியூசிலாந்து சென்ற இந்திய அணியில் வேகப்பந்து வீரர்கள் அனுபவம் இல்லாதவர்கள். வேகப்பந்து வீச்சு மிகவும் பலவீனமாக காணப்படுகிறது. உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற உள்ள நிலையில் டோனி இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

முகமது ஷமி, புவனேஸ்வர் குமார், வருண் ஆரான் அனுபவம் இல்லாதவர்கள் எனத் தெரிவித்துள்ளார். (த)

## தசாக கிருக யக்ஞ அழைப்பு

விஜய வருடம் தை மாதம் 10ஆம் நாள் (24.01.2014) வெள்ளிக்கிழமை
அட்டமி திருநாளில் அமரத்துவம் அடைந்த
**சுப்பிரமணியக் குருக்கள் தர்ப்பரானந்தேஸ்வரக் குருக்கள்**
(கம்பர் ஐயா) அவர்களின்

தசாகம் (02.02.2014) தைத் திங்கள் 20ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணி
மாசியம் (03.02.2014) தைத் திங்கள் 21ஆம் நாள் திங்கட்கிழமை
சபிண்டீகரணம் (04.02.2014) தைத்திங்கள் 22ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
கிரகயக்ஞம் (05.02.2014) தைத்திங்கள் 23ஆம் நாள் புதன்கிழமை

ஆத்மசாந்தி வேண்டி நடைபெறும் இந்நிகழ்வுகளில் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு, புதன்கிழமை சமாராதனை (மதியபோசன) நிகழ்வுகளிலும் பங்குபற்றுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

"ஸ்ரீசதாசிவம்"
380, கோயில் வீதி.
நல்லூர்.

மு.வைகுந்தவாசக் குருக்கள்
குடும்பத்தினர்.

(44182) (7.6.3)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி பாம் ஸ்கூலிற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய 2 மாடி வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 269 9960, 077 125 8025
(44176) (4.6.3)

## PERSONAL ENGLISH CLASSES

JAFFNA
- 077 945 7819 / 077 778 8455

URUMPIRAI
- 077 602 6841

FOR ALL STUDENTS

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

### Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Months)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

### Diploma In English (2 Months)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

### IELTS

Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 ½ Months

### BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

### A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

### EVENING & WEEKEND CLASSES STARTS ON

| 03.02.2014 | 08.02.2014 | 10.02.2014 |
|---|---|---|
| @11.30 - 2.30 Pm | @2.00 - 05.00 Pm | @3.00 - 05.00 Pm |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

## கட்டட நிர்மாணத்துறையில் அனுபவம் உள்ளவர்க்கும் அல்லாத அனைவருக்கும்

தொழில் அனுபவமுள்ள அனுபவமற்ற 18-32 வயதிற்கு உட்பட்ட அனைவருக்கும்

Singapore சென்று கை நிறைய சம்பாதிக்க சிறந்த தொழில் வாய்ப்பினை உறுதிசெய்துகொள்ள உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

சித்தி அடையும் அனைவருக்கும் SEC(K) சான்றிதழ்
சிங்கப்பூரில் தொழில்
100% நாங்கள் உத்தரவாதம்



சிங்கப்பூர் கட்டட நிர்மாணத்துறை அதிகார சபையின் நேரடி வழிநடத்தினூடாக (BCA) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் (SLBFE) அங்கீகாரத்துடன் சிங்கப்பூர் அரசு அங்கீகரித்துள்ள SEC (K) சான்றிதழுடன் 100% சிங்கப்பூர் தொழில் வாய்ப்புடன் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் பெற்று பயனடையலாம்
18 வருடம் சிங்கப்பூரில் தொழில் புரிய வாய்ப்புகள்
தேவையான தகுதிகள் உங்கள் உறுதியும் ஆர்வமும் மாத்திரமே

- மேசன் MASON
- டையிலிங் TILING
- பிளாஸ்டரிங் PLASTERING
- பைப் ஃபிட்டிங் PIPE FITTING
- நீர்க்குழாய் பொருத்துதல் PLUMBING
- வோட்டர் புறூபிங் WATER PROOFING
- கம்பி கட்டுதல் STEEL REINFORCEMENT
- டிம்பர் ஃபோம்வேர்க் TIMBER FORMWORK
- எலக்ட்ரிக்கல் வயரிங் ELECTRICAL WIRING INSTALLATION
- ஸ்ட்ரக்சுரல் ஸ்டீல் ஃபிட்டிங் STRUCTURAL STEEL FITTING

உங்களது JAYALATH chiu teng (Pvt) Ltd
Singapore நாட்டின் தலைசிறந்த முன்னணி கட்டுமானத்துறை நிறுவனமான Chie teng construction (Pvt) Ltd உடன் இணைந்து



நேர்காணல் தேதி - 09-02-2014
நேரம் - 9 a.m. to 5 p.m.
இடம் - வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்
REGISTRATION

உங்களுக்காக உங்களது யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு மற்றும் நேர்காணல்

உங்கள் வாழ்க்கையின் திருப்புமுனை.....
ஜயலத்
ஸூ-தென் லங்கா தனியார் நிறுவனம்

JAYALATH CHIU TENG LANKA PVT LTD

சந்தர்ப்பத்தைத்தவற விடாதீர்கள். மேலதிக விபரங்களுக்கு
011 7 503 503
www.jceti.com admin@jceti.com

இல 69. ஜயலத் கட்டிடம். புதிய களனிபாலம் வீதி. ஒருகொடவத்த. கொழும்பு 14.
[ களனிதிஸ்ஸ பவர் ஹவுஸ் முன்பாக ]

...தகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.02.2014 இல் ...ப்பெற்றது.